| சென்னை கடற்கரைப் பகுதி | சாந்தோம் |

❖ புகையிலை சாகுபடியை அறிமுகப்படுத்தினர்.

❖ கத்தோலிக்க கிறித்துவம் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளில் பரவியது.

❖ 1556–இல் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது. இதனால் 1563–இல் ஐரோப்பிய எழுத்தாளர் ஒருவர் **'இந்திய மருத்துவத் தாவரங்கள்'** என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார்.

❖ 17–ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசிய அதிகாரம் டச்சுவிடம் வீழ்ச்சியடைந்தது. 1739–இல் போர்ச்சுகீசிய அதிகாரம் கோவா, டையூ, டாமன் ஆகியவற்றுடன் நின்றுவிட்டது.

## டச்சுக்காரர்கள்

போர்ச்சுகீசியர்களைத் தொடர்ந்து இந்தியாவிற்கு வந்த டச்சுக்காரர்கள் கி.பி. 1602–இல் **நெதர்லாந்து ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி** என்ற நிறுவனத்தைத் தொடங்கி, கிழக்கிந்திய நாடுகளில் வர்த்தகம் செய்ய அரசிடமிருந்து அனுமதி பெற்றனர்.

தங்களின் வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினர். கி.பி. 1605–இல் போர்ச்சுகீசியரிடமிருந்து அம்பாய்னாவைக் கைப்பற்றி இந்தோனேஷியாவிலும், பின்னர் நாகப்பட்டினத்தைக் கைப்பற்றி தென்னிந்தியாவிலும் தங்களை வலிமைப்படுத்திக் கொண்டனர்.

முதலில் **பழவேற்காடு** (Pulicat) இவர்களின் தலைநகராக இருந்தது. பின்னர் 1690–இல் நாகப்பட்டினத்திற்கு மாற்றிக் கொண்டனர்.

**இவர்கள் வர்த்தகம் செய்த இந்தியப் பொருள்கள் :**

பட்டு, பருத்தி, இண்டிகோ, அரிசி, அபினி, கருப்பு மிளகு மற்றும் நறுமணப் பொருள்கள்.

**இவர்களின் வர்த்தக மையங்கள்**

பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம் பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சி.

**டச்சுக்காரர்களின் வீழ்ச்சி**

1623–இல் அம்பாய்னாவில் டச்சுக்காரர்கள் பத்து ஆங்கில வியாபாரிகள் மற்றும் ஒன்பது ஜாவனியர்களை (Javanese) ஈவு இரக்கமின்றி கொன்றனர். இதனால் டச்சு மற்றும் ஆங்கிலேயரிடையே பகைமை வளர்ந்தது. 1759–இல் நடைபெற்ற **பெடரா** போரில் ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களைத் தோற்கடித்தனர். இறுதி வீழ்ச்சியை எட்டிய டச்சு தனது குடியேற்றங்களை ஆங்கிலேயரிடம் 1795–இல் முழுமையாக இழந்தது.

**தமிழ்நாட்டில் டச்சுக்காரர்கள்**

1613–இல் பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் கட்டிய **கெல்டிரியா கோட்டை** டச்சு அதிகார மையத்தின் இருப்பிடமாக இருந்தது. மேலும் நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப்பேட்டை (Porto Novo), கடலூர் மற்றும் தேவனாம்பட்டினம் ஆகியன டச்சுக்காரர்களின் கோட்டைகளாக இருந்தன. பழவேற்காட்டிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு வைரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

## ஆங்கிலேயர்கள்

கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்வதற்கு லண்டன் வர்த்தகர்கள் நிறுவனத்திற்கு இங்கிலாந்து ராணி எலிசபெத் 1600 டிசம்பர் 31–இல் அனுமதிப் பட்டயத்தை வழங்கினார்.

அந்நிறுவனம் ஒரு கவர்னர் மற்றும் 24 இயக்குநர்களைக் கொண்டிருந்தது. 1608–இல் **ஜஹாங்கீர்** அவைக்கு ஆங்கிலேய மாலுமியான **வில்லியம் ஹாக்கின்ஸ்** சில சலுகைகளைப் பெறுவதற்காக வந்தார். அவர் சூரத் நகரில் ஒரு வணிக மையத்தை நிறுவ அனுமதி கோரினார். போர்ச்சுகீசியரின் தலையீட்டால் மன்னர் ஜஹாங்கீர் அனுமதி மறுத்தார்.

பின்னர் சூரத் அருகே நடைபெற்ற கடற்போரில் ஆங்கிலத் தளபதி **தாமஸ் பெஸ்ட்** போர்ச்சுகீசியரைத் தோற்கடித்தார். அதனால் மகிழ்வுற்ற ஜஹாங்கீர் சூரத்தில் வணிக மையத்தை நிறுவ அனுமதி வழங்கினார். 1613–இல் ஆங்கிலேயர் சூரத்தில் தங்களது முதல் வணிக மையத்தை நிறுவினர்.

1614–இல் கேப்டன் **நிக்கோலஸ் டவுண்டன்** போர்ச்சுகீசியரைத் தோற்கடித்தார். இதனால் முகலாயர் அவையில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரித்தது.

1615–இல் இங்கிலாந்து மன்னர் முதலாம் ஜேம்சினால், ஜஹாங்கீர் அவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட **சர் தாமஸ் ரோ** ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கியிருந்து மன்னரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார். இவர் இங்கிலாந்து திரும்புவதற்கு



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



முன் ஆங்கிலேயர்கள் **ஆக்ரா, அகமதாபாத்** மற்றும் **புரோச்** ஆகிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினர்.

வங்காள விரிகுடாவில் உள்ள மசூலிப்பட்டினத்தில் தங்கள் வணிக மையத்தை நிறுவினர். இது கோல்கொண்டா அரசின் முக்கியத் துறைமுகமாகும்.

1639–இல் **பிரான்சிஸ்டே** என்ற ஆங்கில வணிகர் சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கரிடமிருந்து மெட்ராஸை குத்தகைக்குப் பெற்றார். மெட்ராஸில் **புனித ஜார்ஜ் கோட்டையை** ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி கட்டியது. இது ஆங்கிலேயரால் கட்டப்பட்ட முதல் கோட்டையாகவும், கிழக்குப் பகுதி முழுவதுக்குமான தலைமையிடமாகவும் விளங்கியது.

இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுகீசிய இளவரசி காதரினை திருமணம் செய்து கொண்டதால், திருமண சீராகப் பெற்ற பம்பாய் தீவை, ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆண்டுக்கு 10 பவுண்டுகள் வீதம் 1668–இல் குத்தகைக்கு எடுத்தது.

1690–இல் **சுதாநுதி** என்ற இடத்தில் **ஜாப் சார்னாக்** என்பவரால் ஒரு வர்த்தக மையம் நிறுவப்பட்டது. 1698–இல் **சுதாநுதி, காளிகட்டம் கோவிந்தபூர்** ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றது. இந்த மூன்று கிராமங்களும் சேர்ந்து பின்னாளில் கல்கத்தா நகரமாக வளர்ச்சி பெற்றது. 1696–இல் சுதாநுதியில் கட்டப்பட்ட கோட்டை 1700–இல் **வில்லியம் கோட்டை** எனப்பட்டது.

பிளாசிப்போர் (1757) மற்றும் பக்சார் போர் (1764) ஆகியவற்றிற்குப் பிறகு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி, அரசியல் சக்தியாக மாறி 1858 வரை இந்தியாவை ஆட்சி செய்தது. 1858க்குப் பிறகு இந்தியா ஆங்கில அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

### டேனியர்கள்

டென்மார்க் அரசர் நான்காம் கிரிஸ்டியன் 1616 மார்ச் 17–இல் வெளியிட்ட பட்டயத்தின் மூலம் உருவாக்கப்பட்ட டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனம் 1620–இல் **தரங்கம்பாடி** (தமிழ்நாடு) 1676–இல் **செராம்பூர்** (வங்காளம்) ஆகிய இடங்களில் தங்களது குடியேற்றங்களை நிறுவியது. டேனியர்களின் இந்தியத் தலைமையிடமாக செராம்பூர் இருந்தது. 1845–இல் டேனியர்கள் இந்தியாவிலிருந்த தங்கள் குடியேற்றங்கள் அனைத்தையும் ஆங்கில அரசுக்கு விற்றுவிட்டனர்.

டேனியர்கள் தரங்கம்பாடியை **டானஸ்பெர்க்** என அழைத்தனர். டென்மார்க்கின் அரசரால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட சீகன்பால்கு என்பவர் தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினார்.

### பிரெஞ்சு

1664–இல் பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் மன்னர் 14–ஆம் லூயியின் அமைச்சரான **கால்பர்ட்** என்பவரால் உருவாக்கப்பட்டது. 1667–இல் **பிரான்காய்ஸ் கரோன்** தலைமையின் கீழ் ஒரு குழு இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டது. **கரோன்** இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை **சூரத்தில்** நிறுவினார். 1669–இல் **மார்காரா** என்பவர் கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று **மசூலிப்பட்டினத்தில்** இரண்டாவது வர்த்தக மையத்தை நிறுவினார்.

1673–இல் பீஜப்பூர் ஆட்சியாளர் ஷெர்கான் லோடியினால் வழங்கப்பட்ட மானியத்தின் கீழ் **மார்ட்டின்** என்பவர் பாண்டிச்சேரியில் குடியேற்றத்தை நிறுவினார். பாண்டிச்சேரியில் பிரான்காய்ஸ் மார்ட்டின் என்பவரால் **செயிண்ட் லூயிஸ் கோட்டை** கட்டப்பட்டது.

வங்காளத்தின் முகலாய ஆளுநராக இருந்த செயிஸ்டகானின் அனுமதியுடன் கல்கத்தாவிற்கு அருகே **சந்திரநாகூர்** என்ற நகரை பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி 1673–இல் நிர்மாணித்தது.

பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் கடற்கரைப் பகுதிகளான **மாஹி, காரைக்கால், பாலசோர்** மற்றும் **காசிம் பசார்** போன்ற இடங்களில் தங்களது வர்த்தக மையத்தை நிறுவியது. 1742–இல் இந்நிறுவனத்தின் ஆளுநராக **ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே** நியமனம் செய்யப்பட்டார். அவருக்குப் பின் **டூமாஸ்** என்பவர் பாண்டிச்சேரியின் பிரெஞ்சு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை புரிந்த ஐரோப்பிய நாடுகளுள் **பிரான்சு** கடைசி நாடாகும்.

பிரெஞ்சுக்காரர்கள் வர்த்தகத்தைப் புறக்கணித்து இந்தியா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுடன் போரில் ஈடுபட்டனர். ஆங்கிலேயருடன் நடைபெற்ற மூன்று கர்நாடகப் போர்களினால் பிரான்சு நலிவடைந்தது.

ஆங்கில மற்றும் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனிகளின் வெற்றியைக் கண்டு 1731–இல் **ஜோதன் பர்க்** என்பவரால் சுவீடன் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டது.

## பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார் ?**
   A) வாஸ்கோடகாமா
   B) பார்த்தலோமிய டயஸ்
   C) அல்போன்சோ–டி–அல்புகர்க்
   D) அல்மெய்டா
2. **பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது ?**
   A) நெதர்லாந்து (டச்சு) B) போர்ச்சுகல்
   C) பிரான்ஸ் D) பிரிட்டன்
3. **1453–ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது ?**
   A) பிரான்ஸ் B) துருக்கி
   C) நெதர்லாந்து (டச்சு) D) பிரிட்டன்
4. **சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ................ நாட்டைச் சேர்ந்தவர்.**
   A) போர்ச்சுகல் B) ஸ்பெயின்
   C) இங்கிலாந்து D) பிரான்ஸ்
5. **இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை**
   A) வில்லியம் கோட்டை B) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
   C) ஆக்ரா கோட்டை D) டேவிட் கோட்டை
6. **பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்**
   A) ஆங்கிலேயர்கள் B) பிரெஞ்சுக்காரர்கள்
   C) டேனியர்கள் D) போர்ச்சுக்கீசியர்கள்
7. **தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ............ வர்த்தக மையமாக இருந்தது.**
   A) போர்ச்சுக்கீசியர்கள் B) ஆங்கிலேயர்கள்
   C) பிரெஞ்சுக்காரர்கள் D) டேனியர்கள்
8. **பொருத்துக.**

| | |
|---|---|
| a) டச்சுக்காரர்கள் | 1. 1664 |
| b) ஆங்கிலேயர்கள் | 2. 1602 |
| c) டேனியர்கள் | 3. 1600 |
| d) பிரெஞ்சுக்காரர்கள் | 4. 1616 |



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



பல்கலைக்கழகங்கள் விஹாரங்களின் தொடர்பால் மேம்படுத்தப்பட்டன. பனாரஸ் மற்றும் காஞ்சி ஆகிய இடங்களில் இருந்த பல்கலைக்கழகங்கள் கோயில்களின் தொடர்பால் மேம்படுத்தப்பட்டன.

மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டங்களை வடிவமைப்பது வரை அனைத்திலும் ஆசிரியரின் பங்கு முக்கியமானதாக இருந்தது. மாணவர்களின் திறனில் ஆசிரியர் திருப்தி அடையும் போது மட்டுமே அவர்களின் கல்வி நிறைவடைந்ததாகக் கருதப்பட்டது.

மாணவர்கள் எதைக் கற்றுக்கொள்ள ஆர்வமாக இருந்தனரோ அதையே ஆசிரியரும் கற்றுக் கொடுத்தார். விவாதங்கள் மற்றும் கலந்தாலோசித்தல் ஆகியன கற்பித்தலின் அடிப்படையான வழிமுறைகளாக இருந்தன.

### நாளந்தா பல்கலைக்கழகம்

பண்டையக் காலத்தில் நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி. 5 முதல் 12–ஆம் நூற்றாண்டு வரை கற்றலின் மையமாக இருந்தது. தற்போதைய பீஹாரிலுள்ள ராஜகிருகத்தில் அமைந்துள்ள நாளந்தா பல்கலைக்கழகம் உலகின் பழைமையான பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகும். நாளந்தா மகா விஹாராவின் இடிபாடுகளை ஐ.நா. சபையின் யுனெஸ்கோ நிறுவனம் உலக பாரம்பரியத் தளமாக அறிவித்துள்ளது. தற்போது நாளந்தா பல்கலைக்கழகம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## இடைக்கால இந்தியாவில் கல்வி

11–ஆம் நூற்றாண்டில் (இடைக்காலம்) முஸ்லீம் ஆட்சியாளர்கள் தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளை நிறுவினர். அக்காலத்தில் இந்திய–இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கு இடையே சிறந்த தொடர்பு இருந்ததால் இறையியல், சமயம், தத்துவம், ஓவியம், நுண்கலை, கட்டடக்கலை, கணிதம், மருத்துவம் மற்றும் வானியல் துறைகள் புதிய கோணத்தில் மேம்பாடு அடைந்தன.

முஸ்லீம் ஆட்சியாளர்கள் நூலகங்கள் மற்றும் இலக்கிய சங்கங்களை ஏற்படுத்தி நகர்ப்புற கல்வியை ஊக்குவித்தனர். அவர்கள் நிறுவிய தொடக்கப்பள்ளிகள் **மக்தப் (Maktab)** எனப்பட்டன. இடைநிலைப் பள்ளிகள் **மதரசா (Madrasa)** எனப்பட்டன.

சுல்தான்கள் மற்றும் பிரபுக்களால் பல மதரசாக்கள் நிறுவப்பட்டன. மதரசாக்களின் முக்கிய நோக்கங்கள் குடிமைப் பணிக்கான பயிற்சி அளிப்பதும், கல்வி அளிப்பதும் ஆகும். டெல்லியில் மதரசாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் **இல்டுமிஷ்** ஆவார்.

இடைக்கால இந்தியாவில் கல்விமுறையானது உலோமாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் காலங்களில் கல்வியானது சமயம் சார்ந்து இருந்தாலும் மருத்துவம், அரபு இலக்கியம் மற்றும் இலக்கணம், தத்துவம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன. இடைக்காலம் மற்றும் நவீன கால முற்பகுதியில் அரபு மற்றும் மத்திய ஆசிய மக்கள் இஸ்லாமிய அடிப்படையிலான கல்வி முறைகளைக் கொண்டு வந்தனர் என வரலாறு கூறுகிறது. இடைக்கால இந்தியாவில் பெண்கல்வி பரவலாகக் காணப்பட்டது.

ஜெய்பூரைச் சேர்ந்த **ராஜாஜெய்சிங்** அறிவியல் பாடங்கள் கற்பதை ஊக்குவித்தார். டெல்லியிலுள்ள கியாசுதீன் மதரசா மற்றும் ஷாஜகானாபாத்தில் உள்ள மௌலானா சத்ருதீன் மதரசா ஆகியவை தனிநபர்களால் உருவாக்கப்பட்டவை.

இடைக்காலத்தில் பல சமய மடங்களும் மடாலயங்களும் கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் உள்ள அஹோபில மடத்தில் **ஸ்ரீஇராமானுஜர்** கல்விக்காக தன்னுடைய குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். சமணப் பள்ளிகள் மற்றும் பௌத்த விஹாரங்கள் கல்விக்காக முக்கியப் பங்காற்றியுள்ளன. அவற்றில் அனைத்துத் துறைசார்ந்த நூல்கள் அடங்கிய நூலகங்களும் இருந்தன.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஆங்கிலேயர்கள், இந்தியாவில் ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தினர். சமயப்பரப்பு குழுவினரின் வருகையால் இந்தியாவின் மேற்கத்திய கல்விமுறை முன்னேற்றமடைந்தது.

### நவீன கல்விமுறை

இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பியர் போர்ச்சுகீசியர்கள் ஆவர். இயேசு சங்கத்தின் உறுப்பினரான **பிரான்சிஸ் சேவியர்** கொச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார். 1575–இல் கோவாவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரியில் கிறித்தவம், தர்க்கம், இலக்கணம் மற்றும் இசை ஆகியன கற்பிக்கப்பட்டு பட்டங்கள் வழங்கப்பட்டன. **ஜான் கிர்னான்டர்** என்பவர் நிறுவிய **இவாஞ்சிலிஸ்ட்க்** என்ற அமைப்பானது, கிறித்தவர் அல்லாத குழந்தைகளுக்கு கல்வியை வழங்கிய முதல் சமயப்பரப்பு அமைப்பாகும். 1812–இல் **C.S. ஜான்** என்பவர் தரங்கம்பாடியில் 20 இலவசப் பள்ளிகளை நிறுவினார்.

**சீகன்பால்கு** மற்றும் **பிளட்சாம்** ஆகிய ஜெர்மன் பிஷப்புகள் திருவிதாங்கூரில் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி கல்லூரியையும் தொடங்கினர். கி.பி. 1600–இல் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் வருகைக்குப் பின்னர் ஆங்கில கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்கத்தாவின் முதல் பேராயரான **டாக்டர் மிடில்டன்** மிஷினரி கல்லூரி ஒன்றை கல்கத்தாவில் தொடங்கினார். பின்னர் இது பிஷப் கல்லூரி என்று அழைக்கப்பட்டது.

**மவுண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன்** என்பவர் வட்டார மொழிக் கல்வியினை தீவிரமாக முன்மொழிந்தார். ஆனால், 1827–இல் அவர் ஓய்வுபெற்றபின், அவரது ஆர்வலர்கள் நிதி சேகரித்து ஆங்கில கல்வியை பம்பாயில் நிறுவினர். அது 'எல்பின்ஸ்டன் கல்லூரி' எனப் பெயரிடப்பட்டது.

## ஆங்கிலேயரின் ஆட்சியில் கல்வி

ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் இந்தியக் கல்வியின் வரலாறு நான்கு கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

### 1. ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கம் முதல் 1813 வரையிலான காலம்

தொடக்ககாலத்தில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி, கல்விக்கு முக்கியத்துவம் தரவில்லை. 1813–இல் கிழக்கிந்திய நிறுவனம் இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை உறுதிப்படுத்த நிர்பந்திக்கப்பட்டது. 1813–ஆம் ஆண்டின் பட்டயச்சட்டம், இந்தியாவில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் 1 இலட்ச ரூபாய் வழங்குவதற்கான ஏற்பாட்டை செய்தது. சமயபரப்புக் குழுவினரை தவிர, வங்காளத்தைச் சேர்ந்த இராஜாராம் மோகன்ராய், மதராஸின் பச்சையப்பர், டெல்லியைச் சேர்ந்த பிரேசர் போன்றோர் கல்விக்காக தங்களின் பங்களிப்பைச் செய்தனர்.

### 2. 1813 முதல் 1853 வரையிலான காலம்

இக்காலகட்டமானது கல்விக் கொள்கை பயிற்றுமொழி, கல்வியைப் பரப்பும் முறை ஆகிய பிரச்சனைகளின் மிகப்பெரிய கருத்து வேறுபாடுகள் கொண்ட காலமாகக் கருதப்பட்டது. கீழ்திசைவாதிகள் கீழ்திசை மொழிகளைப் பாதுகாக்கவும், சமஸ்கிருதம் மற்றும் பாரசீக மொழிகளைப் பயிற்று மொழியாக்கவும் விரும்பினர்.

ஆங்கில சார்புவாதிகள் ஆங்கில மொழி மூலம் மேற்கத்திய அறிவை பரப்புவதை ஆதரித்தனர்.

மற்றொரு பிரிவினர் இந்திய மொழிகளே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்றனர். இந்தக் கருத்து வேறுபாடுகள் 1835–இல் மெக்காலேயின் கல்விக் கொள்கை மூலம் ஓரளவு ஓய்ந்தன.

ஒவ்வொரு மாகாணமும் அதற்கேற்ற கல்விக் கொள்கையைப் பின்பற்ற அனுமதிக்கப்பட்ட போதிலும் 1854–ஆம் ஆண்டு வரை கருத்து வேறுபாடுகள் தொடர்ந்தன.

### 3. 1854 முதல் 1920 வரையிலான காலம்

1854–இல் வெளியிடப்பட்ட சார்லஸ் வுட் கல்வி அறிக்கை இந்தியாவில் கல்வியின் **'மகாசாசனம்'** எனப்படுகிறது. ஏனெனில் அனைத்து நிலைகளில் உள்ள மக்களுக்கும் கல்வியை வழங்கக்கூடிய, ஆங்கில கல்விக்கொள்கையின் முதல் அறிக்கை இதுவாகும்.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



1882–இல் ஏற்படுத்தப்பட்ட **ஹண்டர் கல்விக் குழு** தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது.

### 4. 1921 முதல் 1947 வரையிலான காலம்

1935–ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் முழுமையான மாகாண சுயாட்சியை அறிமுகப்படுத்தி, மாகாண கல்வி அமைச்சர்களின் நிலையை வலுப்படுத்தியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் கல்வி மேம்பாட்டிற்கான மிகமுக்கியத் திட்டமான **சார்ஜண்ட் அறிக்கை** 1944–இல் தயாரிக்கப்பட்டது.

**வார்தா கல்வித்திட்டம் (1937)**

இத்திட்டத்தை மகாத்மா காந்தியடிகள் உருவாக்கினார். இத்திட்டத்தின் மூலம் அஹிம்சைக் கொள்கையை எதிர்கால குடிமக்களிடையே மேம்படுத்த அவர் விரும்பினார்.

## சுதந்திர இந்தியாவின் கல்வி வளர்ச்சி

1948–இல் பல்கலைக்கழக கல்வி குறித்த அறிக்கையைத் தயாரிக்க டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி உயர்கல்வியின் தரத்தை நிர்ணயிக்க பல்கலைக்கழக மானியக்குழு அமைக்கப்பட்டது.

1952–53–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இடைநிலைக் கல்விக்குழு, கல்வியில் புதிய அமைப்பு முறைகளையும் பாடப்புத்தகங்களின் தரம், பாடத்திட்டம், கற்பித்தல் முறைகளில் முன்னேற்றங்களில் பரிந்துரைத்தது.

1964–இல் இந்திய அரசு **D.S. கோத்தாரி** தலைமையில் ஒரு கல்விக் குழுவை நியமித்தது. அக்குழு 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வியையும் நாடு முழுவதும் ஒரேமாதிரியான 10+2+3 கல்வி அமைப்பையும் பரிந்துரை செய்தது.

## தேசியக் கல்விக் கொள்கை

### 1968–ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை

முதல் தேசியக் கல்விக் கொள்கையான இது பொதுவான குடியுரிமை, கலாச்சாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

### 1986–ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கை

இது நாட்டில் விளிம்பு நிலை மக்களுக்கான சம வாய்ப்புகள், உதவித் தொகைகள், வயது வந்தோர் கல்வி, திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் மூலம் கிராமப்புற இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதலை வலியுறுத்தியது. தொடக்கப் பள்ளிகளை தேசிய அளவில் மேம்படுத்துவதற்காக **கரும்பலகைத் திட்டத்தை** அறிமுகப்படுத்தியது.

### 1992–ஆம் ஆண்டு திருத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை

இது தேசியக் கலைத் திட்டத்தை வடிவமைத்தல், பணியிடைக் கல்வியை வலியுறுத்துதல், வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் இடைநிலைக் கல்வி நிலையில் மதிப்பீட்டு முறைகளை ஒழுங்குப்படுத்துதல் ஆகியவற்றைப் பரிந்துரைத்தது.

> 1976–ஆம் ஆண்டு டிசம்பர் வரை கல்வித்துறை மாநிலப் பட்டியலில் இருந்தது. ஆனால் தற்போது பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

### அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA-Sarva Shiksha Abhiyan)

2000–01 ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தின் முதன்மைத் திட்டம் அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வியைப் பெறுவதாகும்.

**இலவச மற்றும் கட்டாய கல்வி (RTE-2009) சட்டத்தின்** விதிகளை அமல்படுத்தும் அமைப்பாக **RTE** சட்டம் (கல்வி உரிமைச் சட்டம்) 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழி செய்கிறது.

### SSA–யின் முக்கியச் செயல்பாடுகள்

மதிய உணவு வழங்குதல், மாணவர்களுக்கான உதவி வழங்குதல், பள்ளி வேளாண்மைக் குழு அமைத்தல், வகுப்பறைக்கான கற்றல் – கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல்.

### அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA-Rastriya Madhyamik Shiksha Abhiyan)

11–ஆம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டமானது இடைநிலைக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் நிதி உதவித் திட்டம் ஆகும். 15 முதல் 16 வயதிற்குட்பட்ட இளம் மாணவர்கள் அனைவருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் இடைநிலைக் கல்வியை அளிப்பதே இதன் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் அறிவியல் ஆய்வகம், நூலகங்கள், ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி, கணினி வழிக் கல்வி, பள்ளி இணைச் செயல்பாடுகள் மற்றும் கற்றல் – கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவற்றை இந்திய அரசு, பள்ளிகளுக்கு வழங்குகிறது.

2018–2019–ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கை, பள்ளிக் கல்வியினை முன்பருவக் கல்வி முதல் 12–ஆம் வகுப்பு வரை எவ்வித பாகுபாடும் இன்றி வழங்குவதற்கு முன்மொழிந்தது.

### சமக்ர சிகஷ்ா (Samagra Siksha)

இது **SSA** மற்றும் **RMSA** ஆகிய திட்டங்களை உள்ளடக்கியது, சமமான வாய்ப்புகள் மற்றும் சமமான கற்றல் விளைவுகளை அளவிடுதல் போன்ற செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி

பண்டையக் காலத்தில் பள்ளிக்கூடங்கள் 'பள்ளி' என்று அழைக்கப்பட்டன. ஆசிரியர்கள் 'கணக்காயர்' என்று அழைக்கப்பட்டனர்.

**பல்லவர் காலம்**

பல்லவர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் **கடிகை** எனப்பட்டன. இந்நிறுவனங்களுக்கு பல்லவ மன்னர்கள் மானியங்களை வழங்கினர் சைவ மற்றும் வைணவ மடங்கள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உணவு மற்றும் உறைவிட வசதியை வழங்கின.

யுவான்–சுவாங் என்ற சீனப் பயணியின் குறிப்புகளில் இருந்து காஞ்சி நகரம் கற்றலின் மையமாக விளங்கியது என்பதையும் காஞ்சியில் இருந்த புத்தமையம் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

**சோழர் காலம்**

சோழர்களின் காலத்தில் தமிழ்வழிக் கல்வியானது கோயில் மற்றும் சமயத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது.

**சோழர்கால கல்வெட்டுகள் அளிக்கும் செய்திகள்**

- மக்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டது.
- கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தத்துவத்தின் அடிப்படையில் இருந்தன.
- ஆசிரியர்களின் தகுதிகள், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு, பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் ஆகிய தகவல்கள் இருந்தன.
- இராஜராஜன் சதுர்வேதி மங்கலம் புகழ்பெற்ற வேதக் கல்லூரியின் இருப்பிடமாக இருந்தது. இது தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ளது.
- திருபுவனையில் (பாண்டிச்சேரி அருகில்) வேதக்கல்லூரி ஒன்று இருந்தது.
- திருவிடைக்காளை கல்வெட்டு, நூலகம் பற்றி குறிப்பிடுகிறது.
- வீரராஜேந்திர சோழனின் திருவாவடுதுறைக் கல்வெட்டு மருத்துவப்பள்ளி பற்றி குறிப்பிடுகிறது.

**பாண்டியர்காலம்**

பாண்டிய மன்னர்கள் சமஸ்கிருதத்தை ஆதரித்ததை அவர்களின் செப்புத் தகடுகளின் மூலம் அறிய முடிகிறது. பாண்டியர் காலத்தில் கல்வி நிலையங்கள் **கடிகை, சாலை, வித்யாசாதனம்** எனப்பட்டன.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் **'சாலபோகம்'** எனப்பட்டன. காந்தளூர் சாலையில் புகழ்பெற்ற கல்லூரி இருந்தது.

**விஜயநகர ஆட்சிக் காலம்**

விஜயநகர ஆட்சியில் பல கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாயக்கர்களின் ஆட்சியில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. வீரப்ப நாயக்கர் காலத்தில் மதுரைக்கு வருகை புரிந்த பெர்னாண்டஸ், அங்கு ஒரு தொடக்கப்பள்ளியை நிறுவினார்.

**மராத்தியர் ஆட்சிக் காலம்**

மராத்திய ஆட்சியாளர் இரண்டாம் சரபோஜி பண்டைய ஆவணங்களை சேகரித்து தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் பாதுகாத்தார். அவர் தஞ்சாவூரில் தேவநாகரி எழுத்து முறையிலான அச்சுக்கூடத்தை அமைத்திருந்தார்.

**நவீன கால கல்வி**

மதராஸ் மாகாணத்தில் மேற்கத்திய கல்வியை அறிமுகப்படுத்தியதில் மிகப்பெரிய பங்கு மதராஸ் மாகாண ஆளுநராக இருந்த **சர் தாமஸ் மன்றோ** (1820–27) அவர்களைச் சாரும். அவர் கல்விநிலை குறித்து அறிவதற்காக புள்ளி விவரங்களைச் சேகரிக்க ஒரு குழுவினை நியமித்தார். மன்றோவின் கல்விக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு முதன்மைப் பள்ளிகளை உருவாக்குவதற்கு பரிந்துரை செய்தது. அவை மாவட்ட ஆட்சியர் மற்றும் தாசில்தார் பள்ளிகள் ஆகும்.

1835–இல் வில்லியம் பெண்டிங் பிரபு மேற்கத்திய கல்வி முறையை அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்.

1854–இல் சர் சார்லஸ் வுட் கல்வி அறிக்கை மதராஸ் மாகாணத்தில் பொது வழிகாட்டும் துறையை (Department of Public Instruction) ஏற்படுத்தியது.

1857–இல் சென்னை பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இது ஆங்கிலேயே ஆட்சியில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் ஆகும்.

1882–இல் நிறைவேற்றப்பட்ட உள்ளூர் வாரிய சட்டத்தின்மூலம் புதிய பள்ளிகளைத் திறக்கவும் அரசிடமிருந்து மானியங்களைப் பெறவும் வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

1938–இல் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பாடம் தவிர ஏனைய பாடங்கள் தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்பட்டன.

1929–இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரத்தில் நிறுவப்பட்டது.

**சுதந்திரத்திற்குப் பின் தமிழகத்தில் கல்வி**

- 1964–65–இல் இடைநிலைக் கல்வி அளவில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1975–இல் காந்தி கிராம கிராமிய கல்லூரி நிறுவப்பட்டது.
- 1956–இல் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் இது 1982–இல் சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டது.
- கல்லூரி சென்று படிக்க முடியாதவர்களுக்காக தொலைதூரக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

## பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வேதம் என்ற சொல் .......... லிருந்து வந்தது.**

A) சமஸ்கிருதம் B) இலத்தீன்
C) பிராகிருதம் D) பாலி

**2. பின்வருவனவற்றுள் எது பண்டையக் காலத்தில் கற்றலுக்கான முக்கிய மையமாக இருந்தது ?**

A) குருகுலம் B) விகாரங்கள்
C) பள்ளிகள் D) இவையனைத்தும்

**3. இந்தியாவின் மிகப் பழமையான நாளந்தா பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்**

A) உத்திரப்பிரதேசம் B) மகாராஷ்டிரம்
C) பீகார் D) பஞ்சாப்

**4. தட்சசீலத்தை யுனெஸ்கோ அமைப்பு உலக பாரம்பரிய தளமாக எப்போது அறிவித்தது ?**

A) 1970 B) 1975
C) 1980 D) 1985

**5. இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பிய நாடு எது ?**

A) இங்கிலாந்து B) டென்மார்க்
C) பிரான்சு D) போர்ச்சுக்கல்

**6. இந்தியாவில் கல்வி மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் மானியமாக 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டினை செய்த சாசன சட்டம் எது ?**

A) 1813 ஆம் ஆண்டு சாசன சட்டம்
B) 1833 ஆம் ஆண்டு சாசன சட்டம்
C) 1853 ஆம் ஆண்டு சாசன சட்டம்
D) 1858 ஆம் ஆண்டுச் சட்டம்

**7. பின்வரும் குழுக்களில் எந்தக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினை அமைக்கப் பரிந்துரைத்தது ?**

A) சார்ஜண்ட் அறிக்கை, 1944
B) இராதாகிருஷ்ணன் கல்விக்குழு, 1948
C) கோத்தாரி கல்விக்குழு, 1964
D) தேசியக் கல்விக் கொள்கை, 1968

**8. இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ?**

A) 1992 B) 2009
C) 1986 D) 1968

**9. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | இட்சிங் | 1. | சரஸ்வதி மகால் |
| b) | பிரான்சிஸ் சேவியர் | 2. | இந்திய கல்வியின் மகா சாசனம் |
| c) | உட்ஸ் கல்வி அறிக்கை | 3. | மதராஸில் மேற்கத்திய கல்வி |
| d) | இரண்டாம் சரபோஜி | 4. | கொச்சி பல்கலைக்கழகம் |
| e) | சர் தாமஸ் மன்றோ | 5. | சீன அறிஞர் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 5 | 4 | 2 | 1 | 3 |
| B) | 4 | 2 | 1 | 3 | 5 |
| C) | 2 | 1 | 3 | 5 | 4 |
| D) | 1 | 3 | 5 | 4 | 2 |

**10. கீழ்க்காணும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையைக் குறிப்பிடவும்.**

I. நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி. (பொ.ஆ). ஐந்தாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

II. பண்டைய இந்தியாவில் மாணவர்களை தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டத்தினை வடிவமைப்பது வரை அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்கள் முழுமையான சுயாட்சி கொண்டிருந்தனர்.

III. பண்டையக் காலத்தில் ஆசிரியர்கள் கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர்.

IV. சோழர்கள் காலத்தில் புகழ்பெற்ற கல்லூரியாக காந்தளூர் சாலை இருந்தது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**சரியான விடையளி :**

A) I மற்றும் II சரி B) II மற்றும் IV சரி
C) III மற்றும் IV சரி D) I, II மற்றும் III சரி

11. **சரியான இணையைக் காண்க.**
A) மக்தப்கள் - இடைநிலைப் பள்ளி
B) 1835–ஆம் ஆண்டின் மெக்காலேயின் குறிப்பு - ஆங்கிலக் கல்வி
C) கரும்பலகைத் திட்டம் - இடைநிலைக் கல்வி குழு
D) சாலபோகம் - கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள்

12. **மடாலயங்கள் மற்றும் விகாரங்கள் மூலமாக ........... அறிஞர்கள் தங்கள் கல்விப் பணியை மேற்கொண்டனர்**
A) புத்த B) சமண
C) ஜொராஸ்டிரிய D) கிறித்துவ

13. **.......... இந்தியாவில் பெண்கள் கல்வி அதிகமாக இருந்தது.**
A) நவீன கால
B) இடைக்கால
C) வரலாற்றுக்கு முந்தைய கால
D) இவற்றில் எதுவுமில்லை

14. **.......... அஹோபில மடாலயம் கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்டதாகும்.**
A) வேலூர் B) கோயம்புத்தூர்
C) ஸ்ரீரங்கம் D) நீலகிரி

15. **சமணப் பள்ளிகள் மற்றும் புத்த விகாரங்கள் ஆகியவை எப்போதும் மக்களுக்கு .......... வழங்குவதில் முக்கியப் பங்கு ஆற்றின.**
A) கல்வி B) தொழில்
C) சமய விழிப்புணர்ச்சி D) நலவாழ்வு

16. **.......... ஐ சேர்ந்த ராஜாஜெய்சிங், அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்தார்.**
A) ஜோத்பூர் B) ஜெய்பூர்
C) பஞ்சாப் D) லக்னோ

17. **1812 ஆம் ஆண்டு Dr.C.S ஜான் என்பவர் .......... யில் 20 இலவச பள்ளிகளை நிறுவினார்.**
A) தரங்கம்பாடி B) டாமன்
C) மசூலிப்பட்டினம் D) சின்சரா

18. **இரண்டு ஜெர்மன் பிஷப்புகள் சீகன்பால்கு மற்றும் பிளட்சாம் ஆகியோர் ..........ல் ஆசிரியர்களுக்கான பள்ளிகள் மற்றும் பயிற்சி கல்லூரியைத் தொடங்கினர்.**
A) மைசூர் B) மும்பை
C) சூரத் D) திருவிதாங்கூர்

19. **Dr.மிடில்டன் என்பவர் ஒரு மிஷினரி கல்லூரியை ..........இல் தொடங்கினார்.**
A) மும்பை B) சென்னை
C) கொல்கத்தா D) டெல்லி

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (A) | 2. (A) | 3. (C) | 4. (C) | 5. (D) | 6. (A) | 7. (B) | 8. (C) | 9. (A) | 10. (D) |
| 11. (B) | 12. (A) | 13. (B) | 14. (C) | 15. (A) | 16. (B) | 17. (A) | 18. (D) | 19. (C) | |

# அலகு - 6 இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

விவசாயமும் கைவினைப் பொருள்கள் தயாரிப்பும் கலந்த கலவையாகவே இந்தியப் பாரம்பரிய பொருளாதாரம் காணப்பட்டது.

### அயல்நாட்டவரின் கூற்றுகள்

**எட்வர்ட் பெயின்ஸ் :** "பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா. அது உண்மையான வரலாற்றுக் காலத்திற்கு முன்பே செழித்தோங்கி இருந்தது."

**பெர்னியர் :** இவர் முகலாயப் பேரரசர் ஷாஜகான் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். "இந்தியாவில் நம்பமுடியாத எண்ணிக்கையில் பொருள்கள் உற்பத்தியாகின்றன" என்று கூறியுள்ளார்.

**டவேர்னியர் :** பிரெஞ்சுநாட்டு பயணியான இவர் இந்தியாவிலுள்ள மயிலாசனம், பட்டு மற்றும் தங்கத்தினாலான தரைவிரிப்புகள், சிறிய அளவிலான சிற்ப வேலைபாடுகள் வியப்பிற்குரியன என்று கூறியுள்ளார்.

### இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருள்கள்

நெசவு, மரவேலை, தந்தவேலை, மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், வாசனை மரங்களில் வேலைப்பாடுகள் செய்தல், உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல் ஆகிய பாரம்பரிய தொழில்களில் இந்தியா புகழ்பெற்று விளங்கியது. கிராமப்புற கைவினைஞர்களான பானை தயாரிப்பாளர்கள், நெசவாளர்கள், உலோக வேலை செய்வோர் ஆகியோர் வீட்டுப் பயன்பாட்டிற்கான பொருள்களை உற்பத்தி செய்தனர்.

பருத்தித் துணிகள், மஸ்லின் துணிகள், கம்பளி, பட்டு மற்றும் உலோகப் பொருள்கள் ஆகியவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காக உற்பத்தி செய்யப்பட்டன.

நெசவாளர்கள், தையல்காரர்கள் மற்றும் சாய தொழிலாளர்கள் பற்றி பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மணி தயாரிக்கப் பயன்படும் உலோகமான வெண்கலத்திற்கு **சௌராஷ்டிரா** பெயர் பெற்றது. தகர தொழிற்சாலைக்கு **வங்காளம்** புகழ் பெற்றது. மஸ்லின் ஆடைகளுக்கு **டாக்கா** புகழ் பெற்றது.

கி.மு. 2000 ஆண்டுகள் பழைமையான எகிப்திய கல்லறைகளில் உள்ள மம்மிகள் இந்திய மஸ்லின் ஆடைகள் கொண்டு சுற்றப்பட்டிருந்தது குறித்து கண்டறியப்பட்டுள்ளது. 50 மீட்டர் அளவுடைய மஸ்லின் துணியை ஒரு தீப்பெட்டிக்குள் அடக்கிவிடும் அளவிற்கு அது மெல்லிய துணியாகும்.

### இந்தியத் தொழிலகங்களின் வீழ்ச்சி

#### ஆட்சியாளர்களின் ஆதரவின்மை

இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சியில் காலனித்துவ பொருளாதாரம் மேலோங்கியது. அரசவையில் நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்ட பொருள்களைக் காட்சிப்படுத்துவது குறைந்துவிட்டதால் பூர்வீக ஆட்சியாளர்களால் ஆதரிக்கப்பட்ட கைவினைஞர்கள் தங்கள் வேலைகளை இழந்தனர்.

#### இயந்திரங்களின் வருகை

பிரிட்டிஷ் அரசு தங்கள் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் மையமாகவும் தங்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கான சந்தையாகவும் இந்தியாவை



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**14. .................. என்பது தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயலாக்கம் ஆகும்.**

**A)** நீர் சுருங்குதல் **B)** நீர் உட்கசிந்து வெளியிடுதல்
**C)** ஆவியீர்ப்பு **D)** நீர் ஆவியாதல்

**15. ஆவியாதல் விகிதம் அதிகரிக்க காரணம் ................**

**A)** காற்றின் வேகம் அதிகரித்தல்
**B)** வெப்பநிலை அதிகரித்தல்
**C)** ஈரப்பதம் குறைதல்
**D)** மேற்கூறிய அனைத்தும்

**16. அடர் மூடுபனியின் உயரம் 10 கி.மீட்டர் அல்லது அதற்கு குறைவான உயரம் ................. போக்குவரத்திற்கு உகந்தது.**

**A)** விமான **B)** சாலை
**C)** கடல் **D)** தரை

**17. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | மழைப்பொழிவின் வடிவம் | 1. | ஆவியாதல் |
| b) | பனி | 2. | நீர்மயியல் சுழற்சி |
| c) | மேல்மட்ட நீர்வழிந்தோடல் | 3. | கல் மழை |
| d) | திரவமாய் சுருங்குதல் | 4. | துருவப் பகுதிகள் |
| e) | 90% ஈரப்பதம் | 5. | நிலநீர் ஓட்டம் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 5 | 2 | 1 |
| B) | 2 | 1 | 3 | 4 | 5 |
| C) | 3 | 1 | 5 | 4 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 | 5 |

**18. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

**I.** நீரியல் சுழற்சி என்பது சூரிய உந்துதல் செயலாக்கத்தால் நடைபெறும் உலகளாவிய நிகழ்வு

**II.** நீர் கடலில் இருந்து ஆவியாதல் மூலம் வளிமண்டலத்திற்குச் சென்று பின் வளிமண்டலத்தில் இருந்து மழைப்பொழிவாக நிலத்திற்கும், நிலத்தில் இருந்து நீராக கடலுக்கும் சென்றடைகிறது.

**III.** நீர் சுழற்சியில் உள்ளாகும் நீரின் அளவு மாறும்.

**IV.** இது நீர்ப்பரவல், இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடும்.

**சரியான விடையளி**

**A)** I, II மற்றும் IV சரி **B)** I, IV சரி
**C)** II, III சரி **D)** II, III தவறு

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (B) | 2. (C) | 3. (A) | 4. (D) | 5. (A) | 6. (C) | 7. (A) | 8. (C) | 9. (A) | 10. (B) |
| 11. (C) | 12. (A) | 13. (B) | 14. (B) | 15. (D) | 16. (A) | 17. (A) | 18. (A) | | |

# அலகு - 4 இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் வரையறை – இடம் பெயர்தல்**

இடம் பெயர்வு என்பது இரு புவியியல் பிரதேசங்களுக்கு இடையே நடைபெறும் ஒரு வகையான மக்கள்தொகை நகர்வாகும்.

## இடம் பெயர்வுக்கான காரணிகள்

**சாதகமான காரணிகள்**

இவை ஓர் இடத்தை நோக்கி மக்களை ஈர்க்கும் காரணிகள் ஆகும். இவை **இழுகாரணிகள்** (Pull Factors) என்றும் அழைக்கப்படுகின்றன.

**பாதகமான காரணிகள்**

இவை மக்கள் தங்கள் வசிப்பிடங்களில் இருந்து வெளியேறச் செய்யும் காரணிகள் ஆகும். இவை **உந்துக்காரணிகள்** (Push Factors) என்றும் அழைக்கப்படுகின்றன.

## இடம் பெயர்வுக்கான காரணங்கள்

இடம் பெயர்வுக்கான பல்வேறு காரணிகள் 5 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1. சூழியல் அல்லது இயற்கைக் காரணங்கள்

| பாதகமானவை | சாதகமானவை |
|---|---|
| எரிமலை வெடிப்பு, நில அதிர்வு, வெள்ளம், வறட்சி போன்ற காரணங்களால் இடம் பெயர்கின்றனர். | நீர்வளம், பிரச்சனைகள் இல்லாத நிலப்பகுதிகள் மற்றும் மாசற்ற பகுதிகளை நோக்கிச் செல்கின்றனர். |

### 2. பொருளாதாரக் காரணங்கள்

பெரும்பாலான மக்கள் ஏழ்மை, வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களால் வளமான வேளாண் நிலம், வேலைவாய்ப்பு, தொழில்நுட்ப வளர்ச்சி உள்ள இடங்களை நோக்கிச் செல்கின்றனர்.

### 3. சமூக மற்றும் பண்பாட்டு காரணங்கள்

பெண்கள் திருமணத்திற்குப் பின் இடம் பெயர்ந்து செல்லுதல்.

புனித யாத்திரைகளுடன் தொடர்புடைய இடம் பெயர்தல்.

### 4. மக்கள்தொகை சார்ந்த காரணங்கள்

வயது, பாலினம், அதிக மற்றும் குறைந்த மக்கள்தொகை ஆகியவை இடம் பெயர்வுக்கான முக்கியக் காரணங்களாகும். இவ்வகையில் அதிக மக்கள்தொகை உந்து காரணியாகவும் குறைவான மக்கள்தொகை இழு காரணியாகவும் உள்ளது.

### 5. அரசியல் காரணங்கள்

காலனி ஆதிக்கம், போர்கள், அரசாங்கக் கொள்கைகள், இனம் மற்றும் மதம் சார்ந்த துன்புறுத்தல் போன்ற காரணங்களால் அரசியல் பாதுகாப்பு உடைய சுதந்திரமாக செயல்படும் இடங்களுக்கு மக்கள் இடம் பெயர்கின்றனர்.

**ஆண்களை விட பெண்கள் அதிகமாக புலம் பெயர்ந்த நாடுகள் :** ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லத்தீன் அமெரிக்கா, கரீபியன்.

**பெண்களை விட ஆண்கள் அதிகமாக புலம் பெயர்ந்த நாடுகள்** ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா.

## இடம் பெயர்வின் வகைகள்






suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**ஊரகத்திலிருந்து நகர்ப்புறம்**

வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பொழுதுபோக்கு காரணங்களுக்காக இடம் பெயர்கிறார்கள்.

**ஊரகத்திலிருந்து ஊரகம்**

சாகுபடிக்கு ஏற்ற வளமான நிலம், திருமணம் போன்ற காரணங்களுக்காக இடம் பெயர்கிறார்கள்.

**நகர்ப்புறங்களிலிருந்து ஊரகம்**

நகர்ப்புறச் சூழலில் இருந்து விடுபடவும், பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின் பூர்வீக இடங்களுக்கு திரும்புவதற்கும் இடம் பெயர்கிறார்கள்.

**நகரத்திலிருந்து நகர்ப்புறம்**

அதிக ஊதியம் பெறும் பொருட்டு ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு இடம் பெயர்கிறார்கள்.

**சர்வதேச இடம் பெயர்வு**

இது ஒரு நாட்டின் எல்லைகளைக் கடந்து நடக்கும் இடப் பெயர்வாகும்.

**இடம் பெயர்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் இடம் பெயர்தல்**

- தன்னார்வ இடம் பெயர்வு
- தன்னார்வமில்லாத இடம்பெயர்வு

**தன்னார்வ இடம் பெயர்வுக்கான காரணங்கள்**

❖ தனிநபரின் விருப்பம்
❖ பொருளாதார நிலையை உயர்த்துதல்
❖ வசதியான இடத்தில் வாழவேண்டும் என்ற விருப்பம்.

**தன்னார்வமில்லாத இடம் பெயர்வுக்கான காரணங்கள்**

❖ போர்கள்
❖ வாழ தகுதியில்லாத சூழல்

இந்த இடம்பெயர்வு 'அனிச்சையான இடம்பெயர்வு' (அ) 'கட்டாய இடம் பெயர்வு' என்றும் அழைக்கப்படுகிறது.

**கால அளவின் அடிப்படையிலான இடம் பெயர்வு**

- குறுகிய கால இடம் பெயர்வு
- நீண்டகால இடம் பெயர்வு
- பருவகால இடம் பெயர்வு

**குறுகிய கால இடம் பெயர்வு**

சில நாட்கள் முதல் சில மாதங்கள் வரை மட்டுமே இவ்வகை இடம்பெயர்வு இருக்கும்.

**நீண்டகால இடம் பெயர்வு**

சில வருடங்கள் வரை இவ்வகை இடம்பெயர்வு இருக்கும்.

**பருவக்கால இடம் பெயர்வு**

கோடைகாலத்தில் மலை வாழிடங்களுக்கு இடம் பெயர்தல்.

வேளாண் தொழிலாளர்கள் பயிர் விதைக்கும் பருவங்களில் இடம் பெயர்தல்.

**'மந்தை இடமாற்றம்'** என்பது மக்கள், கால்நடைகளுடன் இடம் பெயர்தலாகும். இதுவும் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

> 2017–ஆம் ஆண்டில் சர்வதேச புலம் பெயர்வில் இந்தியா மிகப்பெரிய நாடாகவும் (17 மில்லியன்) அதனைத் தொடர்ந்து மெக்ஸிகோவும் (13 மில்லியன்) உள்ளன.
> (ஆதாரம் : சர்வதேச புலம்பெயர்ந்தோர் அறிக்கை–2017)

## இடம்பெயர்தலின் விளைவுகள்

**மக்கள்தொகை விளைவுகள்**

திருமணத்திற்குப் பின் நடைபெறும் பெண்களின் இடம் பெயர்வு அவர்களின் பூர்வீகப் பகுதியில் பாலின விகிதம் குறையவும் செல்லுமிடத்தில் பாலின விகிதம் அதிகரிக்கவும் வழி வகுக்கிறது.

வேலை தேடிச் செல்லும் ஆண் தொழிலாளர்களின் இடம் பெயர்வு பூர்வீகப் பகுதியில் பாலின விகிதம் குறையவும் செல்லுமிடத்தில் பாலின விகிதம் அதிகரிக்கவும் வழி வகுக்கிறது.

**சமூக விளைவுகள்**

பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் நகர்ப்புறத்தை நோக்கி இடம் பெயர்வதால் நகர்ப்புறத்தில் பன்முக சமுதாயம் உருவாகவும், தாராள மனப்பான்மைக்கு மாறுவதற்கு ஏதுவான சூழல் உருவாகவும் வழிவகுக்கிறது.

**பொருளாதார விளைவுகள்**

இடம் பெயர்வு ஒரு பகுதியிலுள்ள மக்கள்தொகையின் தொழில் கட்டமைப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அறிவார்ந்த மக்கள் வேலை வாய்ப்புகளைத் தேடி வளர்ந்த நாடுகளுக்குச் செல்வதால் அவர்களின் பூர்விகப் பகுதிகள் பின்தங்கிய நிலையை அடைகின்றன. இது **'அறிவுசார் வெளியேற்ற விளைவு'** (Back wash effect) எனப்படுகிறது.

**சுற்றுச்சூழல் விளைவுகள்**

ஊரகப் பகுதியில் இருந்து நகர்ப்புற பகுதிகளுக்கு பெருமளவில் மக்கள் இடம்பெயர்வதால் நகரங்களில் மக்கள் நெரிசல், வளங்கள் பற்றாக்குறை ஆகியவை ஏற்படுகின்றன. நகர விரிவாக்கம் ஏற்படுகிறது. காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியவை மாசடைய வழிவகுக்கின்றன.

குடிநீர் பற்றாக்குறை, போதிய குடியிருப்பின்மை, போக்குவரத்து நெரிசல் மற்றும் மோசமான வடிகால் அமைப்பு போன்ற சுற்றுச்சூழல் சவால்கள் உருவாகின்றன.

குடியிருப்பு இடப்பற்றாக்குறை மற்றும் நில மதிப்பு உயர்வு போன்றவை குடிசைவாழ் பகுதிகள் உருவாக வழிவகுக்கின்றன.

> 2000–இல் 173 மில்லியன்களாக இருந்த புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 2010–இல் 220 மில்லியன்களாகவும் 2017–இல் 258 மில்லியன்களாகவும் அதிகரித்துள்ளது.
> (ஆதாரம் : சர்வதேச புலம்பெயர்ந்தோர் அறிக்கை, 2017)

## நகரமயமாதலுக்கான காரணங்கள்

நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் மக்கள்தொகையின் விகிதாச்சாரம் அதிகரிப்பது 'நகரமயமாதல்' எனப்படுகிறது. இது மூன்று காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகிறது.

1. இயற்கையான மக்கள்தொகை வளர்ச்சி
2. ஊரகத்திலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்தல்.
3. ஊரகப் பகுதிகளை நகர்ப்புறங்களாக மறுசீரமைப்பு செய்தல்.

தற்போது மக்கள்தொகை மாற்றங்கள், நிலப்பரப்பு, பொருளாதார செயல்முறைகள் மற்றும் புவியியல் பகுதிகளின் பண்புகள் போன்றவைகளும் முக்கியக் காரணிகளாக உள்ளன.

> 2007–ஆம் ஆண்டு, வரலாற்றில் முதல்முறையாக உலகளாவிய நகர்ப்புற மக்கள்தொகை, ஊரக மக்கள்தொகையை விட அதிகமானது.
> (ஆதாரம் : உலக நகரமயமாக்கல் விளக்கக் குறிப்பு, 2014)

## உலக நகரமயமாக்கலின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

**பண்டைய காலம்**

10,000 ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே நகர மையங்கள் உருவாகத் தொடங்கின. எகிப்து, கிரேக்கம் மற்றும் இந்திய ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் வேளாண் சார்ந்த சமூகங்கள் தோன்றி, பின்னர் அவை நகர்ப்புறம் சார்ந்த சமூகங்களாகவும் நகர மையங்களாகவும் உருவாயின. உணவு தானிய மிகை உற்பத்தியே நகரமயமாதலுக்கு முக்கியக் காரணமாக இருந்தது. (எ.கா)

| நாடு | நகரங்கள் |
|---|---|
| மெசபடோமியா | உர் மற்றும் பாபிலோன் |
| எகிப்து | தீப்ஸ் மற்றும் அலெக்ஸண்டிரியா |
| கிரேக்கம் | ஏதென்ஸ் |
| இந்தியா | ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ |



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



பண்டைய கால நகர்ப்புற மையங்களின் எண்ணிக்கை **கிரேக்கர்கள்** மற்றும் **ரோமானியர்களின்** காலனியாதிக்க காலங்களில் அதிகரிக்கத் தொடங்கியது.

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் **ஏஜியன்** கடலுக்கு அருகில் பல நகரங்கள் இருந்தன.

**இடைக்காலம்**

11–ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஐரோப்பிய நாடுகளின் கடல் கடந்த வணிகம் அதிகரித்ததால் புதிய நகரங்கள் மற்றும் மாநகரங்கள் தோன்றின. (எ.கா) பாரீஸ், இலண்டன், ஜெனிவா, மிலன் மற்றும் வெனீஸ்.

**நவீன காலம்**

மூன்றாம் கட்ட வளர்ச்சியான இது 17–ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. 19–ஆம் நூற்றாண்டில் உருவான தொழிற்புரட்சியானது நகரங்கள் மற்றும் மாநகரங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது. ஐரோப்பியர்களின் நகர்ப்புற நாகரிகத்தினால் அதிக எண்ணிக்கையிலான புதிய நகரங்கள் வட அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனில் உருவாயின.

நவீன தொலைத்தொடர்பு, போக்குவரத்து மற்றும் புதிய வணிக கடல் வழித் தடங்கள் நகரங்கள் உருவாகக் காரணமாயின.

1930–ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆப்பிரிக்காவில் கடற்கரையை ஒட்டியே நகரங்கள் இருந்தன. தற்போது ஆப்பிரிக்காவில் 50–க்கும் மேற்பட்ட நகரங்கள் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகையைக் கொண்டுள்ளன.

**ஆப்பிரிக்காவின் முக்கிய நகரங்கள் :**

கெய்ரோ, நைரோபி, மும்பசா, புலவையோ, அக்ரா, அடிஸ் அப்பா, லிப்போல்டுவில், லவுண்டா, கேப்டவுன், நட்டால், பிரிட்டோரியா, டுலா, லோகோஸ், அகிடியான்.

**2018–இன் உலக நகரமயமாக்கல் விளக்கக் குறிப்பு**

இந்தியா, சீனா மற்றும் நைஜீரியா நாடுகள் 2018 முதல் 2050–ஆம் ஆண்டுகளுக்கிடையில் உலக மக்கள்தொகை வளர்ச்சியில் 35% பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் நகர்ப்புற மக்கள்தொகை**

| | |
|---|---|
| இந்தியா | 416 மில்லியன் |
| சீனா | 255 மில்லியன் |
| நைஜீரியா | 189 மில்லியன் |

1950–இல் உலகின் மக்கள்தொகையில் 30% நகர மக்கள் தொகையாக இருந்தது. 2050–இல் இது 68% ஆக உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண். | கண்டங்கள் / நாடுகள் | நகர மக்கள் தொகை |
|---|---|---|
| 1. | வட அமெரிக்கா | 82% |
| 2. | இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகள் | 81% |
| 3. | ஐரோப்பா | 74% |
| 4. | ஓசோனியா | 68% |
| 5. | ஆசியா | 50% |
| 6. | ஆப்பிரிக்கா | 43% |
| | உலக சராசரி | 55% |

**அதிக மக்கள்தொகை உடைய உலகில் முதல் 5 மாநகரங்கள்**

| வ.எண் | மாநகரம் | மக்கள் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| 1. | டோக்கியோ (ஜப்பான்) | 37 |
| 2. | புதுதில்லி (இந்தியா) | 29 |
| 3. | சாங்காய் (சீனா) | 26 |
| 4. | மெக்ஸிகோ நகரம் (மெக்சிகோ) | 22 |
| 5. | சா. பாலோ (பிரேசில்) | 22 |

## பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மக்கள் ..........லிருந்து ..........க்கு நல்ல வேலை வாய்ப்பினைத் தேடி குடிபெயர்கின்றனர்.**

**A)** கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு
**B)** நகர்ப்புறத்திலிருந்து கிராமப்புறத்திற்கு
**C)** மலையிலிருந்து சமவெளிக்கு
**D)** சமவெளியிலிருந்து மலைப்பகுதிக்கு

**2. ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் .......... எனப்படுகிறது.**

**A)** குடிபுகுபவர் **B)** அகதி
**C)** குடியேறுபவர் **D)** புகலிடம் தேடுபவர்

**3. வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம் பெயர்தல் நடைபெறுவது ..........**

**A)** கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு
**B)** கிராமத்தில் இருந்து நகரத்திற்கு
**C)** நகரத்தில் இருந்து கிராமத்திற்கு
**D)** நகரத்தில் இருந்து நகரத்திற்கு

**4. போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு .......... ஐ சார்ந்தது.**

**A)** மக்களியல் **B)** சமூக மற்றும் கலாச்சாரம்
**C)** அரசியல் **D)** பொருளாதாரம்

**5. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணம் ..........**

**A)** உணவு தானிய உற்பத்தி **B)** கால்நடை வளர்ப்பு
**C)** மீன் பிடித்தல் **D)** வேட்டையாடுதல்

**6. பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| **a)** | குடியேற்றம் | **1.** | குடிபுகுபவர் |
| **b)** | குடியிறக்கம் | **2.** | வெளியேறுதல் |
| **c)** | இழு காரணி | **3.** | வேலை வாய்ப்பின்மை |
| **d)** | உந்து காரணி | **4.** | சமூக மற்றும் பண்பாட்டு இடம் பெயர்வு |
| **e)** | திருமணம் | **5.** | வேலை வாய்ப்பு |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| **A)** | 2 | 1 | 5 | 3 | 4 |
| **B)** | 1 | 5 | 3 | 4 | 2 |
| **C)** | 5 | 3 | 4 | 2 | 1 |
| **D)** | 3 | 4 | 2 | 1 | 5 |

**7. கீழ்க்காணும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையைக் குறிப்பிடவும்.**

**கூற்று** : நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்.

**காரணம்** : கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**சரியான விடையளி :**

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
B) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
C) கூற்றும் மற்றும் காரணம் இரண்டும் சரி
D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

8. **வசதியான இடத்தில் வாழ வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் நடைபெறும் இடம் பெயர்தல் ..........**
A) தன்னார்வ இடம் பெயர்வு
B) தன்னார்வமில்லா இடம்பெயர்வு
C) உள்நாட்டு இடம் பெயர்வு
D) சர்வதேச இடம் பெயர்வு

9. **.......... ஆம் ஆண்டில் சர்வதேச புலம் பெயர்வில் இந்தியா மிகப்பெரிய நாடாக (17 மில்லியன்) உள்ளது.**
A) 2015 B) 2016
C) 2017 D) 2018

10. **2018-2050 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் உலக நகர்ப்புற மக்கள்தொகை வளர்ச்சி .......... % பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**
A) 45 B) 55
C) 25 D) 35

11. **தனிநபர் அல்லது குழுவாக வேறொரு புதிய நாட்டில் குடிபுகுதல் ..........**
A) குடியிறக்கம் B) குடியேற்றம்
C) குடியேறுபவர் D) குடிபெயர்பவர்

12. **உலகின் மக்கள்தொகை 2050 இல் .......... % உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.**
A) 58 B) 68
C) 78 D) 88

## விடைகள்

1. (A) 2. (C) 3. (A) 4. (C) 5. (A) 6. (A) 7. (A) 8. (A) 9. (C) 10. (D) 11. (A) 12. (B)

# அலகு - 5 இடர்கள்

ஒரு பொருளோ, நபரோ, நிகழ்வோ அல்லது காரணியோ மக்கள் அல்லது கட்டமைப்புகள் மற்றும் பொருளாதார வளங்களுக்கு அச்சுறுத்தலாகவும் இழப்பு ஏற்படுத்தும் வகையிலும் அமைந்தால் அது **'இடர்'** (Hazard) எனப்படும். 'ஹசார்டு' என்ற சொல் ஹாசர்ட் (Hasart) என்ற பழைமையான பிரெஞ்சு சொல்லில் இருந்து தோன்றியது. இதன் பொருள் **'பகடை விளையாட்டு'** என்பதாகும். இது அரபு மொழியில் 'அல்–சஹார்' என்றும் ஸ்பானிய மொழியில் 'அசார்' என்றும் அழைக்கப்படுகிறது.

**இயற்கை இடர்கள் :** மனித உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் இயற்கையான நிகழ்வுகள் 'இயற்கை இடர்கள்' எனப்படுகின்றன.

**பேரிடர் :** இது, வரையறுக்கப்பட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஓர் அபாயகரமான நிகழ்வாகும். இது உயிர் மற்றும் உடைமைகளுக்கு பெரும் அழிவை ஏற்படுத்துகிறது. பேரிடர்களின் எண்ணிக்கை மனித செயல்களால் அதிகரிக்கிறது.

**பேரழிவு :** இது மிகப்பெரிய இழப்பையும் அதிக செலவினத்தையும் உண்டாக்குவதோடு அவற்றிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலமும் தேவைப்படுகிறது.

## இடர்களின் வகைகள்

### I. நிகழ்விற்கான காரணிகளின் அடிப்படையிலான இடர்கள்

**1. இயற்கையால் ஏற்படும் இடர்கள்**

இவ்வகையான இடர்களில் மனிதனின் பங்கு இருப்பதில்லை. இவை இயற்கைக் காரணிகளால் ஏற்படுகின்றன.

(எ.கா) நில அதிர்வு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புயல்கள், வறட்சி, நிலச்சரிவு, சுனாமி மற்றும் எரிமலை வெடிப்பு.

**2. மனிதனால் உருவாக்கப்படும் இடர்கள்**

இவை மனிதர்களின் விரும்பத்தகாத நடவடிக்கைகளின் மூலம் ஏற்படுகின்றன. தொழிற்சாலைகளின் இரசாயனக் கழிவு (அ) எண்ணெய் கசிவு (அ) விபத்துகள் மூலம் இவை ஏற்படுகின்றன. இவற்றால் மக்கள் உடல்நலன் பாதிப்பதோடு உடைமைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

(எ.கா) குண்டு வெடிப்புகள், அபாயகரமான கழிவுகள், அணைக்கட்டு உடைதல், போர், உள்நாட்டுக் கலவரங்கள், தீவிரவாத செயல்கள், காற்று, நிலம், நீர் மாசடைதல்.

**3. சமூக – இயற்கைக் காரணிகளால் ஏற்படும் இடர்கள்**

ஆறுகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள மரங்களை மனிதன் அழிப்பதால் வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி ஏற்படுகின்றன.

நிலச்சரிவு இயற்கையாக ஏற்படுகிறது. எனினும் மலைப்பிரதேசங்களில் சாலைகள் அமைப்பது, வீடுகள் கட்டுவது, சுரங்கங்கள் தோண்டுவது, கனிமங்கள் மற்றும் கற்களை வெட்டியெடுத்தல் போன்ற மனித செயல்கள் நிலச்சரிவின் பாதிப்பை அதிகப்படுத்துகின்றன.

சதுப்புநிலக் காடுகளை மனிதன் அழிப்பதால், சூறாவளி அலைகள் கடற்கரைப் பகுதிகளில் இடரை உருவாக்குகின்றன.

வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வெளியிடும் புகைகள், மரங்கள் மற்றும் நிலக்கரியை எரிப்பதால் உருவாகும் புகைகள் ஆகியவை மூடு பனியை உருவாக்குகின்றன. மூடுபனி அடர் மூடுபனியுடன் சேர்ந்து உண்டாக்கும் பனிப்புகை உடல்நலத்தைப் பாதிக்கிறது.

### II தோற்றத்தின் அடிப்படையில் உருவாகும் இடர்கள்

**1. வளிமண்டலத்தால் ஏற்படும் இடர்கள் :** வெப்ப மண்டல சூறாவளி இடியுடன் கூடிய புயல், மின்னல், சுழல்காற்று, பனிச்சரிவு, வெப்ப அலைகள், மூடுபனி மற்றும் காட்டுத் தீ.

**2. நிலவியல் சார்ந்த இடர்கள் :** நில அதிர்வு, சுனாமி, நிலச்சரிவு, நிலம் அமிழ்தல்.

**3. நீரியல் தொடர்பான இடர்கள் :** வெள்ளப்பெருக்கு, வறட்சி, கடற்கரை அரிப்பு, சூறாவளி அலைகள்.

**4. எரிமலை சார்ந்த இடர்கள் :** எரிமலை வெடிப்பு மற்றும் லாவா வழிதல்.

**5. சுற்றுச்சூழல் சார்ந்த இடர்கள் :** மண், காற்று, நீர்மாசடைதல், பாலைவனமாதல், புவி வெப்பமடைதல் மற்றும் காடழிப்பு.

**6. உயிரியல் சார்ந்த இடர்கள் :** சின்னம்மை, பெரியம்மை, தட்டம்மை, பால்வினைத் தொற்று நோய்கள், எய்ட்ஸ், விஷ தேனீக்கள் ஆகியவற்றால் ஏற்படும் இடர்கள்.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



1. நிகரலாபம்
2. நிகர மதிப்பு
3. மொத்த மனிதவள செலவு
4. மொத்த உற்பத்தி செலவு
5. சேவைகளில் செலவு
6. தேய்மானத்திற்கு முன் லாபம், வட்டி மற்றும் வரிகள் (PBDIT - Profit Before Depreciaiton Interest and Taxes)

**நிறுவனங்கள்**

- பாரத மிகு மின் நிறுவனம் (BHEL)
- இந்திய கொள்கலன் நிறுவனம் (CONCOR)
- இந்திய பொறியாளர்கள் நிறுவனம் (EIL)
- இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனம் (HAL)
- இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம் (HPCL)
- மஹன் அகர் தொலைபேசி நிறுவனம் (MTNL)
- தேசிய அலுமினியம் கம்பெனி (NALCO)
- நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (NLCIL)
- இந்திய ஆயில் எண்ணெய் நிறுவனம் (OIL)
- இந்திய கப்பல் நிறுவனம் (SCI)

**மினிரத்னா தொழில் நிறுவனங்கள் – வகை 1**

இவை மூன்றில் ஒரு வருடம் நிகரலாபம் ₹ 30 கோடி அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் லாபம் ஈட்டிய நிறுவனங்கள் ஆகும்.

**நிறுவனங்கள்**

- இந்திய விமான நிலைய ஆணையம் (AAI)
- பாரத் இயக்கவியல் நிறுவனம் (BDL)
- பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனம் (BSNL)
- சென்னை பெட்ரோலிய நிறுவனம் (CPCL)
- இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (ITPO)
- இந்திய மாநில வர்த்தக கழகம் (STCI)

**மினிரத்னா தொழில் நிறுவனங்கள் – வகை 2**

இவை மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக லாபம் ஈட்டியுள்ள மற்றும் நேர்மறையான நிகர மதிப்பு கொண்ட நிறுவனங்களாகும்.

**நிறுவனங்கள்**

- HMT பன்னாட்டு நிறுவனம்
- இந்திய மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் நிறுவனம் (IMPCL)
- MECON நிறுவனம்
- கனிம ஆய்வு நிறுவனம்
- தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம்
- பாரத பம்புகள் & அமுக்கிகள் (Pumps & Compressors) நிறுவனம்

**தனியார் துறை**

தனி நபர்கள் (அ) நிறுவனங்களுக்குச் சொந்தமான, அவர்களால் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படும், தேசிய பொருளாதாரத்தின் ஒரு பிரிவு தனியார் துறை எனப்படுகிறது.

தனியார் துறை நிறுவனங்கள் இரண்டு வழிகளில் உருவாக்கப்படுகின்றன.

1. ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்குவது.
2. எந்தவொரு பொதுத்துறை நிறுவனத்தை தனியார் மயமாக்குதல்

நடுத்தர, சிறிய மற்றும் மிகச்சிறிய அல்லது நுண்ணிய அளவிலான தொழில் வளர்ச்சியால் உருவான தனியார் துறையின் பங்கு பொருளாதார வளர்ச்சியில் அதிகமாக உள்ளது.

**முக்கிய தனியார் நிறுவனங்கள்**

- இன்போசிஸ் நிறுவனம்
- ஆதித்யா பிர்லா நிறுவனம்
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரியல் நிறுவனங்கள்
- டாட்டா குழும நிறுவனங்கள்
- விப்ரோ நிறுவனம்
- இந்துஸ்தான் யூனிலிவர் நிறுவனம்
- ICICI வங்கி

**தனியார் துறையின் பணிகள்**

- புதுமை மற்றும் நவீனமயமாதலை உருவாக்குவது.
- இலாப நோக்கம் மற்றும் உற்பத்தியின் புதிய நுட்பங்களைக் கண்டறிதல்.
- உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- வணிகங்களை ஊக்குவித்தல் மற்றும் விரிவுபடுத்துதல்.
- மனித மூலதன வளர்ச்சியை ஊக்குவித்தல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு தொழிலாளர் சந்தையில் பங்கேற்க உதவுதல்.
- சமூக வணிக மற்றும் கூட்டுறவு, உள்ளூர் பரிமாற்ற அமைப்புகள் மற்றும் முறைசாரா கடன் போன்றவற்றை ஊக்குவித்தல்.
- சிறு, நுண் மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMME) உருவாக்குவதன் மூலம் அளிப்பு பக்க நடவடிக்கைகள் மற்றும் தேவை பக்க நடவடிக்கைகளை கோருதல் மற்றும் நகரத்தில் முதலீட்டை ஈர்த்தல்.

**தனியார் துறையின் பங்களிப்பு**

வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவை தனியார் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

மின்னணு மற்றும் மின்சார பொருள்கள், வாகனங்கள், ஜவுளி, இரசாயனங்கள், உணவுப் பொருள்கள், ஒளி பொறியியல் பொருள்கள் போன்ற பல்வேறு நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தனியார் கட்டுப்பாட்டில் உள்ளன.

**பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகள்**

| வ. எண் | பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | தொழில்களின் உரிமையானது அரசாங்கத்திடம் உள்ளது. | தொழில்களின் உரிமையானது தனிநபர்களிடம் உள்ளது. |
| 2. | பொது வருவாயானது பண்டங்கள் மற்றும் பணிகளின் மீது விதிக்கும் வரியைப் பொருத்தது. | பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களை வழங்குதல் (அ) கடன் வாங்குவதைப் பொருத்தது. |
| 3. | தொழிலாளர்களுக்கு முறையான ஊதியத்தை உறுதி செய்கிறது. | தொழிலாளர்களை சுரண்டுகிறது. |
| 4. | ஒரு சிலரிடம் (அ) பணக்காரர்களிடம் பெரும் செல்வத்தை குவிக்க அனுமதிக்காது. | ஒரு சிலரிடம் (அ) பணக்காரர்களிடம் பெரும் செல்வத்தை குவிக்க அனுமதிக்கிறது. |
| 5. | NLC, SAIL, BSNL போன்றவை பொதுத்துறை நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். | TVS Motors, Ashok Leayland, TATA Steel போன்றவை தனியார் துறை நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். |
| 6. | வரி ஏய்ப்பு இருக்காது. | வரி ஏய்ப்பு இருக்கும். |
| 7. | சேவை நோக்கம் உடையது. | இலாப நோக்கம் உடையது. |
| 8. | சமூக ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. | சமூக ரீதியாக பின்தங்கிய மக்களை பொருட்படுத்தாது. |
| 9. | இட ஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப்படுகிறது. | இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. |



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



## பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இந்தியாவில் பொதுத்துறைகளின் தோற்றத்திற்கு காரணமான இந்திய அரசின் தொழில் கொள்கையின் தீர்மானம் .......... ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.**
A) 1957 B) 1958
C) 1966 D) 1956

**2. கலப்புப் பொருளாதார நன்மைகளின் கலவை என்பது**
A) முதலாளித்துவம் B) சமதர்மம்
C) (A) மற்றும் (B) சரி D) (A) மற்றும் (B) தவறு

**3. நிறுவனச் சட்டம் மற்றும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் முதன்மையான முக்கிய பங்குதாரர் ..............**
A) தனியார் துறை B) கூட்டு துறை
C) பொதுத்துறை D) இவற்றில் எதுவுமில்லை

**4. இந்திய இரும்பு எஃகு ஆணையம் (SAIL) ஒரு .......... நிறுவனமாகும்.**
A) மினிரத்னா நிறுவனம் B) மகாரத்னா நிறுவனம்
C) நவரத்னா நிறுவனம் D) இவற்றில் எதுவுமில்லை

**5. பொதுத்துறை .......... உடையது.**
A) இலாப நோக்கம் B) சேவை நோக்கம்
C) ஊக வணிக நோக்கம் D) இவற்றில் எதுவுமில்லை

**6. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | மதியுரையகக் குழு | 1. | முதன்மை துறை |
| b) | வேளாண்மை | 2. | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| c) | தொழில்கள் | 3. | நிதி ஆயோக் |
| d) | GDP | 4. | நவரத்னா தொழில் |
| e) | BHEL | 5. | இரண்டாம் துறை |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 5 | 2 | 4 |
| B) | 1 | 5 | 2 | 4 | 3 |
| C) | 5 | 2 | 4 | 3 | 1 |
| D) | 2 | 4 | 3 | 1 | 5 |

**7. சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை அளவிட பின்வருவனவற்றில் எந்த குறியீடு பயன்படத்தப்படுவதில்லை.**
A) கறுப்புப் பணம்
B) ஆயுட்காலம்
C) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
D) வேலைவாய்ப்பு

**8. பின்வரும் கூற்றை ஆராய்க.**
I. அரசுக்கு மட்டுமே சொந்தமான தொழில்கள் அட்டவணை–A எனக் குறிப்பிடப்படுகின்றன.
II. தனியார் துறையானது மாநில துறையின் முயற்சிகளுக்கு துணை புரியக் கூடிய தொழில்கள் புதிய அலகுகளை தொடங்குவதற்கான முழு பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொள்வது அட்டவணை B எனக் குறிக்கப்படுகின்றன.

**சரியான விடையளி :**
A) I மட்டும் சரி B) II மட்டும் சரி
C) I மற்றும் II சரியானவை D) இரண்டும் இல்லை

**9. மார்ச் .......... இல் அமைச்சரவை தீர்மானத்தால் திட்டக்குழு அமைக்கப்பட்டது.**
A) 1950 B) 1947
C) 1951 D) 1949

**10. இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் .......... ஆவார்.**
A) ஜவஹர்லால் நேரு B) காந்திஜி
C) ராஜாஜி D) டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி

**11. சராசரியாக ஆண்டுக்கு நிகர லாபம் ₹ 2500 கோடி வருவாய் உள்ள தொழில் பிரிவு**
A) மினிரத்னா தொழில்–1 B) மினிரத்னா தொழில்–2
C) நவரத்னா தொழில் D) மகாரத்னா தொழில்

**12. கீழ்க்காண்பனவற்றுள் தனியார் நிறுவனம் அல்லாதது எது?**
A) இன்போசிஸ் நிறுவனம்
B) தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம்
C) விப்ரோ நிறுவனம்
D) இந்துஸ்தான் யூனிலிவர் நிறுவனம்

**13. அரசுத்துறையால் நிர்வாகம் செய்யப்படும் நிறுவனம் ..........**
A) தபால் மற்றும் தந்தி
B) இந்தியன் செயற்கை ரப்பர் நிறுவனம்
C) ஆயுள் காப்பீட்டு நிறுவனம்
D) ஏர் இந்தியா

**14. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | கூட்டுத்துறை நிறுவனம் | 1. | இரயில்வே |
| b) | பொதுக்கழகம் | 2. | துறைமுகம் |
| c) | அரசுத்துறை நிறுவனம் | 3. | மின்சார வாரியம் |
| d) | அதிகளவு பணியாளர்களைக் கொண்ட நிறுவனம் | 4. | இந்தியன் ஆயில் ஸ்கை டேங்கிங் நிறுவனம் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 4 | 3 | 2 |

**15. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | பாரத பெட்ரோலிய நிறுவனம் | 1. | நவரத்னா தொழில் |
| b) | இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம் | 2. | மகாரத்னா தொழில் |
| c) | சென்னை பெட்ரோலிய நிறுவனம் | 3. | தனியார் நிறுவனம் |
| d) | இந்துஸ்தான் யூனிலிவர் நிறுவனம் | 4. | மினிரத்னா தொழில் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 1 | 4 | 3 | 2 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 2 | 1 | 4 |

## விடைகள்

1. (D) 2. (C) 3. (B) 4. (B) 5. (B) 6. (A) 7. (A) 8. (C) 9. (A) 10. (D)
11. (D) 12. (B) 13. (A) 14. (A) 15. (A)



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com

10-ஆம் வகுப்பு

# சமூக அறிவியல்

## வரலாறு

- முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்
- இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்
- இரண்டாம் உலகப்போர்
- இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்
- 19-ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்
- ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்
- காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்
- தேசியம் : காந்திய காலகட்டம்
- தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்
- தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

## புவியியல்

- இந்தியா–அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு
- இந்தியா–காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்
- வேளாண்மைக் கூறுகள்
- வளங்கள் மற்றும் தொழிலகங்கள்
- இந்தியா–மக்கள்தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்
- தமிழ்நாடு – இயற்கைப் பிரிவுகள்
- தமிழ்நாடு – மானுடப் புவியியல்

## குடிமையியல்

- இந்திய அரசியலமைப்பு
- மத்திய அரசு
- மாநில அரசு
- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை
- இந்தியாவின் சர்வதேச உறவுகள்

## பொருளியல்

- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி
- உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்
- உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து
- அரசாங்கமும் வரிகளும்
- தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com

# சமூக அறிவியல்

## வரலாறு

## அலகு – 1 முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

1789–ஆம் ஆண்டிலிருந்து, தொடங்கிய அரசியல் சமூக செயல்பாடுகள், 1914–இல் நடைபெற்ற முதல் உலகப்போரின் போது உச்சத்தை அடைந்து 20–ஆம் நூற்றாண்டினுடைய போக்கையே தீர்மானித்தன. அதனால் வரலாற்று ஆசிரியர்கள் இதனை, **"நீண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு"** என அழைத்தனர். இப்போரினால் உலக அரசியல் வரைபடம் மீண்டும் வரையப்பட்டது. போரின் முடிவில் **ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, உதுமானியப் பேரரசு** ஆகிய மூன்றும் சிதறுண்டன. இப்போரின் மிகப்பெரும் விளைவு **ரஷ்யப்புரட்சி** ஆகும். முதன்முறையாக உலக நாடுகள் பன்னாட்டுச் சங்கத்தின் மூலமாக உலக அமைதியை ஏற்படுத்த முயன்றன.

### காலனிகளுக்கான போட்டி

#### முதலாளித்துவ நாடுகளின் சந்தைகளுக்கான போட்டி

19–ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் தகவல் பரிமாற்றம், போக்குவரத்து ஆகிய துறைகளில் ஏற்பட்ட புரட்சியானது ஆப்பிரிக்காவிலும் ஏனைய பகுதிகளிலும் ஐரோப்பிய விரிவாக்கம் ஏற்படுவதற்குத் துணை புரிந்தன.

19–ஆம் நூற்றாண்டின் ஐரோப்பா, மேலாதிக்க சக்தியாக உருப்பெற்றது. ஆசியாவும் ஆப்பிரிக்காவும் காலனிகளாக்கப்பட்டு சுரண்டப்பட்டன. ஐரோப்பிய நாடுகளிடையே **இங்கிலாந்து** உலக முதலாளித்துவத்திற்கு தலைமையாக விளங்கியது.

சந்தை, கச்சாப்பொருள் ஆகியவற்றின் தேவை அதிகரித்ததால் முதலாளித்துவ நாடுகள் உலகத்தைச் சுற்றிப் போட்டியில் இறங்கின.

#### முற்றுரிமை முதலாளித்துவத்தின் எழுச்சி

1870–ஆம் ஆண்டிற்குப் பிறகு சுதந்திரப் போட்டி முதலாளித்துவமானது முற்றுரிமைகளின் முதலாளித்துவமாக மாறியது. 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுதந்திர வணிகம் எனும் பழைய கோட்பாடு சரிந்து வீழ்ந்தது. அமெரிக்காவில் உருவான கூட்டு நிறுவனங்களும் ஜெர்மனியில் உருவான வணிகக் கூட்டிணைப்புகளும் அரசுகளின் மீது மேலாதிக்கம் செலுத்தின.

**கூட்டு நிறுவனம் :** இது, பொருள்களை உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழில் சார் நிறுவனமாகும். தனக்கு லாபம் தரும் வகையில் பொருள்களின் விநியோகம், விலை ஆகியவற்றின் மீது இந்நிறுவனம் அதிகக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்.

**கார்டெல் :** ஒரே வணிகத் துறையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களிடையே தொழில் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதன் அடிப்படையில் உருவாகும் அமைப்பை இச்சொல் குறிக்கிறது. சந்தையின் மீது முற்றுரிமைச் செல்வாக்கைச் செலுத்துவதே இதன் நோக்கமாகும்.

#### ஏகாதிபத்தியமும் அதன் முக்கியப் பண்புக் கூறுகளும்

"முதலாளித்துவத்தின் உச்சகட்டமே ஏகாதிபத்தியம்" என்பது **லெனினின்** கூற்றாகும்.

முற்றுரிமை முதலாளித்துவத்திற்கு பெருமளவில் கச்சாப் பொருள்கள் தேவைப்பட்டன. கச்சாப் பொருள்களின் மூலங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் ஏகாதிபத்தியம் உருவானது. ஏகாதிபத்தியம் காலனிகளை உருவாக்கியதுடன் இராணுவமயமாக்கத்திற்கும் முழுமையான போருக்கும் இட்டுச் சென்றது.

### வல்லரசுகளின் போட்டி

#### ஐரோப்பா

19–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய சக்திகள் 1880–ஆம் காலப்பகுதியில் பெரும்பாலான ஆசிய நாடுகளை காலனி நாடுகளாக்கி விட்டன. 1881–1914 ஆம் ஆண்டுகளுக்கிடையே ஆப்பிரிக்கா கைப்பற்றப்பட்டு காலனிமயமாக்கப்பட்டது.

19–ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஜெர்மனி தொழில்துறையில் மிகப்பெரும் சாதனைகளைப் புரிந்தது. ஜெர்மனி காலனியாதிக்கப் போட்டிக்குள் நுழைந்த போது, உலகின் பெரும்பாலான பகுதிகள் ஏனைய ஏகாதிபத்திய சக்திகளால் கைப்பற்றப்பட்டிருந்தன. விரிவாக்கம் செய்ய புதிய பகுதிகள் இல்லாமையால் ஏகாதிபத்திய சக்திகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டன. ஐரோப்பாவில் 1870–ஆம் ஆண்டிற்குப் பின்னர் இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் காலனியாதிக்கப் போட்டியில் கலந்து கொண்டன.

#### வல்லரசுகளுக்கு இடையிலான மோதல்கள்

**இங்கிலாந்து** ஜெர்மனியோடும் அமெரிக்காவோடும் போட்டியிட வேண்டியிருந்தது. ஏனெனில் அந்நாடுகள் விலைமலிவான பண்டங்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின. இதனால் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வல்லரசுகளுக்கு இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன.

#### ஆசியா : ஜப்பானின் எழுச்சி

**மெய்ஜி சகாப்தம் (1867-1912) :**

இக்காலகட்டத்தில் ஜப்பான் தொழில் துறையில் சிறந்த நாடாகவும் ஓர் ஏகாதிபத்திய சக்தியாகவும் உருவானது. மேலைநாட்டுக் கல்வி, இயந்திரத் தொழில் நுட்பம், நவீன இராணுவம், கப்பற்படை ஆகியவற்றில் முன்னேறிய ஜப்பான் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது.

**சீன – ஜப்பானிய போர் (1894-1895)**

இப்போரில் சிறிய நாடான ஜப்பான் சீனாவைத் தோற்கடித்தது உலகையே வியக்க வைத்தது.

ஜப்பானின் இந்த வெற்றியை ஐரோப்பிய சக்திகள் விரும்பவில்லை. ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையையும் மீறி, லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் ஜப்பான் இணைத்துக் கொண்டது. மேலும் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என மெய்ப்பித்தது.

ஐரோப்பிய அரசுகள் கொடுத்த அதிக அழுத்தம் காரணமாக ஆர்தர் துறைமுகத்தின் மீதான தனது கோரிக்கையை ஜப்பான் விட்டுக் கொடுத்தது. இச்சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ரஷ்யா, ஜப்பானை குறைவாக மதிப்பிட்டதுடன், அதன் மீது போர் தொடுத்தது. 1904–இல் நடைபெற்ற இப்போரில் ரஷ்யாவை ஜப்பான் தோற்கடித்தது. அமெரிக்கா மேற்கொண்ட சமரச முயற்சியின் காரணமாக ஜப்பான் ஆர்தர் துறைமுகத்தைத் திரும்பப் பெற்றது. இப்போருக்குப் பின் ஜப்பான் வல்லரசுகளின் கூட்டணியில் நுழைந்தது.

**ஜப்பானின் அரசியல் விவேகம்**

1905–ஆம் ஆண்டுக்குப் பின் கொரியாவின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை ஜப்பான் கட்டுப்படுத்தியது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



ஜப்பானியத் தூதரக அதிகாரி ஒருவரை கொரியாவைச் சேர்ந்தவர் கொன்றதைக் காரணம் காட்டி 1910–இல் கொரியாவை ஜப்பான் இணைத்துக் கொண்டது.

1912–இல் மஞ்சு அரசவம்சம் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து, சீனாவில் நிலவிய குழப்பத்தை தனக்குச் சாதகமாக ஜப்பான் பயன்படுத்திக் கொண்டது. சீனாவில் ஷாண்டுங் பகுதியின் மீது ஜெர்மனி கொண்டிருந்த உரிமைகளைத் தனக்கு மாற்றித் தர வேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தியது.

இரண்டு ஜப்பானிய ஆலோசகர்களை சீன அரசாங்கம், பதவியில் அமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை ஜப்பான் முன் வைத்தது.

ஜப்பானின் இந்தக் கோரிக்கைகளை சீனாவும் பிற ஐரோப்பிய நாடுகளும் விரும்பவில்லை. எனினும் ஜப்பானை எதிர்க்கும் நிலையில் யாரும் இல்லை.

### காலனிகள் அமைக்கப்படுதலும் போர்களும்

- 1876–இல் ஆப்பிரிக்காவின் 10% பகுதிகள் மட்டுமே ஐரோப்பாவின் கீழிருந்தன. 1900–இல் ஒட்டுமொத்த ஆப்பிரிக்காவும் காலனியாக மாறியிருந்தது.
- **இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம்** ஆகிய நாடுகள் கண்டத்தை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு ஒரு சில இடங்களை மட்டும் ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் விட்டுத் தந்தன.
- இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி ஆகியன சீனாவில் தங்களுக்கென '**செல்வாக்கு மண்டலங்களை** (Spheres of Influence)' நிறுவின.

| கைப்பற்றிய நாடு | கைப்பற்றப்பட்ட நாடுகள் |
|---|---|
| ஜப்பான் | கொரியா, தைவான் |
| பிரான்ஸ் | இந்தோ–சீனா |
| அமெரிக்கா | ஸ்பெயினிடமிருந்து பிலிப்பைன்ஸ் |
| இங்கிலாந்து மற்றும் ரஷ்யா | ஈரானைப் பிரித்துக் கொண்டன |

**ஆப்பிரிக்காவில் காலனிகளை நிறுவ ஐரோப்பியா நடத்திய போர்கள் :**

- அல்ஜீரியாவையும், செனகலையும் கைப்பற்ற **பிரான்ஸ்** பெரும் போரை நிகழ்த்தியது.
- 1879–இல் ஜுலுக்களாலும் 1884–இல் சூடான் படைகளாலும் **இங்கிலாந்து** தோற்கடிக்கப்பட்டது.
- 1896–இல் அடோவா போர்க்களத்தில் எத்தியோப்பியப் படைகளால் இத்தாலி தோற்கடிக்கப்பட்டது.
- இருப்பினும் இறுதியில் ஐரோப்பிய படைகளே வெற்றி பெற்றன.

## முதல் உலகப்போருக்கான காரணங்கள், போரின் போக்குகள் மற்றும் போரின் விளைவுகள்

### காரணங்கள்

**ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கைகள் மற்றும் எதிரணி சேர்க்கைகள்**

1900–இல் ஐரோப்பிய வல்லரசுகள் இரு முகாம்களாகப் பிரிந்தன.

ஒரு முகாமில் **ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி** இணைந்திருந்தன. பிஸ்மார்க்கின் வழிகாட்டுதலில் அவை 1882–இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன. இதன்படி ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் பரஸ்பரம் உதவிகள் செய்து கொள்ளும்.

மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் இணைந்திருந்தன. 1894–இல் மேற்கொண்ட உடன்படிக்கையின் படி இவ்விரு நாடுகளில் ஏதாவதொன்று ஜெர்மனியால் தாக்கப்படும் போது பரஸ்பரம் துணை நிற்கும் என உறுதி செய்யப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்ட இங்கிலாந்து இரண்டுமுறை ஜெர்மனியுடன் கூட்டணி சேர முயன்று தோல்வி கண்டது.

ரஷ்யாவின் மீது அதிகளவு பகைமை கொண்டிருந்த ஜப்பான் இங்கிலாந்துடன் 1902 **ஆங்கிலோ–ஜப்பான்** உடன்படிக்கையை செய்து கொண்டது. பின்னர் இங்கிலாந்துடன் கூட்டணி அமைக்க பிரான்ஸ் முடிவு செய்ததற்கு இந்த உடன்படிக்கை ஒரு தூண்டுதலாக இருந்தது.

1904–இல் பிரான்ஸ்–இங்கிலாந்து இடையே நட்புறவு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி மொராக்கோவில் பிரான்ஸ் சுதந்திரமாக செயல்பட்டதுடன், இங்கிலாந்து எகிப்தை கைப்பற்றியதை அங்கீகரிக்கவும் செய்தது.

இதனைத் தொடர்ந்து பாரசீகம், ஆப்கானிஸ்தான், திபெத் தொடர்பாக இங்கிலாந்து ரஷ்யாவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டது. இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா கூட்டணி உருவானது.

**வன்முறை சார்ந்த தேசியம்**

இங்கிலாந்தின் **ஆரவாரமான நாட்டுப்பற்று** (Jingoism), பிரான்சின் **வெறிகொண்ட நாட்டுப்பற்று** (Kultur) ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக, போர்வெடிப்பதற்குக் காரணமாயின. "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கே இதற்குக் காரணமாகும். ஏனைய நாடுகளைப் பற்றிய செய்திகளைத் திரித்துக் கூறுவதில் பத்திரிகைகள் முக்கியப் பங்காற்றின.

**ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு**

ஜெர்மனியின் பேரரசரான **இரண்டாம் கெய்சர் வில்லியம்** ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார். ஜெர்மனியின் கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது. 1805–இல் டிரபால்கர் போரில் நெப்போலியன் அடைந்த தோல்விக்குப் பிறகு கடல்பகுதி தங்களின் தனியுரிமை எனக் கருதிவந்த இங்கிலாந்து, ஜெர்மனியின் கப்பற்படைத் தளங்களைக் கண்டு தானும் கப்பற்படையை விரிவு செய்ததினால் இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றம் அதிகமானது.

**பிரான்ஸ் ஜெர்மனி இடையிலான பகை**

1871–இல் பிரான்ஸ் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டு **அல்சேஸ், லொரைன்** பகுதிகளை ஜெர்மனியிடம் இழந்தது. மேலும் மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீட்டை பிரான்ஸ் விரும்பவில்லை மொராக்கோ குறித்த பிரான்ஸ்–இங்கிலாந்து இடையிலான ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது. ஜெர்மனியின் பேரரசர் **இரண்டாம் கெய்சர் வில்லியம்** மொராக்கோ சுல்தானின் சுதந்திரத்தை அங்கீகரித்ததுடன், மொராக்கோவின் எதிர்காலம் குறித்து முடிவு செய்ய பன்னாட்டு மாநாட்டைக் கூட்டும்படி வலியுறுத்தினார்.

**பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :**

நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக 1908–இல் துருக்கியில் நடைபெற்ற **இளம் துருக்கியர் புரட்சியானது**, ஆஸ்திரியாவுக்கும் ரஷ்யாவுக்கும் **பால்கன் பகுதிகளில்** தங்கள் நடவடிக்கைகளைத் தொடங்கும் வாய்ப்பை அளித்தது.

இது தொடர்பாக ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதன்படி **பாஸ்னியா, ஹெர்சகோவினா** பகுதிகளை ஆஸ்திரியா இணைத்துக் கொள்ளலாம், **டார்டருனல்ஸ், போஸ்பொராஸ்** துறைமுகங்கள் வழியாக ரஷ்யா தனது கப்பல்களை மத்தியதரைக் கடல் பகுதிக்குள் கொண்டு செல்லலாம் என முடிவு செய்யப்பட்டது.

பாஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா ஆகிய இரண்டையும் ஆஸ்திரியா தன்னுடன் இணைத்துக் கொண்டதாக அறிவித்தது. இதனால் செர்பியாவில் ஆஸ்திரியாவிற்கு தீவிரமான எதிர்ப்பு தோன்றியது. ஆஸ்திரியாவிற்கு ஆதரவு நல்கிய ஜெர்மனி, செர்பியாவிற்கு ரஷ்யா ஆதரவு தரக்கூடாது என்பதையும் வலியுறுத்தியது. ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவுக்குமான இப்பகை 1914–இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

**பால்கன் போர்கள்**

18–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்மேற்கு ஐரோப்பாவில் வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்த துருக்கியானது, பால்கனிலும் ஹங்கேரியின் குறுக்காகப் போலந்து வரையிலும் பரவியிருந்தது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



துருக்கியப் பேரரசில் இருந்த துருக்கியரும் துருக்கியர் அல்லாத பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களும் பயங்கரமான படுகொலைகளையும் அட்டூழியங்களையும் செய்தனர். இதற்கு எடுத்துக்காட்டு **ஆர்மீனிய இனப்படுகொலை** ஆகும்.

18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல் சூழ்நிலையால் **கிரீசும்** அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாக தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன. பல்வேறு இன மக்களைக் கொண்டிருந்த மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு **கிரீஸ், செர்பியா, பல்கேரியா, மாண்ட்நீக்ரோ** ஆகிய நாடுகளிடையே போட்டி நிலவியது. இந்த நாடுகள் ஒன்றிணைந்து 1912–ஆம் ஆண்டு மார்ச் திங்களில் **பால்கன் கழகம்** என்ற அமைப்பை உருவாக்கின. இக்கழகம் **முதல் பால்கன் போரில்** (1912-13) துருக்கியப் படைகளைத் தோற்கடித்தன. எனினும் கைப்பற்றிய பகுதிகளைப் பிரித்துக் கொள்வதில் அவைகளுக்கு இடையே பிரச்சனை எழுந்தது. 1913–இல் உருவான **லண்டன் உடன்படிக்கையின்** படி **அல்பேனியா** என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது.

மாசிடோனியாவை ஏனைய பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன. கான்ஸ்டாண்டி நோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் கொண்ட சிறிய அரசாக துருக்கி மாறியது. மாசிடோனியாவை பிரித்து அளித்ததால் கோபம் கொண்ட பல்கேரியா செர்பியாவையும் கிரீசையும் தாக்கியது. இப்போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டது. இப்போர் இரண்டாம் பால்கன் போர் ஆகும்.

### புகாரெஸ்ட் உடன்படிக்கை

1913 ஆகஸ்ட் திங்களில் இந்த உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையுடன் இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.

### உடனடிக் காரணம்

பாஸ்னியாவிலுள்ள சொராஜிவோ என்னுமிடத்தில் பேரரசின் மகனும் ஆஸ்திரிய–ஹங்கேரிப் பேரரசர் பிரான்ஸ் ஜோசப்பின் மைத்துனருமான **பிரான்ஸ் பெர்டினாண்டு** என்பவர், பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் 1914 ஜூன் 28 அன்று கொல்லப்பட்டார். இந்நிகழ்வை தனக்குச் சாதகமாக்க எண்ணிய ஆஸ்திரியா செர்பியாவைக் கைப்பற்ற திட்டமிட்டது.

செர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யா படைதிரட்டுவதாக ஏற்பட்ட வதந்தியால் ஜெர்மனி, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவற்றின் மீது போர் தொடுக்க திட்டமிட்டது.

இப்போரைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைத்த ஜெர்மனி, நடுநிலைமை வகித்த பெல்ஜியத்தின் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இப்போரில் இங்கிலாந்து பங்கேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

## போரின் போக்குகள்

### மைய நாடுகள் அணி

இந்த அணியில் **ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா** ஆகிய நாடுகள் இடம் பெற்றிருந்தன. தொடக்கத்தில் ஜெர்மனியோடும் ஆஸ்திரியாவோடும் அணிவகுத்திருந்த இத்தாலி பின்னர் விலகியது.

### இத்தாலியின் விலகலுக்கான காரணம்

வடகிழக்கு இத்தாலியில் அமைந்திருந்த **டிரன்டினோ நகர்** ஆஸ்திரிய–ஹங்கேரி அரசின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இத்தாலிய மக்கள் அதிகம் வாழும் அந்தப் பகுதியை மீட்பதற்கு இத்தாலி மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஜெர்மனி ஆதரவளிக்கவில்லை. எனவே இத்தாலி போரிலிருந்து விலகி நடுநிலைமை வகித்தது.

### இலண்டன் ரகசிய ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தம் 1915 ஏப்ரலில் கையெழுத்தானது. வடகிழக்கு இத்தாலியை மீட்பதற்காக **பிரான்ஸ், இங்கிலாந்து** ஆகியவற்றுடன் **இத்தாலியும்** இந்த ஒப்பந்தம் மூலம் கூட்டணி சேர்ந்தது.

போருக்குப் பின்னர் வடகிழக்கு இத்தாலி தனக்குக் கிடைக்கும் என்ற அடிப்படையில் மைய நாடுகளுக்கு எதிரான போரில் இத்தாலி இணைந்தது.

### நேச நாடுகள் அணி

இந்த அணியிலிருந்த ஒன்பது நாடுகளாவன, **ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, அமெரிக்கா, பெல்ஜியம், ருமேனியா, செர்பியா, கிரீஸ், ருமேனியா** மற்றும் **கிரீஸ்** ஆகிய நாடுகள் 1916, 1917–ஆம் ஆண்டுகளில் மைய நாடுகளுக்கு எதிரான போர் அறிவிப்பை செய்தாலும் போரில் அவற்றின் பங்கு குறைவாகவே இருந்தது.

பெரும்பாலான அமெரிக்கர்கள் இந்தப் போரில் தங்கள் நாடு நடுநிலை வகிக்க வேண்டுமென விரும்பியதால் **அமெரிக்கா** முதல் மூன்று ஆண்டுகளுக்கு தார்மீக ஆதரவை நல்கியதுடன் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் பெருமளவில் பொருளுதவி வழங்கியது.

### அமைதி மாநாடுகள்

**ரஷ்ய பேரரசர் இரண்டாம் நிக்கோலஸ்** உலக அமைதிக்கான முயற்சிகளை முன்னெடுத்தார். அவருடைய முயற்சியினால் **1899, 1907** ஆகிய ஆண்டுகளில் ஹாலந்து நாட்டின் **தி ஹேக்** நகரில் இரண்டு முறை அமைதி மாநாடுகள் கூட்டப்பட்டன. அதனால் எந்த விளைவும் ஏற்படவில்லை.

### பிரெஞ்சு முனைப்போர் (மேற்கு முனைப்போர்)

பெல்ஜியத்தைத் தோற்கடித்த ஜெர்மனி பிரெஞ்சுப் படைகளுடன் தனது போரைத் தொடர்ந்தது. நேசநாடுகளின் அணியின் போர்சுமையை ஏற்றுக் கொண்ட பிரெஞ்சுப் படைகள் ஜெர்மனியின் தாக்குதலை எதிர்கொண்ட போதும் பாரீஸ் நகர் ஒரு மாதத்திற்குள் வீழ்ந்துவிடும் அபாயம் ஏற்பட்டது.

### டானென்பர்க், மார்ன் போர்கள்

அதே சமயத்தில் கிழக்குப் பிரஷ்யாவின் மீது படையெடுத்த ரஷ்யப் படைகள் **டானென்பர்க் போரில்** பேரிழப்புகளைச் சந்தித்தன. இருப்பினும் இப்போரினால் பெரிய திருப்பம் ஏற்பட்டு பிரெஞ்சுப் படைகள் மீதான அழுத்தம் குறைந்தது. அதனால் **மார்ன்போரில்** (1914 செப்டம்பர்) பிரெஞ்சுப் படைகள் ஜெர்மனியைத் தோற்கடித்தன. பாரீஸ் நகரம் காப்பாற்றப்பட்டது. மார்ன் போரானது பதுங்குக்குழிப் போரின் தொடக்கமாக அமைந்தது.

**பதுங்குக்குழிப்போர்**

**எதிரிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக போர் வீரர்களால் பதுங்குக் குழிகள் தோண்டப்படும். இப்பதுங்குக் குழிகள் ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும் 2 முதல் 4 குழிகளைக் கொண்டிருக்கும். இணையாக இல்லாமல் குறுக்கு வசத்தில் குழிகள் வெட்டப்பட்டால் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் வீரர்களால் சுட இயலாது. பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள், புதிய வீரர்கள் வருவதற்கு ஏற்றவாறு குழிகள் வெட்டப்பட்டிருக்கும்.**

### வெர்டன் போர்

1916, பிப்ரவரி மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையே ஜெர்மானியர், பிரான்சின் முக்கியக் கோட்டையான வெர்டனைத் தாக்கினர். ஐந்து மாதங்கள் நடைபெற்ற இப்போரில் பங்கெடுத்த 2 மில்லியன் வீரர்களில் சரிபாதி பேர் கொல்லப்பட்டனர்.

**சோம்மி** நதிக்கரையில் ஜெர்மானியருக்கு எதிராக இங்கிலாந்து நடத்திய போர் 4 மாதங்கள் நடைபெற்றது. போரின் முதல் நாளிலேயே **20,000** வீரர்களை இங்கிலாந்து இழந்தது. இருப்பினும் முதல் உலகப்போரில் நேச நாடுகளே வெற்றி பெறும் என்பதை **வெர்டன் போர்** உறுதிசெய்தது.

### ரஷ்ய முனைப்போர் (கிழக்கு முனைப்போர்)

கிழக்கு முனையில் ஆஸ்திரியப் படைகளை மீண்டும் மீண்டும் ரஷ்யப் படைகள் தோற்கடித்தன. அதே சமயம் ரஷ்யப் படைகள் ஜெர்மன் படைகளால் தோற்கடிக்கப்பட்டன.

போதுமான பயிற்சிகள் மற்றும் தேவையான போர்த் தளவாடங்கள் இல்லாமையால் ரஷ்யப் படைகள் பெருமளவு இழப்பைச் சந்தித்தன.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



நாடுகளின் நலன் சார்ந்த அம்சங்கள் மற்றும் முரண்பாடுகளுக்கான காரணங்கள் குறித்து விவாதிக்கப்படுகின்றன. பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களை கொண்டுள்ளது. **அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா** ஆகிய ஐந்து நாடுகளும் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் ஆவர். ஏனைய 10 உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவ்விரு சபைகளும் ஒரு சட்டமன்றத்தைப் போல் செயல்படுகின்றன. ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும் **மறுப்பாணை அதிகாரம்** (Veto Power) உள்ளது. எந்தவொரு முடிவையும் இதன் மூலம் தடுக்க முடியும்.

### நிர்வாக அமைப்புகள்

ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது **செயலகம்** ஆகும். இதன் பொதுச்செயலாளர் பொதுச்சபை மற்றும் பாதுகாப்பு சபையின் பரிந்துரையின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் தனது காபினெட் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் துணையுடன் ஐ.நா. சபையை நடத்துகிறார்.

ஐ.நா. சபையின் நீதிநிர்வாகக் கிளையாக **பன்னாட்டு நீதிமன்றம்** செயல்படுகிறது. இது நெதர்லாந்தில் உள்ள **தி ஹேக்கில்** அமைந்துள்ளது.

**பொருளாதார மற்றும் சமூக மன்றம்** (Economic and Social Council - ECOSOC) ஐ.நா. சபையின் ஐந்தாவது அங்கமாகும். அனைத்துப் பொருளாதார சமூகப் பணிகளை ஒன்றிணைக்கும் இந்த அமைப்பின் துணை அமைப்புகள் ஆசியா பசிபிக், மேற்கு ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற பகுதிகளில் செயல்படுகின்றன. இந்த அமைப்பிற்கு மிகச்சிறந்த பொருளாதார வல்லுநரான **குன்னார் மிர்தால்** போன்றோர் தலைமை வகித்துள்ளனர்.

### ஐ.நா. சபையின் இதர முக்கிய துணை அமைப்புகள்

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (Food and Agricultural Organisation - FAO)
- உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation - WHO)
- ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UN Educational Scientific and Cultural Organisation - UNESCO)

**உறுப்பு நாடுகளின் உதவியுடன் செயல்படும் முக்கிய அமைப்புகள்**

1. ஐ.நா. குழந்தைகள் நிதி நிறுவனம் (United Nations Children's Emergency Fund - UNICEF)
2. ஐ.நா. வளர்ச்சித் திட்டம் (United Nations Development Plan - UNDP)

### ஐ.நா. சபையின் செயல்பாடுகள்

மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம், பாலின சமத்துவம் ஆகியன தற்போது ஐ.நா சபையின் செயல்பாடுகளில் அடங்கியுள்ளன. உலகம் முழுவதிலும் பல்வேறு பகுதிகளில் மோதல்கள் நடைபெற்றபோது ஐ.நா. சபையின் அமைதிப்படை அப்பகுதிகளுக்குச் சென்று பணியாற்றியுள்ளது. அமைதிப்படையில் இந்திய இராணுவம் பணியமர்த்தப்பட்டுள்ளது.

### உலக வங்கி

"பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்" (Bretton Woods Twins) எனப்படும் உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி அமைப்பு ஆகிய இரண்டும் 1944–இல் நடைபெற்ற பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப் பிறகு 1945–இல் நிறுவப்பட்டன. சம எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட இவ்விரு நிறுவனங்களும் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ளன. ஒரு நாடு பன்னாட்டு நிதியமைப்பில் உறுப்பினர் ஆகாமல் உலக வங்கியில் உறுப்பினராக முடியாது.

உலக வங்கியின் இரு முக்கிய பிரிவுகளாவன,

1. புனரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி (International Bank for Reconstruction and Development - IBRD)
2. பன்னாட்டு வளர்ச்சி முகமை (International Development Agency - IDA)

**IBRD**

தொடக்க காலத்தில் இது போரினால் சீர்குலைந்து போன ஐரோப்பிய நாடுகளில் புனரமைப்பை மேற்கொண்ட **மார்ஷல் திட்டத்திற்கு** நிதி வழங்கியது. பின்னர் இதன் செயல்பாடுகள் ஏழை நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது, பல்வேறு நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன் வழங்குவது என விரிவடைந்தது.

**IDA**

வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதியை அரசுகளுக்கு, இந்த அமைப்பு கடனாக வழங்கியது. 50 ஆண்டு கால அளவிற்கு மிகக் குறைந்த வட்டிக்கு வழங்கப்பட்ட இந்தக் கடன்கள் **'மென் கடன்கள்'** (Soft Loans) எனப்பட்டன. வளரும் நாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் அமைப்பு **பன்னாட்டு நிதி வாரியம்** (International Finance Corporation - IFC) எனப்படுகிறது.

**உலக வங்கியின் ஆயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள் (Millennium Development Goals of World Bank)**

- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- கல்லாமையை ஒழிப்பது
- பெண்களை வலிமையுள்ளவர்களாக ஆக்குதல்
- தாய் சேய் நல மேம்பாடு
- சூழலியல் மேம்பாடு
- எய்ட்ஸ் ஒழிப்பு

### பன்னாட்டு நிதியமைப்பு (International Monetary Fund - IMF)

**ஹேரி டேக்ஸ்டர் ஒயிட்** மற்றும் **ஜான் மேனார்டு கெய்ன்ஸ்** என்ற புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்களின் முயற்சியால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. 1945–இல் 29 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பில் தற்போது 189 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

**இந்த அமைப்பின் நோக்கங்கள்**

- உலகம் முழுவதிலும் நிதி மற்றும் வளர்ச்சியின் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்துவது.
- பன்னாட்டு அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பை மேம்படுத்துவது.
- பன்னாட்டு வணிகத்தையும் நாணயச் செலாவணியையும் உறுதியாக வைத்திருத்தல்.
- வேலை வாய்ப்பினை அதிகமாக்குதல்.
- உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது.

**கடன் வழங்கும் முறை மற்றும் நிபந்தனைகள்**

இந்த அமைப்பு சமநிலைப் பிரச்சனைகளை (Balance of Payment Problems) சந்திக்கும் நாடுகளுக்கு கடன் வழங்குகிறது. ஏனெனில் இந்நாடுகளால் தங்கள் இறக்குமதிகளுக்கு பணம் செலுத்த முடிவதில்லை. கடன் வாங்கும் நாடுகளின் வரவு செலவுத் திட்டங்களைச் சுருக்குதல், செலவுகளைச் சுருக்குதல் போன்ற நிபந்தனைகளை இந்த அமைப்பு விதிக்கிறது. இந்நடவடிக்கைகளை வளரும் நாடுகள் விரும்புவதில்லை. இந்த நிபந்தனைகளினால் மக்களுக்கு மானியம் வழங்கும் திட்டங்களை கைவிட வேண்டியுள்ளது என அந்நாடுகள் கருதுகின்றன.

## போருக்குப் பின் ஐரோப்பாவில் மக்கள் நல அரசுகள்

**'மக்கள் நல அரசு'** (Welfare State) என்ற சொற்றொடர், மக்களின் சமூகப் பொருளாதார நலன்களுக்கு அரசே பொறுப்பு என்பதை வரையறை செய்கிறது. இது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவதுடன் அதற்கும் மேலாக மக்கள் நலனுக்கான விரிவான சமூகநலத் திட்டங்களை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக தொழிலாளர்களுக்குப் பணியிடங்களில் எத்தனை மணி நேர வேலை, குறைந்தபட்ச ஊதியம், பாதுகாப்பான பணிச்சூழல் ஆகியவற்றை மக்கள் நல அரசு உறுதி செய்கிறது. மேற்கு ஐரோப்பாவிலுள்ள அனைத்து நாடுகளுமே தற்போது மக்கள் நல அரசுகளாக உள்ளன. அந்நாடுகளில் மக்களுக்கு இலவச மருத்துவமும் சேவைகளும் அளிக்கப்படுகின்றன. இருப்பினும் முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் புதிய



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



குடியேற்றங்கள் ஆகியவற்றால் மக்கள் நல அரசுகள் தற்போது பெரும் அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளன.

1942–இல் **பெவரிட்ஜ் அறிக்கையை** (Beveridge Report) பிரிட்டன் வெளியிட்டது. அந்த அறிக்கையில் வறுமை மற்றும் நோய் ஆகியவற்றை ஒழிப்பதற்காக பொதுமக்களின் வருமானத்தை அதிகரிப்பது, உடல்நலப் பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவை குறித்த திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

போருக்குப் பின்னர் பிரிட்டனில் ஆட்சியமைத்த தொழிலாளர் கட்சி, மக்களுக்கு விரிவான அளவில் தேசிய நலச் சேவையின் மூலம் இலவச மருத்துவ வசதி, முதியோர்களுக்கு ஓய்வூதியம், வேலையற்றவர்களுக்கு உதவித் தொகை போன்ற நிதியுதவிகள், குழந்தை நல சேவைகள், குடும்பநல சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக பல சட்டங்களை இயற்றியது.

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. **ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?**
   - **A)** செப்டம்பர் 2, 1945 **B)** அக்டோபர் 2, 1945
   - **C)** ஆகஸ்டு 15, 1945 **D)** அக்டோபர் 12, 1945

2. **பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார் ?**
   - **A)** ரூஸ்வெல்ட் **B)** சேம்பெர்லின்
   - **C)** உட்ரோ வில்சன் **D)** பால்டுவின்

3. **ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது ?**
   - **A)** க்வாடல்கெனால் போர் **B)** மிட்வே போர்
   - **C)** லெனின்கிரேடு போர் **D)** எல் அலாமெய்ன்போர்

4. **அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது ?**
   - **A)** கவாசாகி **B)** இன்னோசிமா
   - **C)** ஹிரோஷிமா **D)** நாகசாகி

5. **ஹிட்லர் எந்த இன மக்களை மிகவும் கொடுமைப்படுத்தினார்?**
   - **A)** ரஷ்யர்கள் **B)** அரேபியர்கள்
   - **C)** துருக்கியர்கள் **D)** யூதர்கள்

6. **ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார் ?**
   - **A)** சேம்பர்லின் **B)** வின்ஸ்டன் சர்ச்சில்
   - **C)** லாயிட் ஜார்ஜ் **D)** ஸ்டேன்லி பால்டுவின்

7. **எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது ?**
   - **A)** ஜுன் 26, 1942 **B)** ஜுன் 26, 1945
   - **C)** ஜனவரி 1, 1942 **D)** ஜனவரி 1, 1945

8. **பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் எங்கே அமைந்துள்ளது ?**
   - **A)** நியூயார்க் **B)** சிகாகோ
   - **C)** லண்டன் **D)** தி ஹேக்

9. **கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.**
   - i. வட்டித் தொழில் யூதர்களின் முக்கியமான வணிக நடவடிக்கையாகும்.
   - ii. ஹிட்லர் யூதர்களைத் துன்புறுத்தினார்.
   - iii. சித்தரவதை முகாம்களில் யூதர்கள் கொல்லப்பட்டனர்
   - iv. தற்போது ஐக்கிய நாடுகள் சபை 129 நாடுகளை உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

   **சரியான விடையளி :**
   - **A)** (i) (ii) (iii) சரி
   - **B)** (i), (iii) சரி
   - **C)** (iii), (iv) சரி
   - **D)** (i) சரி மற்றும் (ii), (iii), (iv) தவறு

10. **கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணங்களை ஆராய்க.**

   **கூற்று** : குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.

   **காரணம்** : அவர் 1941–இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.

   **சரியான விடையளி :**
   - **A)** கூற்றும் காரணமும் சரி
   - **B)** கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
   - **C)** காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை
   - **D)** காரணம் சரி, ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை.

11. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| **a)** | பிளிட்ஸ்கிரிக் | **1.** | ரூஸ்வெல்ட் |
| **b)** | ராயல் கப்பற்படை | **2.** | ஸ்டாலின் கிரேடு |
| **c)** | கடன் குத்தகை | **3.** | சாலமோன் தீவு |
| **d)** | வோல்கா | **4.** | பிரிட்டன் |
| **e)** | க்வாடல்கெனால் | **5.** | மின்னல் வேகத் தாக்குதல் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 5 | 4 | 1 | 2 | 3 |
| B) | 5 | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 1 | 5 | 3 | 4 |
| D) | 5 | 4 | 1 | 3 | 2 |

### விடைகள்

1. (A) 2. (C) 3. (B) 4. (C) 5. (D)
6. (A) 7. (B) 8. (D) 9. (A) 10. (A)
11. (A)

# அலகு – 4 இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

இரண்டாம் உலகப்போருக்கு பிந்தைய காலகட்டமானது ஐரோப்பிய காலனியப் பேரரசின் வீழ்ச்சியையும் காலனிய ஆட்சிக்குட்பட்ட ஆசிய–ஆப்பிரிக்க நாடுகளின் சுதந்திரத்தையும் துவக்கமாகக் கொண்டிருந்தது. இரண்டாம் உலகப்போர் சீனாவில் முக்கியப் புரட்சி ஏற்படக் காரணமாக இருந்தது.

வல்லரசுகளாக உருவான அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஐக்கிய சோஷலிச நாடுகள் ஆகியவை நடத்திய பனிப் போரினால் கொரியா, கியூபா, வியட்நாம், மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளில் கடும் போர்கள் நடைபெற்றன.

ஐரோப்பாவின் மறுசீரமைப்பை முன்னிறுத்திய மார்ஷல் திட்டத்தின் மூலமாக அமெரிக்க ஐக்கிய நாடு ஐரோப்பாவின் நம்பிக்கையைப் பெற்று மாபெரும் சக்தியாக உருவானது. ஆசிய–ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்தது மூலமாக அந்நாடுகளின் நல்லெண்ணத்தை சோவியத் ரஷ்யா பெற்றது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



வடமேற்கு மாகாணங்கள் மற்றும் அயோத்தியின் பகுதிகளில் முதலாவது உள்நாட்டு கிளர்ச்சி வெடித்தது. இந்த இரு பகுதிகளில் இருந்துதான் அதிகளவில் சிப்பாய்கள் பணியில் சேர்க்கப்பட்டனர். ஆங்கிலேய அரசில் பல சலுகைகளை இழந்த ஜமீன்தார்களும் தாலுக்தார்களும் கிளர்ச்சியில் இணைந்தனர். மேலும் ஆங்கிலேயப் பொருட்களால் வேலையிழந்த இந்திய கைவினைக் கலைஞர்கள் மற்றும் நெசவாளர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இப்புரட்சியில் இணைந்தனர்.

## பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடிய முக்கிய ஆளுமைகள்

பாதிக்கப்பட்ட இந்திய அரசர்கள், நவாபுகள், அரசிகள், ஜமீன்தார்கள் ஆங்கிலேயருக்கு எதிரான இக்கலகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கடைசி பேஷ்வா மன்னரான இரண்டாவது பாஜிராவின் தத்துப்பிள்ளையான **நானா சாகிப்**, கான்பூர் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். அவருக்கு ஓய்வூதியம் தர கிழக்கிந்திய கம்பெனி மறுத்துவிட்டது. லக்னோவில் **பேகம் ஹஸ்ரத் மஹால்**, பரேலியில் **கான் பகதூர்** ஆகியோர் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினர்.

ஜான்ஸியின் ராணி இலட்சுமிபாய் ஆங்கிலேயருக்கு எதிராக மிகவும் தீரத்துடன் போர் புரிந்தார். லட்சுமிபாயின் கணவர் இறந்த பின், வாரிசு இல்லாத காரணத்தினால், வாரிசு இழப்புக் கொள்கையின் கீழ் டல்ஹௌசி பிரபு ஜான்ஸி பகுதியை ஆங்கில அரசுடன் இணைத்தார். இதனை எதிர்த்து, ராணி லட்சுமிபாய் தாம் வீழும் வரை தளர்வடையாமல் போரை நடத்தினார்.

பகதூர் ஷா ஜாபர், கன்வர் சிங், கான் பகதூர் போன்றோரும் இக்கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

> **1857 பெருங்கலகத்தின் முக்கிய அத்தியாயமாகத் திகழ்வது கான்பூர் புரட்சியாகும். கான்பூரில் சுற்றி வளைக்கப்பட்ட கம்பெனி படைகளும் இராணுவ வீரர்களும் நானாசாகிப்பிடம் சரணடைந்தனர். அவர்கள் அலகாபாத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். ஆனால் வழியில் அவர்கள் பயணித்த படகுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அதில் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்பட பயணித்த அனைவரும் மரணித்தனர்.**

## கிளர்ச்சிகள் அடக்கப்படுதல்

1857, ஜூன் மாதத்தில் தில்லி, மீரட், ரோகில்கண்ட், ஆக்ரா அலகாபாத், பனாரஸ் ஆகிய மண்டலங்களின் படைகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. கடுமையான இராணுவச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. அச்சட்டம் இந்தியர்களின் வாழ்வைப் பறிக்கும் அதிகாரத்தை ஆங்கிலேய அதிகாரிகளுக்கு வழங்கியது. அலகாபாத்திலிருந்து கான்பூர் வரை **கர்னல் நீலின்** ஆணைப்படி சென்ற படைகள் வழியில் இந்தியர்களுக்குச் செய்த கொடுமைகள் குறித்து **லண்டன் டைம்ஸ்** பத்திரிகையின் செய்தியாளர் **வில்லியம் ஹோவார்ட் ரஸ்ஸல்** எழுதியுள்ளார். அவை,

- பேரணி ஆரம்பித்த 2 நாட்களில் சாலை ஓரத்தில் 42 இந்தியர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- மேலும் படைகளின் அணிவகுப்பைப் பார்த்து ஏளனம் செய்த 12 இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.
- விளையாட்டாக கிளர்ச்சியாளர்களின் கொடிகளை கையில் வைத்திருந்த சிறுவர்களைக் கூட விடாமல் கொன்றுவிட்டனர்.
- கண்ணில் தென்பட்ட இந்தியர்கள் சுடப்பட்டனர் அல்லது சாலையோர மரங்களில் தூக்கிலிடப்பட்டனர். கிராமங்கள் தீக்கிரையாகின.

## தோல்விக்கான காரணங்கள்

- 1857–ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சியானது தானாக நடந்ததே தவிர, திட்டமிட்டோ, ஒருங்கிணைக்கப்பட்டோ நடைபெறவில்லை.
- ஒரு சில மாநிலங்களைத் தவிர, ஏனைய மாநிலங்களின் இளவரசர்கள் இக்கிளர்ச்சியில் பங்கேற்க விரும்பவில்லை. பெரும்பாலும் அவர்கள் ஐந்தாம் படையாக செயல்பட்டனர்.
- கிளர்ச்சியாளர்களிடம் போதுமான அளவு ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் இல்லை.
- ஆங்கில அறிவு பெற்ற நடுத்தர வகுப்பு இந்தியர்கள் கிளர்ச்சிக்கு ஆதரவு தரவில்லை.
- சரியான தலைமை இல்லாதது முதன்மைக் காரணமாக இருந்தது. ஒருங்கிணைந்த அமைப்பு இல்லாமை, உதவியாளர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டது ஆகிய காரணங்களால் கிளர்ச்சியின் தலைவர்கள் தோல்வியடைந்தனர். 1857–இன் பிற்பகுதியில் ஆங்கிலேயர் தில்லியைக் கைப்பற்றி, பகதூர் ஷாவை பர்மாவிற்கு நாடு கடத்தினர்.

## பிரிட்டிஷ் அரசின் நேரடி நிர்வாகம்

1857 பெருங்கலகத்தின் விளைவாக 1850–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசு சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தின் கீழிருந்த இந்தியா, பிரிட்டிஷ் அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் ஆங்கிலேயரின் காலனி நாடாக மாறியது.

## நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்

விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையில், இந்திய பாரம்பரிய நிறுவனம் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்றும் அரசுப் பணியில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் உறுதிமொழி அளிக்கப்பட்டது.

### இந்திய இராணுவத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்

- இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது.
- முக்கியமான பதவிகள் மற்றும் பொறுப்புகளில் இருந்து இந்தியர்கள் நீக்கப்பட்டனர்.
- 1857 பெருங்கலகத்தின் போது ஆங்கிலேயருக்கு விசுவாசமாக இருந்தவர்களை மட்டும் காலாட்படையில் சேர்த்துக் கொண்டனர்.
  (எ.கா) இராஜபுத்திரர்கள், பிராமணர்கள், வடஇந்திய முஸ்லீம்கள் ஆகியோரை விலக்கி விட்டு கூர்க்காக்கள், சீக்கியர்கள், பதான்கள் போன்றோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

### பிரித்தாளும் கொள்கை

இந்திய சமூகத்தின் சாதி, மதம், மொழி மற்றும் மண்டல வேறுபாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர்கள் இந்தியர்களிடையே பிரித்தாளும் கொள்கையை நடைமுறைப்படுத்தினர்.

## பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் விவசாயிகளின் கிளர்ச்சி

### கருநீலச் சாய கிளர்ச்சி [இண்டிகோ – 1859-1860]

செயற்கை நீலச்சாயம் உருவாக்கப்படுவதற்கு முன் இயற்கையான கருநீலச் சாயம் உலகம் முழுவதும் இருந்த ஆடை தயாரிப்பாளர்களால் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டது. ஐரோப்பியர்களில் பலர் இந்தியாவில் இண்டிகோ தோட்டக்காரர்களாக மாறுவதன் மூலம் தங்கள் செல்வத்தை ஈட்ட முயன்றனர். அவர்கள் இண்டிகோவைப் பயிரிட இந்திய விவசாயிகளைப் பணியில் அமர்த்தினர். பின்னர் அது சாயமாக மாற்றப்பட்டு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. விவசாயிகள் உணவுத் தானியப் பயிர்களுக்குப் பதிலாக இப்பயிரை பயிரிடுமாறு நிர்பந்திக்கப்பட்டனர். ஆங்கிலேய முகவர்கள் பயிரிடுவோருக்கு தேவையான ரொக்கத்தை முன்பணமாகக் கொடுத்தனர். ஆனால் இந்தத் தொகை வட்டியுடன் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். இண்டிகோ பயிருக்கு மிகக்குறைந்த விலையையே ஆங்கிலேயர்கள் கொடுத்தனர். இதனால் விவசாயிகளால் தாங்கள் வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியவில்லை.

இதனால் 1859–ஆம் ஆண்டு இண்டிகோ கிளர்ச்சி தொடங்கியது. வங்காளத்தின் **நடியா** மாவட்டத்தின் ஒரு கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் இப்பயிரை பயிரிடப் போவதில்லை என வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவ்வேலை நிறுத்தம் பிற பகுதிகளுக்கும் பரவி பின்னர் கிளர்ச்சியாக உருவெடுத்தது. இந்து மற்றும் இஸ்லாமிய விவசாயிகளுடன் இக்கிளர்ச்சியில் பெண்களும் பங்கேற்றனர். ஆங்கிலேய முகவர்களின் கொடுமைகள் குறித்து கல்கத்தாவில் வாழ்ந்த அப்போதைய



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



இந்தியப் பத்திரிகையாளர்கள் எழுதினார்கள். **தீன பந்து மித்ரா** என்பவர் நீல் தர்ப்பன் (இண்டிகோவின் கண்ணாடி) என்ற தலைப்பில் எழுதிய நாடகமானது, இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்த மக்களிடையே இண்டிகோ விவசாயிகள் குறித்த பிரச்சனைகளை கவனத்தில் கொண்டு வர பயன்பட்டது. வங்காளத்தில் இண்டிகோ விவசாயம் பெரும் வீழ்ச்சியடைந்தது. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்கையான இண்டிகோ சாயம் உற்பத்தி சரிந்து செயற்கையான நவீன நீலச் சாயங்கள் பயன்பாட்டுக்கு வந்தன.

### தக்காண கலவரங்கள் 1875

1875–இல் மே மாதத்தில் தக்காணத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோருக்கு எதிரான கலவரங்கள் முதன்முதலாக பூனா அருகேயுள்ள **சூபா** என்ற கிராமத்தில் வெடித்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பூனா மற்றும் அகமது நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 30 கிராமங்களில் இதே போன்ற கலவரங்கள் ஏற்பட்டதாகப் பதிவாகியுள்ளது.

குஜராத்தில் வட்டிக்கு பணம் கொடுப்பவர்களை குறிவைத்துதான் பெரும்பாலும் இக்கலவரங்கள் நடந்தன.

ஆங்கிலேய ஆட்சியின் கீழ் விவசாயிகள் நேரடியாக வருவாயை அரசுக்கு செலுத்த நிர்பந்திக்கப்பட்டனர். மேலும் புதிய சட்டத்தின்படி அடமானம் வைக்கப்பட்ட நிலத்தை ஏலம் விட்டு கடன்தொகையை எடுத்துக்கொள்ள கடன் வழங்கியோருக்கு அனுமதி கிடைத்திருந்தது. இதனால் விவசாயிகளிடமிருந்து நிலங்கள் கைமாறின.

மானிடவியலாளர் **கேத்லீன் கௌ** என்பவர் "முகலாயர்கள் காலத்தில் இருந்ததை விட விவசாயிகள் அதிக வேதனை மற்றும் இடர்ப்பாடுகளை சந்தித்தனர்" என்று கூறியுள்ளார்.

விவசாயிகளின் பிரச்சனைகள் உள்ளூர் கலவரங்களில் தொடங்கி போர் வரை பல மாவட்டங்களுக்குப் பரவியது. இது ஆங்கிலேய ஆட்சியின் முதல் காலாண்டுகளில் கடும் விளைவுகளைச் சந்தித்து பின்னர் 19–ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது என **ரனஜித் குகா** குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய தேசிய காங்கிரஸ்

### தேசியத்தின் எழுச்சி

19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர்களின் மத்தியில் தேசிய அரசியல் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது. அவர்கள் வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அல்லது மருத்துவர்களாகப் பணியாற்றினர்.

**அவர்கள் தொடங்கிய அமைப்புகள்**

- சென்னைவாசிகள் சங்கம் (1852)
- கிழக்கிந்திய அமைப்பு (1866)
- சென்னை மகாஜன சபை (1884)
- பூனா சர்வஜனிக் சபை (1870)
- பம்பாய் மாகாண சங்கம் (1885)

### காலனி ஆட்சியில் இந்தியப் பொருளாதாரம்

காலனி ஆட்சியில் இந்தியா பொருளாதார ரீதியாகக் கட்டுப்படுத்தப்பட்டதுடன் பிரிட்டனின் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களை அனுப்பும் ஒரு அனுப்புநராக மாற்றம் பெற்றது. பிரிட்டிஷாரின் மூலதனத்தை முதலீடு செய்யவும், ஆங்கிலேய உற்பத்தி பொருள்களைக் கொண்டு சேர்க்கும் சந்தையாகவும் இந்தியா மாற்றப்பட்டது. இந்தியாவிற்கு எவ்வித ஆதாயமும் இன்றி, இந்திய வளங்கள் பிரிட்டனுக்கு சென்றது **'செல்வச் சுரண்டல்'** என இந்தியர்கள் கூறினர்.

தாதாபாய் நௌரோஜி, நீதிபதி ரானடே மற்றும் ரொமேஷ் சந்திர தத் ஆகியோர் காலனி ஆட்சியின் செல்வச் சுரண்டல் பற்றி விமர்சனம் செய்தனர். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு காலனி ஆதிக்கம் தடையாக உள்ளது என்று அவர்கள் கூறினர்.

### இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கம்

பம்பாய், மதராஸ், கல்கத்தா ஆகிய மூன்று மாகாணங்களிலும் அரசியல் ரீதியாக தீவிரத்துடன் இருந்த கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக **1885–ஆம்** ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸை **A.O. ஹியூம்** உருவாக்கினார். இதன் முதல் தலைவராக **உமேஷ் சந்திர பானர்ஜி** இருந்தார். 1885, டிசம்பர் 28 அன்று இதனுடைய முதல் அமர்வு **பம்பாயில்** நடைபெற்றது.

**இந்திய தேசிய காங்கிரஸின் முக்கியக் கோரிக்கைகள்**

- மாகாண மற்றும் மத்திய அளவில் சட்ட மேலவைகளை உருவாக்க வேண்டும்.
- சட்ட மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.
- நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையைப் பிரிக்க வேண்டும்.
- இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.
- உள்நாட்டு வரிகளைக் குறைக்க வேண்டும்.
- நீதிபதி மூலமாக விசாரணையை விரிவு செய்ய வேண்டும்.
- ஒரே நேரத்தில் இந்தியா மற்றும் இங்கிலாந்தில் ஆட்சிப் பணித் தேர்வுகளை நடத்த வேண்டும்.
- காவல்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.
- வனச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.
- இந்தியத் தொழிற்சாலைகளில் முறையற்ற கட்டணங்கள் மற்றும் கலால் வரிகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

### தீவிர தேசியவாதம்

தொடக்ககால தேசியவாதிகளின் கோரிக்கைகள் ஆங்கிலேய அரசால் நிறைவேற்றப்படவில்லை. மிதவாத தேசியவாதிகளால் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதால் 'தீவிர தேசியவாதிகளால்' மிதவாத தேசியவாதிகள் விமர்சிக்கப்பட்டனர். உயரடுக்கு மக்கள் மற்றும் சாதாரண மக்களிடையே இருந்த இடைவெளியை நீக்குவதற்கு தீவிர தேசியவாதிகள் முயற்சி செய்தனர். ஆங்கிலேயரின் செல்வச் சுரண்டலை எதிர்த்துப் போராடுவதற்கு தீவிரவாதத் தன்மை கொண்ட செயல்பாடுகள் தேவை என்று உணர்ந்தனர்.

### வங்கப்பிரிவினை

1899–இல் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக(வைஸ்ராய்) கர்சன் பிரபு நியமிக்கப்பட்டார். இந்தியாவில் நிலவிய பஞ்சம் மற்றும் பிளேக் நோய் ஆகியவற்றை நீக்குவதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்ளவில்லை.

உள்ளாட்சி அமைப்பு, உயர்கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி ஆகியவற்றை குறைத்து மதிப்பிட்டதுடன், பத்திரிகைச் சுதந்திரத்தை தடுத்தார். 1905–இல் ஏற்பட்ட வங்கப்பிரிவினை மக்களிடையே பெரும் அதிருப்தியை உருவாக்கியது. இந்துக்கள், முஸ்லீம்கள் இடையே பிளவை உருவாக்கி, வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற அரசியல் நடவடிக்கைகளை அடக்குவதற்கு வங்கப்பிரிவினை நிகழ்ந்தது. ஆனால் இந்தியா முழுவதும் விரிவான போராட்டங்கள் நடைபெற வங்கப்பிரிவினை வழிவகுத்தது.

### இந்து–முஸ்லீம் பிரிவினை

வங்காளத்தைப் பிரித்து இரண்டு நிர்வாகப் பிரிவுகளாக மாற்றிய கர்சன் பிரபு, வங்காள மொழி பேசும் மக்களை சிறுபான்மையினர் என்ற அளவிற்கு அவர்களின் தகுதியைக் குறைத்தார். கிழக்கு வங்காளம் என்று உருவாக்கப்பட்ட புதிய மாகாணத்தில் முகலாயர் ஆட்சிக் காலத்தை விட முஸ்லீம்கள் சிறப்பாக வாழ்வார்கள் என உறுதியளித்தார். ஆனால் ஆங்கிலேயரின் எண்ணங்களுக்கு மாறாக, இந்து–முஸ்லீம் ஒற்றுமை உணர்வு அதிகமானது. அதற்கு வட்டார மொழிப் பத்திரிகைகள் பெரும் பங்காற்றின.

வங்கப்பிரிவினை பற்றி பேச்சு எழுந்தபோதே மிதவாத தேசியவாதிகள், தீவிரவாத தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவினரும் அதனை எதிர்த்தனர். வங்கப்பிரிவினைக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றன. இருப்பினும் 1905 ஜூலை 19–இல் வங்கப்பிரிவினை அறிவிக்கப்பட்டது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**7. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய நீதிக்கட்சியால் நிறுவப்பெற்றது.**

**A)** பணியாளர் தேர்வு வாரியம்

**B)** பொதுப்பணி ஆணையம்

**C)** மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம்

**D)** பணியாளர் தேர்வாணையம்

**8. சென்னை மாகாணத்தில், ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து முதன், முறையாகச் சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**A)** எம்.சி. ராஜா **B)** இரட்டைமலை சீனிவாசன்

**C)** டி.எம். நாயர் **D)** பி. வரதராஜுலு

**Directions (9 – 10) : சரியான கூற்றைத் தேர்க.**

**9.** **i.** மிக முன்னதாகவே வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812–இல் வெளியிடப்பட்டது.

**ii.** பனையோலைகளில் எழுதப்பெற்ற பல்வேறு தமிழ் இலக்கண இலக்கிய கையெழுத்துப் பிரதிகளை மறைமலையடிகள் சேகரித்துத் தொகுத்தார்.

**iii.** இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையில் இல்லாத ஒப்புமை திராவிட மொழிகளுக்கிடையே நெருக்கமாக நிலவுவதை நிரூபித்தார். தமிழின் தொன்மையையும் நிரூபித்தார்.

**iv.** திரு.வி. கல்யாணசுந்தரம் தொழில் சங்க இயக்கத்தின் தொடக்ககால முன்னோடியாக இருந்தார்.

**சரியான விடையளி :**

**A)** **(i), (ii)** ஆகியவை சரி **B)** **(i), (iii)** ஆகியவை சரி

**C)** **(iv)** மட்டும் சரி **D)** **(ii), (iii)** ஆகியன சரி

**10.** **i.** இந்தியப் பெண்கள் சங்கத்தைத் தோற்றுவித்ததில் மார்கரட் கசினும் ஒருவராவார்.

**ii.** பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் தானே உருவாக்கிய சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்கள் அமைப்புகளின் மூலமாக மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்வதில் செலவழித்தார்.

**iii.** சிங்காரவேலர் இந்து மகாசபையின் தீவிர ஆதரவாளர் ஆவார்.

**iv.** தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறை வடக்கேயிருந்து வந்த பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் உறுதிபடக் கூறினார்.

**சரியான விடையளி :**

**A)** **(iii), (iv)** ஆகியன சரி

**B)** **(ii), (iii), (iv)** ஆகியன சரி

**C)** **(i), (ii), (iv)** ஆகியன சரி

**D)** **(ii), (iii)** ஆகியன சரி

**Directions (11 – 12) : கீழ்க்கண்ட கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.**

**11. கூற்று** : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.

**காரணம்** : இக்காலகட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது.

**சரியான விடையளி :**

**A)** காரணம், கூற்று ஆகியவை சரி

**B)** கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல

**C)** காரணம், கூற்று இரண்டுமே தவறு

**D)** காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை

**12. கூற்று** : முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த போது, ஆங்கில அரசாங்கம் இந்தியாவில் போருக்குப் பின்னர், பிரதிநிதித்துவ நிறுவனங்களை அறிமுகம் செய்வது குறித்துப் பரிசீலனை செய்து கொண்டிருந்தது.

**காரணம்** : 1920–இல் இரட்டையாட்சியானது ஒரு அரசுமுறையாக மாகாணங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**சரியான விடையளி :**

**A)** கூற்று சரி ஆனால் காரணம் சரியானதல்ல

**B)** காரணம், கூற்று ஆகிய இரண்டுமே தவறு

**C)** காரணம் கூற்று இரண்டுமே சரி

**D)** கூற்று தவறு காரணத்துடன் பொருந்தவில்லை

**13. பொருத்துக.**

| | |
|---|---|
| **a)** திராவிடர் இல்லம் | **1.** மறைமலையடிகள் |
| **b)** தொழிலாளன் | **2.** இரட்டைமலை சீனிவாசன் |
| **c)** தனித்தமிழ் இயக்கம் | **3.** சிங்காரவேலர் |
| **d)** ஜீவிய சரித சுருக்கம் | **4.** நடேசனார் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 4 | 3 | 1 | 2 |
| **B)** | 2 | 1 | 4 | 3 |
| **C)** | 4 | 3 | 2 | 1 |
| **D)** | 4 | 1 | 2 | 3 |

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. (C) | 2. (C) | 3. (A) | 4. (C) | 5. (A) |
| 6. (A) | 7. (A) | 8. (A) | 9. (B) | 10. (C) |
| 11. (B) | 12. (C) | 13. (A) | | |



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com

# புவியியல்

## அலகு – 1

# இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

- இந்தியா பரப்பளவில் உலகின் '**ஏழாவது**' பெரிய நாடாகவும், ஆசியா கண்டத்தில் '**இரண்டாவது**' பெரிய நாடாகவும் உள்ளது.
- இந்தியா, ஏனைய ஆசியப்பகுதிகளில் இருந்து இமயமலையால் பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் நிலப்பரப்பு **32,87,263 ச.கி.மீட்டர்** ஆகும். இது புவியின் மொத்தப் பரப்பளவில் **2.4 சதவீதம்** ஆகும்.

## இந்தியாவின் நிலம் மற்றும் நீர் எல்லைகள்

### நில எல்லைகள்

| | |
|---|---|
| மேற்கு | பாகிஸ்தான் |
| வடமேற்கு | ஆப்கானிஸ்தான் |
| வடக்கு | சீனா, நேபாளம், பூடான் |
| கிழக்கு | வங்காளதேசம், மியான்மர் |

- நில எல்லைகளின் மொத்தப்பரப்பளவு 15,200 கி.மீ
- இந்தியா '**அதிகபட்சமாக வங்காளதேசத்துடன்**' **4156 கி.மீ** நீளமுள்ள நில எல்லையைக் கொண்டுள்ளது. '**குறைந்த பட்சமாக ஆப்கானிஸ்தானுடன்**' **106 கி.மீ** நீளமுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளது.

### நீர் எல்லைகள்

| | |
|---|---|
| கிழக்கு | வங்காள விரிகுடா |
| மேற்கு | அரபிக்கடல் |
| தெற்கு | இந்தியப் பெருங்கடல் |

- இந்தியாவின் மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டு சுமார் 6100 கி.மீ நீளமுள்ள நீண்ட கடற்கரைப் பகுதியை மூன்று பக்கங்களிலும் கொண்டுள்ளது.
- இந்தியக் கடற்கரையின் மொத்த நீளம் மற்றும் தீவுக்கூட்டங்களையும் சேர்த்து 7516.6 கி.மீ ஆகும்.
- இந்தியாவையும் இலங்கையும் பிரிக்கும் எல்லை '**பாக் நீர்சந்தி**' ஆகும்.

## உலக அளவில் இந்தியாவின் அமைவிடம்

- ஆசியாவின் '**தென்பகுதியிலும்**' கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவிற்கு '**மத்தியப் பகுதியிலும்**' அமைந்துள்ளது.
- மேற்கிலுள்ள ஐரோப்பிய நாடுகளையும், கிழக்காசிய நாடுகளையும் இந்தியாவுடன் இணைக்கும் பாலமாக '**பெருங்கடல் வழிப்பாதை**' அமைந்துள்ளது.
- மேற்கு ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் பாலமாக இந்தியாவின் '**மேற்குக் கடற்கரை**' அமைந்துள்ளது.
- தென்கிழக்கு மற்றும் கிழக்காசிய நாடுகளை இணைக்கும் பாலமாக இந்தியாவின் '**கிழக்குக் கடற்கரை**' அமைந்துள்ளது.

## இந்தியா – துணைக்கண்டம்

### இந்திய துணைக்கண்டத்தின் அமைப்பு

- பாகிஸ்தான், மியான்மர், வங்காளதேசம், நேபாளம், பூடான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் இணைந்தது இந்திய துணைக்கண்டம் ஆகும்.
- இது வடக்கு, வடமேற்கு மற்றும் வடகிழக்கு மலைத் தொடர்களாலும், தெற்கே கடல்களாலும் சூழப்பட்டுள்ளது.

### துணைக்கண்டம் என்று அழைக்கப்படுவதற்கான காரணம்

- ஒரு கண்டத்தில் காணப்படக்கூடிய இயற்கை நில அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், கனிமங்கள் மற்றும் மனிதவளங்கள் போன்ற அனைத்தையும் இந்தியா கொண்டுள்ளதால், 'துணைக்கண்டம்' எனப்படுகிறது.

## புவியின் அளவில் இந்தியாவின் அமைவிடம்

- 8° 4' வட அட்சம் முதல் 37° 6' வட அட்சம் வரையிலும், 68° 7' கிழக்கு தீர்க்கம் முதல் 97° 25' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.
- அட்ச தீர்க்க பரவலின்படி இந்தியா முழுமையும் வடகிழக்கு அரைக்கோளத்தில் அமைந்துள்ளது.

## இந்திய திட்டநேரம்




- மேற்கில் உள்ள **குஜராத் முதல்** கிழக்கில் உள்ள **அருணாச்சலப் பிரதேசம் வரை** இந்தியா ஏறத்தாழ 30 **தீர்க்கக் கோடுகளைக்** கொண்டுள்ளது.
- புவியானது தன் அச்சில் சுழன்று 24 மணிநேரத்தில் 360 தீர்க்ககோடுகளைக் கடக்கிறது.
- புவியானது, 1° தீர்க்கக் கோட்டை கடக்க எடுத்துக்கொள்ளும் கால அளவு 4 நிமிடங்கள் ஆகும்.
- மேற்கே உள்ள குஜராத்திற்கும் (68° 4'கி) கிழக்கே உள்ள அருணாச்சலப் பிரதேசத்திற்கும் (97° 25'கி) இடையே உள்ள தீர்க்கக்கோடு 29° 18' ஆகும்.
- இரண்டு பகுதிகளுக்கும் உள்ள தலநேர வேறுபாடு = 29.18 × 4 = 1 மணி 57 நிமிடங்கள் 12 விநாடிகள்.
- இதனால் அருணாசலப் பிரதேசத்தில், குஜராத்தைக் காட்டிலும் 2 மணிநேரம் முன்னதாகவே சூரியன் உதயமாகிறது.
- இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக, இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான 82° 30' கிழக்குத் தீர்க்கரேகையின் தலநேரம், இந்திய திட்டநேரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



- ஏழை மக்களுக்கு மலிவான உணவாக விளங்குகிறது.
- பெரும்பாலான பகுதிகளில் கால்நடை தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது.
- மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் முதன்மையான உற்பத்தியாளர்களாகும்.

**கம்பு**

- இது ஆப்பிரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்ட பயிராகும்.
- வறண்ட பகுதிகளில் நன்கு வளரக்கூடியது. ஏழை மக்களின் முக்கிய உணவுப் பயிராகும்.
- இதன் தண்டுப் பகுதி கால்நடைகளுக்குத் தீவனமாகவும், வீட்டிற்கு கூரை வேய்வதற்கும் பயன்படுகிறது.
- இராஜஸ்தான் முதன்மை உற்பத்தியாளராக விளங்குகிறது.
- உத்திரப்பிரதேசம், ஹரியானா, குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை அதிக உற்பத்தியைத் தரும் மாநிலங்களாகும்.

**வாற்கோதுமை (பார்லி)**

- இது ஏழைகளின் முக்கிய உணவாக மட்டுமில்லாமல், பார்லி நீர், பீர் மற்றும் விஸ்கி தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.
- இராஜஸ்தான் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகியவை முதன்மை உற்பத்தியாளர்களாக விளங்கும் மாநிலங்களாகும்.

**பருப்பு வகைகள்**

- அவரை இனத்தைச் சேர்ந்த இவை புரதச்சத்து நிறைந்ததாகும். மனிதர்களுக்கு உணவாகவும், கால்நடைகளுக்குத் தீவனமாகவும் பயன்படுகிறது.
- இவை வளிமண்டல நைட்ரஜனை கிரகித்து மண் வளத்தை அதிகரிப்பதால், 'பயிர்சுழற்சி பயிரிடல்' முறையில் பயிரிடப்படுகிறது.
- உலக அளவில் பருப்பு உற்பத்தியில் இந்தியா முதலிடத்தை வகிக்கிறது.
- மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசம் போன்றவை பருப்பு உற்பத்தியில் முதன்மை மாநிலங்களாகும்.

### வாணிபப் பயிர்கள்

- வணிக நோக்கத்திற்காக பயிரிடப்படுபவை ஆகும்.

**கரும்பு**

- இது இந்தியாவின் மிக முக்கியமான வாணிபப் பயிராகும்.
- உலக அளவில் கரும்பு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- சர்க்கரைத் தொழிற்சாலைக்கு மூலப் பொருளை வழங்குகிறது. சர்க்கரை உற்பத்தியில் கியூபா மற்றும் பிரேசிலுக்கு அடுத்து இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- வெல்லம், நாட்டுச் சர்க்கரை தயாரிக்கவும் சாராயத் தொழிற்சாலைகளுக்கும் கரும்பு பயன்படுகிறது.
- கரும்புச் சக்கை காகிதம் தயாரிக்கப் பயன்படுகிறது.
- உத்திரப்பிரதேசம் முதன்மை உற்பத்தியாளராகும்.
- மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவை அதிகளவில் கரும்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

**பருத்தி**

- பருத்தி உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.
- குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்கள் மொத்த பருத்தி உற்பத்தியில் 79% பங்களிப்பை வழங்குகின்றன.

**சணல்**

- இது ஒரு வெப்பமண்டல இழைப்பயிராகும். வண்டல் மண்ணில் நன்கு வளரும்.
- சணல் உற்பத்தியில் மேற்கு வங்கம் முதலிடத்தை வகிக்கிறது.
- பீஹார், அஸ்ஸாம் மற்றும் மேகாலயா ஆகியவை சணல் பயிரிடும் பிற மாநிலங்களாகும்.

**சணல்நார் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்கள்**

- கோணிப்பைகள், கம்பளங்கள், கயிறு, நூலிழைகள்,போர்வைகள், துணிகள், தார்பாலின், திரைச்சீலைகள்.

**எண்ணெய் வித்துக்கள்**

**முக்கிய எண்ணெய் வித்துக்கள் :** நிலக்கடலை, கடுகு, எள், ஆளி விதை, சூரியகாந்தி, ஆமணக்கு, பருத்தி விதைகள், நைஜர் விதைகள்.

- இவற்றிலிருந்து கிடைக்கும் எண்ணெய் மற்றும் பிண்ணாக்குகள் மூலம் தயாரிக்கப்படும் பொருள்களாவன : மசகு எண்ணெய், வார்னிஷ், மருந்துப் பொருள்கள், வாசனைப் பொருள்கள், மெழுகு, சோப்பு, உரம், கால்நடைத் தீவனம்.
- குஜராத் மாநிலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.
- எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் பிற முக்கிய மாநிலங்கள் இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசம்.
- நிலக்கடலை உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாமிடம் வகிக்கிறது.

### தோட்டப்பயிர்கள்

- இவை ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் மலைச்சரிவுகளில் பயிரிடப்படுகிறது.
- தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனைப் பொருள்கள் இந்தியாவின் முக்கியத் தோட்டப் பயிர்களாகும்.

**தேயிலை**

| | |
|---|---|
| **காலநிலை** | அயன மண்டல மற்றும் உபஅயன மண்டல காலநிலைகளில் வளரும். |
| **தேவையான சூழல்** | மிதமான நிழல், அதிகளவு மழை |
| **இந்தியாவில் பயிரிடப்படும் வகைகள்** | 1. **பூகி** (BOHEA) – சீனாவின் பிறப்பிடம்<br>2. **அசாமிகா** (ASSAMICA) – இந்தியாவின் பிறப்பிடம் |
| **உற்பத்தியில் முதன்மை மாநிலம்** | அசாம் |
| **பிறமாநிலங்கள்** | தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் |
| **உலக அளவில் உற்பத்தி** | சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடம் |

**காபி**

| | |
|---|---|
| **விளையும் இடம்** | கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீ முதல் 1500 மீ உயரம் கொண்ட மலைச்சரிவுகள் |
| **தேவையான சூழல்** | நிழல்களில் நன்றாக வளரும் |
| **இந்தியாவில் பயிரிடப்படும் வகைகள்** | 1. **அராபிகா** – தரம் மிக்கது. இந்தியாவில் பயிரிடப்படுகிறது.<br>2. **ரொபஸ்டா** – தரம் குறைந்தது. |
| **உற்பத்தியில் முதன்மை மாநிலம்** | கர்நாடகம் – இம்மாநிலம் இந்திய உற்பத்தியில் 71 சதவீதத்தையும் உலக உற்பத்தியில் 2.5 சதவீதத்தையும் அளிக்கிறது |
| **உலக அளவில் உற்பத்தி** | இந்தியா 7–ஆவது இடத்தை வகிக்கிறது |



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



இரப்பர்

| | |
|---|---|
| காலநிலை | வெப்ப ஈரப்பத அயனமண்டல காலநிலை. வெப்பநிலை 20°C–க்கும் அதிகம். மழைப்பொழிவு 300 செ.மீக்கும் மேல். |
| முதன்முதலில் பயிரிடப்பட்ட மாநிலம் | கேரளா (1902) |
| உற்பத்தி செய்யும் மாநிலங்கள் | கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, அந்தமான் நிக்கோபார் தீவுகள் |

நறுமணப் பயிர்கள்

| | |
|---|---|
| இந்தியாவில் விளையும் முக்கிய நறுமணப் பொருள்கள் | மிளகு, மிளகாய், மஞ்சள், இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், பட்டை, பாக்கு. |
| உற்பத்தியில் முதன்மை மாநிலம் | கேரளா |
| பயன்கள் | உணவிற்கு சுவையூட்டியாகவும், மருந்துப் பொருள்கள் மற்றும் சாயங்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. |

## தோட்டக்கலை பயிர்கள்

| | |
|---|---|
| உலக அளவில் உற்பத்தி | தோட்டக்கலை பயிர்களான பழங்கள் மற்றும் காய் வகைகள் உற்பத்தியில் இந்தியா இரண்டாமிடம் வகிக்கிறது. உலக அளவில் காய் வகைகள் உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு 13% |
| ஆப்பிள் | இமாச்சலப்பிரதேசம், ஜம்மு & காஷ்மீர், உத்தரகாண்ட் |
| வாழை | தமிழ்நாடு, கர்நாடகா |
| ஆரஞ்சு மற்றும் திராட்சை | மகாராஷ்டிரா, உத்தரகாண்ட், இமாச்சலப்பிரதேசம், ஜம்மு – காஷ்மீர், தமிழ்நாடு, கர்நாடகா |

## கால்நடைகள்

- உலகின் மொத்த கால்நடைகளில் 11.6 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளது.
- இந்தியாவில் மொத்த கால்நடைகளில் மாடுகள் 37.3 சதவீதமாகும்.
- உலக அளவில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா, மாடுகள் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

**இந்தியாவில் காணப்படும் மாடு இனங்கள் :** 1. பால் இனம், 2. இழுவை இனம், 3. கலப்பு அல்லது பொது இனம்.

- 'ஏழை மக்களின் பசு' என்றழைக்கப்படும் வெள்ளாடுகள் நாட்டின் இறைச்சிக்கு முக்கிய ஆதாரமாக உள்ளது.
- இந்தியாவில் பால் உற்பத்தியின் முக்கிய ஆதாரமாக எருமைகள் உள்ளன.

## கால்நடைக் கணக்கெடுப்பு

- இந்தியாவின் முதல் கால்நடைக் கணக்கெடுப்பு 1919–இல் எடுக்கப்பட்டது.
- இந்த கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படுகிறது.
- இறுதிக் கணக்கெடுப்பு 2017–இல் எடுக்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசு மாநில அளவிலான கால்நடைக் கணக்கெடுப்பை **கால்நடை வளர்ப்புத் துறை** உதவியுடன் மேற்கொள்கிறது.
- மாவட்ட அளவிலான கணக்கெடுப்பு மண்டல இயக்குநர் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
- இக்கணக்கெடுப்புகள் மத்திய அரசின் **வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, மீன் வளத்துறை** போன்றவற்றின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்படுகிறது.

**கால்நடை வளர்ப்பில் முதல் 5 மாநிலங்கள் :** 1. உத்திரப் பிரதேசம் 2. இராஜஸ்தான் 3. ஆந்திரப்பிரதேசம் 4. மத்தியப்பிரதேசம் 5. பீஹார்

**இந்தியாவில், எண்ணிக்கை அடிப்படையில் முதல் 5 கால்நடைகள் :** 1. மாடுகள் 2. வெள்ளாடுகள் 3. எருமைகள் 4. செம்மறியாடுகள் 5. பன்றிகள்

## மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடித் தொழில்

- மீன்பிடித் தொழிலானது இந்தியாவின் கடலோர மாநிலங்களில் 14 மில்லியன் மக்கள்தொகைக்கும் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறது.
- உலக மீன் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா (3%) இரண்டாம் இடத்தில் உள்ளது.
- இந்திய கடற்கரையின் நீளம் 6100 கி.மீ ஆகும். தீவுக்கூட்டங்களின் கடற்கரையும் சேர்த்து மொத்த நீளம் 7517 கி.மீ ஆகும்.

**இந்தியாவில் பிடிக்கப்படும் மீன் வகைகள்**

- கெளுத்தி, ஹெர்கிங்ஸ், கானாங்கெளுத்தி, பெர்சல், ஈல்மீன், முல்லட்டை மீன் போன்றவை.

**மீன்பிடி தொழிலில் முதல் 5 மாநிலங்கள்**

- ஆந்திரப்பிரதேசம், மேற்கு வங்கம், குஜராத், கேரளா, தமிழ்நாடு.

| கடல் மீன்பிடிப்பு | உள்நாட்டு (அல்லது) நன்னீர் மீன்பிடிப்பு |
|---|---|
| கடற்கரைப் பகுதி, கடற்கரையை ஒட்டிய பகுதி மற்றும் ஆழ்கடல் முக்கியமான பகுதிகளில் 200 மீட்டர் ஆழம் வரை உள்ள கண்டத்திட்டு பகுதிகளில் மீன்பிடித்தல் நடைபெறுகிறது. | நீர்த்தேக்கங்களான ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் மீன்பிடித்தல் நடைபெறுகிறது. |
| முதன்மை மாநிலம் கேரளா | முதன்மை மாநிலம் ஆந்திரப்பிரதேசம் |

## இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள்

- இந்தியாவில் 67 சதவீத நில உடைமையாளர்கள் (1 ஹெக்டேருக்கும் குறைவாக) குறு விவசாயிகளாக உள்ளனர்.
- அதிக விலையின் காரணமாக நல்ல தரமான விதைகளை சிறு மற்றும் குறு விவசாயிகளால் வாங்க முடிவதில்லை.
- இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாக வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால், அதன் வளம் குன்றி, உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.
- காற்று மற்றும் நீரின் மூலமாக ஏற்பட்ட மண் அரிப்பினால் பெரும் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது.
- தரமான உள்கட்டமைப்பு வசதியின்மையால், விவசாயிகள் விளைபொருள்களை உள்ளூர் வியாபாரிகளிடமும் தரகர்களிடமும் குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர்.
- கிராமப்புறங்களில் சேமிப்புக் கிடங்குகள் இல்லாததினால் விளைபொருள்களை உடனடியாக சந்தையில் விற்க வேண்டிய சூழ்நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகிறார்கள்.
- பெரும்பாலான கிராமங்களில் பிரதான இணைப்பு சாலைகள் கிடையாது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**1. அச்சு ஊடகங்கள்**

- இதில் செய்தித்தாள் சக்தி வாய்ந்த தகவல் தொடர்பு சாதனமாகும்.

**2. மின்னணு ஊடகங்கள்**

**வானொலி**

- 1923–ஆம் ஆண்டு இந்திய வானொலி ஒலிபரப்பு சேவை, மும்பை வானொலி சங்கம் மூலமாக தொடங்கப்பட்டது.
- 1936–இல் **'அகில இந்திய வானொலி'** என்றும் பின்னர் 1957–இல் **'ஆகாசவாணி'** என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**தொலைக்காட்சி**

- இச்சேவை தொலைதூர கிராமங்கள் வரை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் தொலைக்காட்சி வலையமைப்பு **'தூர்தர்ஷன்'** என அழைக்கப்படுகிறது.

**இணையம்**

- இது கணினி மூலம் இணைக்கப்பட்ட உலகளாவிய ஒரு தகவல் பரிமாற்ற வலையமைப்பு ஆகும்.
- இணைய பயன்பாட்டில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா 460 மில்லியன் இணைய பயன்பாட்டாளர்களைக் கொண்டு இரண்டாவது இடத்தில் உள்ளது.

## செயற்கைக்கோள் தகவல் தொடர்பு

- செயற்கைக்கோளானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தகவல் தொடர்பு சாதனமாகும். செயற்கைக்கோள் பதிமங்களைப் பயன்படுத்தி வானிலை ஆய்வு, வானிலை முன்னறிவிப்பு, இயற்கைப் பேரழிவு கண்காணிப்பு, எல்லைப்பகுதி கண்காணிப்பு போன்ற முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 1969–ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம்(ISRO) நிறுவப்பட்ட பின்பு, தொலைத்தொடர்பு பரிமாற்றத்தில் செயற்கைக்கோள்கள் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளன.
- செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பின் இரு பிரிவுகளாவன,
  1. இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு (INSAT)
  2. இந்திய தொலையுணர்வு செயற்கைக்கோள் அமைப்பு (IRS)
- இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு 1983–இல் நிறுவப்பட்டது.

**இன்சாட் வரிசை செயற்கைக்கோள்கள்**

- இவை கைப்பேசி, தொலைபேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு சமிக்ஞைகளை அனுப்ப பயன்படுகிறது.
- வானிலையைக் கண்டறியவும், ராணுவ பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**தகவல் தொடர்பிற்காக பயன்படுத்தப்படும் முக்கிய செயற்கைக்கோள்கள்**

- இன்சாட் வரிசை, ஜி – சாட் வரிசை, கல்பனா – 1, ஹேம் சாட், எஜுசாட் (Edusat)
- முதல் இன்சாட் வரிசை செயற்கைக்கோளான இன்சாட் 1B 1983–இல் ஏவப்பட்டது.
- சமீபத்தில் தகவல் தொடர்புக்காக டிசம்பர் 19, 2018–இல் ஜி–சாட் 7A செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

## வணிகம்

- வணிகம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் முக்கியக் காரணியாகும்.
- பொருள்கள் மற்றும் சேவைகளை வாங்குவதும் விற்பதும் வணிகம் எனப்படுகிறது.

**வணிகச் சமநிலை**

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கு இடையே உள்ள வேறுபாடு ஆகும்.

**சாதகமான வணிகச் சமநிலை**

- ஏற்றுமதியாகும் பொருள்களின் மதிப்பு இறக்குமதியாகும் பொருள்களின் மதிப்பை விட அதிகமாக இருப்பதாகும்.
  **ஏற்றுமதி மதிப்பு > இறக்குமதி மதிப்பு**

**பாதகமான வணிகச் சமநிலை**

- ஏற்றுமதியாகும் பொருள்களின் மதிப்பு இறக்குமதியாகும் பொருள்களின் மதிப்பை விட குறைவாக இருப்பதாகும்.
  **ஏற்றுமதி மதிப்பு < இறக்குமதி மதிப்பு**

### வணிக வகைகள்

| உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| இது, ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறுகிறது. | இது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறுகிறது. |
| நிலவழிப் போக்குவரத்து முக்கியப் பங்காற்றுகிறது. | நீர்வழி மற்றும் வான்வழிப் போக்குவரத்து முக்கியப் பங்காற்றுகிறது. |
| உள்நாட்டு நாணயம் பயன்படுத்தப்படுகிறது. | அந்நிய நாட்டு பணம் பயன்படுத்தப்படுகிறது. |

**பன்னாட்டு வணிகத்தில் வணிகம் இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெற்றால் அது 'இருதரப்பு வணிகம்' ஆகும். இரண்டிற்கும் மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெற்றால் அது 'பல்தரப்பு வணிகம்' எனப்படும்.**

### வேறுபாடுகள்

| பண்டமாற்ற முறை | அந்நியச் செலாவணி |
|---|---|
| 1. இரண்டு நபர்கள் அல்லது குழுக்களுக்கிடையே நேரடியாக பொருள்களைப் பரிமாறிக் கொள்வது. | 1. நாணயம், தங்கம் போன்றவை நேரடியாக பரிமாறிக் கொள்ளப்படுவதில்லை. |
| 2. இவ்வணிகத்தில் பணம் பங்கு பெறுவதில்லை. | 2. இரு நாடுகளுக்கு இடையேயான பணபரிவர்த்தனைகளில் அந்நாடுகளின் தேசிய மதிப்பு முறை கையாளப்படுகிறது. |

| கப்பல்துறை (Harbour) | துறைமுகம் (Port) |
|---|---|
| கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள விரிவான, ஆழமான நீர்பரப்பு ஆகும். இது கப்பல்கள் மற்றும் படகுகள் பாதுகாப்பாக நங்கூரமிடக் கூடிய ஓர் இடமாகும். | ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்காக சரக்குகளை ஏற்றவும், இறக்கவும், சேமித்து வைக்கவும் வசதி கொண்ட கப்பல்துறையின் விரிவாக்கப் பகுதியாகும். |

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. **மக்கள்தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு ................**
   **A)** ஒளிப்படவியல் **B)** மக்களியல்
   **C)** ஆடற்கலையியல் **D)** மக்களடர்த்தி

2. **2011–ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் ................**
   **A)** தமிழ்நாடு **B)** கர்நாடகம்
   **C)** கேரளா **D)** உத்திரப்பிரதேசம்



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



3. மனித வள மேம்பாடு ................ மூலம் கணக்கிடப்படுகிறது.
   A) மனித வளக்குறியீடு
   B) தனி நபர் குறியீடு
   C) மனித வள மேம்பாட்டு குறியீடு
   D) ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (UNDP)

4. ................ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.
   A) ரயில்வே B) சாலை
   C) வான்வழி D) நீர்வழி

5. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்
   A) 5846 கி.மீ. B) 5847 கி.மீ.
   C) 5849 கி.மீ. D) 5800 கி.மீ.

6. இந்திய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்தின் நீளமானது
   A) 17500 கி.மீ. B) 5000 கி.மீ.
   C) 14500 கி.மீ. D) 1000 கி.மீ.

7. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம்
   A) பெங்களூரு B) சென்னை
   C) புது டெல்லி D) ஹைதராபாத்

8. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து
   A) சாலைப்போக்குவரத்து
   B) இரயில் போக்குவரத்து
   C) வான்வழிப் போக்குவரத்து
   D) நீர்வழிப் போக்குவரத்து

9. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது
   A) ஏர் இந்தியா B) இந்தியன் ஏர்லைன்ஸ்
   C) வாயுதூத் D) பவன்–ஹான்ஸ்

10. இந்தியாவில் முக்கிய இறக்குமதி பொருள்
   A) சிமெண்ட் B) ஆபரணங்கள்
   C) தேயிலை D) பெட்ரோலியம்

11. இந்தியாவில் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு ................ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
   A) 1872 B) 1870
   C) 1874 D) 1871

12. இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ................இல் நிறுவப்பட்டது.
   A) 1993 B) 1994
   C) 1996 D) 1995

13. தங்க நாற்கரச் சாலைகள் திட்டம் ................இல் தொடங்கப்பட்டது.
   A) 1998 B) 1991
   C) 1997 D) 1999

14. கிழக்கு மேற்கு பகுதிகளை இணைக்கும் சாலைகள் அசாம் மாநிலத்தில் ................ குஜராத்தில் உள்ள ................ இணைக்கின்றது.
   A) கவுஹாத்தி, பரோடா B) சில்சர், போர்பந்தர்
   C) திஸ்பூர், அகமதாபாத் D) திக்பாய், சூரத்

15. ................ அதிவிரைவு வண்டி இந்தியாவின் மிக அதிகவேக இரயில்வண்டி ஆகும்.
   A) சதாப்தி B) ராஜ்தானி
   C) காத்திமண் D) சார்மினார்

16. கொங்கன் இரயில்வே ................ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
   A) 2008 B) 1998
   C) 1994 D) 1918

17. இந்தியாவில் ................ பெரு நகரங்களில் மெட்ரோ இரயில் சேவை வழங்கப்படுகிறது.
   A) 7 B) 6
   C) 9 D) 8

18. இந்திய இரயில்வே துறை ................ இரயில்வே மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
   A) 18 B) 14
   C) 12 D) 12

19. இந்தியாவின் முதல் அஞ்சல் வில்லை 1852–ஆம் ஆண்டு ................ல் வெளியிடப்பட்டது.
   A) அகமதாபாத் B) கராச்சி
   C) பூனே D) கொல்கத்தா

**Directions (20 – 22) : பொருத்துக.**

20.
| | | | |
|---|---|---|---|
| a) | எல்லைபுறச் சாலை | 1. | செயற்கைக்கோள் தகவல் தொடர்பு |
| b) | INSAT (இன்சாட்) | 2. | நகரமயமாக்கலின் தாக்கம் |
| c) | மேசகான் கப்பல்கட்டும் தளம் | 3. | 1998 |
| d) | புறநகரப் பரவல் | 4. | மும்பை |
| e) | கொங்கண் இரயில்வே | 5. | 1960 |

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 5 | 1 | 4 | 2 | 3 |
| B) | 4 | 5 | 1 | 2 | 3 |
| C) | 3 | 5 | 4 | 2 | 1 |
| D) | 5 | 4 | 1 | 2 | 3 |

21.
| | | | |
|---|---|---|---|
| a) | வடக்கு இரயில்வே | 1. | கொரக்பூர் |
| b) | வடகிழக்கு இரயில்வே | 2. | மும்பை |
| c) | வடமேற்கு இரயில்வே | 3. | புதுடெல்லி |
| d) | கிழக்கு இரயில்வே | 4. | ஜெய்ப்பூர் |
| e) | மத்திய இரயில்வே | 5. | கொல்கத்தா |

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 5 | 2 |
| B) | 5 | 4 | 1 | 2 | 3 |
| C) | 4 | 3 | 1 | 5 | 2 |
| D) | 5 | 3 | 1 | 2 | 4 |

22.
| | | | |
|---|---|---|---|
| a) | கொங்கன் இரயில்வே | 1. | முதல் இரயில் போக்குவரத்து |
| b) | தென்கிழக்கு இரயில்வே | 2. | சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச விமான நிலையம் |
| c) | மும்பை மற்றும் தானே | 3. | புதுதில்லி |
| d) | இந்தியன் இரயில்வே | 4. | கொல்கத்தா |
| e) | அகமதாபாத் | 5. | நவி மும்பை |

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 5 | 4 | 1 | 3 | 2 |
| B) | 4 | 5 | 2 | 3 | 1 |
| C) | 2 | 5 | 4 | 1 | 3 |
| D) | 3 | 4 | 5 | 1 | 2 |

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. (B) | 2. (C) | 3. (C) | 4. (B) | 5. (A) | 6. (C) |
| 7. (D) | 8. (C) | 9. (D) | 10. (D) | 11. (A) | 12. (D) |
| 13. (D) | 14. (B) | 15. (C) | 16. (B) | 17. (D) | 18. (A) |
| 19. (B) | 20. (A) | 21. (A) | 22. (A) | | |



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



## தமிழ்நாட்டில் மனிதனால் உருவாகும் பேரிடர்கள்

**மனிதனால் உருவாகும் பேரிடர்கள்**

- தொழிலகக் கசிவுகள், தீ, நிலத்தடி நீர் மாசுபடுதல், போக்குவரத்து விபத்துகள், கட்டமைப்புத் தோல்விகள், சுரங்க விபத்துகள், குண்டு வெடிப்புகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள்.

### தொழிலக விபத்திற்கான காரணங்கள்

- மின்கசிவு, அதிக வெப்பம், நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வரும் மின்சாதனப் பொருள்கள், தரம் குறைந்த மின்சார உபகரணங்கள்.

**விளைவுகள்**

- வெடித்தல், விஷவாயு கசிதல் மற்றும் விபத்துகளால் உயிரிழப்பு ஏற்படுகிறது.
- (எ.கா) இந்தியாவில் பட்டாசு உற்பத்தியின் தலைநகரான சிவகாசி மற்றும் விருதுநகர் பகுதிகளில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகள்.
- 2016–இல் கோயம்புத்தூர் டயர் உருக்கும் ஆலையில் ஏற்பட்ட விபத்து.

### கூட்டநெரிசல்

- முக்கிய விழாக்களின் போது ஏற்படும் கூட்டநெரிசலில் பலபேர் உயிரிழக்கின்றனர்.
- (எ.கா) தமிழ்நாட்டின் துறையூர் அருகே முத்தியம்பாளையம் கிராமத்தில் 2019–இல் நடைபெற்ற கருப்பசாமி கோயில் திருவிழாவில் ஏற்பட்ட உயிரிழப்புகள்.

### சாலை விபத்துகள்

- இந்திய அளவில் சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

> பேரிடர் அவசரகால தொலைபேசி எண் 1077.

### மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் இணைந்து செயல்படும் அமைப்புகள்

**மாநில / யூனியன் பிரதேச அமைப்புகள்**

1. மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (தலைவர் – முதலமைச்சர்)
2. நிவாரண / பேரிடர் மேலாண்மை துறை
3. காவல்துறை
4. வனத்துறை
5. தீ மற்றும் குடிமையியல் பாதுகாப்பு சேவைகள்
6. சுகாதார சேவைகள்
7. போக்குவரத்துத்துறை
8. பொதுப்பணித்துறை
9. கால்நடைத்துறை
10. உணவு மற்றும் வட்ட வழங்கல் துறை.

**மாவட்ட அமைப்புகள்**

1. மாவட்ட நீதிபதி (தலைவர்–மாவட்ட ஆட்சியர்)
2. வருவாய்த் துறை
3. குடிமைப்பணி நிர்வாகம்
4. உள்ளூர் காவல்துறை
5. குடிமைப் பாதுகாப்பு
6. தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள்
7. ஊர்க்காவல்படை (உள்ளூர், சமூகம், அரசு சாரா அமைப்புகள், தன்னார்வ நிறுவனங்கள்)

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

**1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ................**

A) காவிரி டெல்டா B) மகாநதி டெல்டா
C) கோதாவரி டெல்டா D) கிருஷ்ணா டெல்டா

**2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர்**

A) பருப்பு வகைகள் B) சிறுதானியங்கள்
C) எண்ணெய் வித்துக்கள் D) நெல்

**3. 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு சதவீதம் ................**

A) 80.32 B) 62.33
C) 73.45 D) 80.09

**4. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம்................**

A) மேட்டூர் B) பாபநாசம்
C) சாத்தனூர் D) துங்கபத்ரா

**5. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை ................**

A) 3 மற்றும் 15 B) 4 மற்றும் 16
C) 3 மற்றும் 16 D) 4 மற்றும் 15

**6. தமிழகத்தில் சுமார் ................ மில்லியன் ஹெக்டர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகிறது.**

A) 3 B) 4
C) 2 D) 5

**7. காப்பி உற்பத்தியில் ................ மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது.**

A) கேரளா B) கர்நாடகா
C) தெலுங்கானா D) ஆந்திரபிரதேசம்

**8. தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம் ................ கிலோ மீட்டர் ஆகும்.**

A) 1076 B) 1075
C) 1074 D) 1072

**9. ................ அணை நாட்டின் மண் – கல் கலவையில் கட்டப்பட்ட மிகப்பெரிய அணைகளுள் ஒன்றாகும்.**

A) மேட்டூர் B) சாத்தனூர்
C) பவானிசாகர் D) கிருஷ்ணகிரி

**10. ................ தமிழ்நாட்டின் நெசவுத்தலைநகர் என்றழைக்கப்படுகிறது.**

A) கரூர் B) கோயம்புத்தூர்
C) ஈரோடு D) சேலம்

**11. வைகை அணை ................ அடி உயரம் கொண்டது. இவ்வணையில் ................ அடி உயரம் மட்டுமே நீரை சேமிக்க முடியும்.**

A) 110 : 70 B) 109 : 70
C) 111 : 71 D) 108 : 70

**12. ................ மாவட்டத்திலுள்ள கஞ்சமலையில் இரும்புத் தாது படிவுகள் காணப்படுகின்றன.**

A) நாமக்கல் B) சேலம்
C) திண்டுக்கல் D) மதுரை

**13. நிலக்கரி உற்பத்தியில் ................% நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும்.**

A) 55.3 B) 56.3
C) 54.3 D) 54.2



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**14. ................ சில பகுதிகளில் செயற்கை பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.**

**A)** ஈரோடு **B)** காஞ்சிபுரம்
**C)** இராமநாதபுரம் **D)** மதுரை

**15. அதிக அளவில் கல்வியறிவு விகிதம் கொண்ட மாவட்டம்**

**A)** கன்னியாகுமரி **B)** மதுரை
**C)** கோயம்புத்தூர் **D)** சென்னை

**16. இந்தியாவின் மக்களடர்த்தியில் நமது மாநிலம் ................ இடத்தில் உள்ளது.**

**A)** 11–ஆவது **B)** 12–ஆவது
**C)** 13–ஆவது **D)** 14–ஆவது

**17. தமிழ்நாட்டின் மொத்த இருப்புப்பாதையின் நீளம் ................**

**A)** 6.693 கி.மீ. **B)** 6.694 கி.மீ.
**C)** 6.695 கி.மீ. **D)** 6.696 கி.மீ.

**18. நாட்டில் பதிவாகும் மொத்த விபத்துக்களில் ................ தமிழ்நாட்டில் நடப்பதாக அறிக்கையில் தெரிய வந்துள்ளது.**

**A)** 15 % **B)** 14 %
**C)** 13 % **D)** 12 %

**19. தகவல்தொடர்பு என்ற பொருள்தரும் 'கம்யூனிகேர்' என்ற சொல் .............. மொழியிலிருந்து பெறப்பட்டது.**

**A)** இலத்தீன் **B)** கிரேக்கம்
**C)** ஆங்கிலம் **D)** உருது

**20. தமிழ்நாட்டில் ...............% டைட்டானியம் உள்ளது.**

**A)** 20 % **B)** 30 %
**C)** 40 % **D)** 50 %

**21. தமிழ்நாட்டில் 75% ............... கிடைக்கிறது.**

**A)** நிலக்கரி **B)** மாலிப்டீனம்
**C)** டுனைட் **D)** வெர்மிகுலைட்

**22. தமிழ்நாட்டில் ............... முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.**

**A)** 6 **B)** 5
**C)** 4 **D)** 3

**23. இந்தியாவில் நெல் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு ..................**

**A)** 1980 **B)** 1991
**C)** 1985 **D)** 1990

**Directions (24 – 25) : கீழ்க்கண்ட கூற்றுகள் மற்றும் காரணங்களை ஆராய்ந்து விடையளிக்கவும்.**

**24. கூற்று** : கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.

**காரணம்** : இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியப் பங்களிப்பை அளிக்கிறது.

**சரியான விடையளி :**

**A)** கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
**B)** கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.
**C)** கூற்று சரி ஆனால் காரணம் தவறு
**D)** கூற்று தவறு ஆனால் காரணம் சரி

**25. கூற்று** : நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம்.

**காரணம்** : இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.

**சரியான விடையளி :**

**A)** கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
**B)** கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
**C)** கூற்று சரி ஆனால் காரணம் தவறு
**D)** கூற்று தவறு ஆனால் காரணம் சரி

**Directions (26 – 28) : பொருத்துக.**

**26. a)** பாக்சைட் **1.** சேலம்
**b)** ஜிப்சம் **2.** சேர்வராயன் மலை
**c)** இரும்பு **3.** கோயம்புத்தூர்
**d)** சுண்ணாம்புக்கல் **4.** திருச்சிராப்பள்ளி

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 2 | 4 | 1 | 3 |
| **B)** | 3 | 1 | 4 | 2 |
| **C)** | 2 | 1 | 4 | 3 |
| **D)** | 4 | 3 | 1 | 2 |

**27. a)** சிவகாசி **1.** சிறிய பிருந்தாவனம்
**b)** கோயம்புத்தூர் **2.** நெசவுத் தலைநகரம்
**c)** கரூர் **3.** தமிழ்நாட்டின் மான்செஸ்டர்
**d)** வைகை அணை **4.** ஆசியாவின் டெட்ராய்டு
**e)** சென்னை **5.** பட்டாசு தலைநகர்

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| **A)** | 5 | 3 | 2 | 1 | 4 |
| **B)** | 4 | 5 | 1 | 2 | 3 |
| **C)** | 3 | 5 | 4 | 1 | 2 |
| **D)** | 4 | 1 | 5 | 3 | 2 |

**28. a)** அட்சரேகை **1.** வானிலை கூறுகள் பற்றிய படிப்பு
**b)** தீர்க்கரேகை **2.** கிழக்கு மேற்காக வரையப்பட்ட கோடுகள்
**c)** வானிலையியல் **3.** வடக்கு தெற்காக வரையப்பட்ட கோடுகள்
**d)** பாங்கர் **4.** புது வண்டல் மண்
**e)** காதர் **5.** பழைய வண்டல் மண்

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| **A)** | 2 | 3 | 1 | 5 | 4 |
| **B)** | 4 | 5 | 1 | 2 | 3 |
| **C)** | 3 | 5 | 4 | 1 | 2 |
| **D)** | 4 | 3 | 5 | 2 | 1 |

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. (A) | 2. (B) | 3. (D) | 4. (A) | 5. (A) | 6. (A) |
| 7. (B) | 8. (A) | 9. (C) | 10. (A) | 11. (C) | 12. (B) |
| 13. (A) | 14. (C) | 15. (A) | 16. (B) | 17. (A) | 18. (A) |
| 19. (A) | 20. (B) | 21. (D) | 22. (C) | 23. (C) | 24. (A) |
| 25. (B) | 26. (A) | 27. (A) | 28. (A) | | |



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. **மாநில ஆளுநரை நியமிப்பவர்.**
   A) பிரதமர் B) முதலமைச்சர்
   C) குடியரசுத் தலைவர் D) தலைமை நீதிபதி

2. **மாநில சபாநாயகர் ஒரு ............**
   A) மாநிலத் தலைவர்
   B) அரசின் தலைவர்
   C) குடியரசுத் தலைவரின் முகவர்
   D) மேற்கண்ட எதுவுமில்லை

3. **கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல.**
   A) சட்டமன்றம் B) நிர்வாகம்
   C) நீதித்துறை D) தூதரகம்

4. **ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை முன்னர் சட்டமன்றத்திற்கு நியமித்தது யார் ?**
   A) குடியரசுத் தலைவர்
   B) ஆளுநர்
   C) முதலமைச்சர்
   D) சட்டமன்ற சபாநாயகர்

5. **ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை ?**
   A) முதலமைச்சர்
   B) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்
   C) மாநில தலைமை வழக்குரைஞர்
   D) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

6. **அமைச்சரவையின் தலைவர்**
   A) முதலமைச்சர் B) ஆளுநர்
   C) சபாநாயகர் D) பிரதம அமைச்சர்

7. **மேலவை உறுப்பினராவதற்கு குறைந்தபட்ச வயது**
   A) 25 வயது B) 21 வயது
   C) 30 வயது D) 35 வயது

8. **கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை ?**
   A) ஆந்திரப்பிரதேசம் B) தெலங்கானா
   C) தமிழ்நாடு D) உத்திரப்பிரதேசம்

9. **இந்தியாவில் முதன்முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்**
   A) கொல்கத்தா, மும்பை, சென்னை
   B) டெல்லி மற்றும் கொல்கத்தா
   C) டெல்லி, கொல்கத்தா, சென்னை
   D) கொல்கத்தா, சென்னை, டெல்லி

10. **கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன ?**
   A) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
   B) கேரளா மற்றும் தெலங்கானா
   C) பஞ்சாப் மற்றும் ஹரியானா
   D) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

11. **மாநில முதலமைச்சரை நியமிப்பவர்.**
   A) சட்டமன்றம் B) ஆளுநர்
   C) குடியரசுத் தலைவர் D) சட்டமன்ற சபாநாயகர்

12. **சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம்**
   A) 5 ஆண்டுகள் B) 6 ஆண்டுகள்
   C) 3 ஆண்டுகள் D) 4 ஆண்டுகள்

13. **மேலவை உறுப்பினர்கள்**
   A) சட்டமன்ற கீழவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   B) பொதுவாக நியமிக்கப்படுவார்கள்.
   C) உள்ளாட்சி அமைப்புகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிறரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   D) மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

14. **பொருத்துக.**

| | |
|---|---|
| a) ஆளுநர் | 1. மாநில அரசாங்கத்தின் தலைவர் |
| b) முதலமைச்சர் | 2. மாநில அரசின் தலைவர் |
| c) அமைச்சரவை | 3. தீர்ப்பாயங்கள் |
| d) மேலவை உறுப்பினர் | 4. சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள் |
| e) ஆயுதப் படையினர் | 5. மானியங்களுக்கு வாக்களிக்க முடியாது. |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 5 | 3 |
| B) | 3 | 1 | 4 | 5 | 2 |
| C) | 2 | 4 | 5 | 1 | 3 |
| D) | 3 | 5 | 4 | 1 | 2 |

15. **கீழ்க்கண்ட கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.**

**கூற்று** : மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு.

**காரணம்** : குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.

**சரியான விடையளி :**
   A) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
   B) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
   C) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   D) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

### விடைகள்

1. (C) 2. (D) 3. (D) 4. (B) 5. (D) 6. (A)
7. (C) 8. (C) 9. (A) 10. (C) 11. (B) 12. (B)
13. (C) 14. (A) 15. (B)



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com

# அலகு – 4 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களின் மூலம் தேசிய நலனை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இருதரப்பு மற்றும் பல தரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை 'வெளியுறவுக் கொள்கை' எனப்படுகிறது. ஒரு குறிக்கோள் மற்றும் இலக்கு சார்ந்த வெளியுறவுக் கொள்கையானது நாடுகளிடையே மேம்பட்ட உறவுகளை அடையும் திறனையும் விரைவான வளர்ச்சிக்கான பலத்தையும் கொண்டிருக்கும்.

உடன்படிக்கைகள், நிர்வாக ஒப்பந்தங்கள், தூதுவர்களை நியமித்தல், வெளிநாட்டு உதவி, சர்வதேச வணிகம் மற்றும் ஆயுதப்படைகள் ஆகியவை வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாகும்.

**வெளியுறவு அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் வெளியுறவுகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. 1986–ஆம் ஆண்டு புது டெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டுச் சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரிகளுக்கு (IFS) பயிற்சி அளிக்கிறது.**

## இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்

1. தேசியப் பாதுகாப்பு
2. தேசிய வளமை
3. நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
4. உலக அமைதி மற்றும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதிக் கொள்கையைப் பின்பற்றுதல்.
5. பொருளாதார வளர்ச்சி

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 (சட்டப்பிரிவு 51)**

**அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் அரசு முயற்சி செய்ய வேண்டியவைகள் :**

- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்
- நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல்
- சர்வதேசச் சட்டம் மற்றும் சர்வதேச அமைப்புகளை மதித்தல்
- சர்வதேசப் பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்

## பஞ்சசீலம்

பஞ்சசீலம் என்ற சொல் சமஸ்கிருதச் சொற்களான '**பாஞ்ச்**' மற்றும் '***சீலம்***' ஆகிய சொற்களிலிருந்து பெறப்பட்டது.

பாஞ்ச் – ஐந்து ; சீலம் – நற்பண்புகள் என்பது பொருளாகும்.

இந்திய பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு மற்றும் சீனப் பிரதமர் சூ–யென்–லாய் ஆகியோருக்கிடையே 1954 ஏப்ரல் 28–ஆம் நாள் 5 கொள்கைகள் கையெழுத்தானது.

**பஞ்சசீலம் கொள்கை**

- ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்
- பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
- பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
- பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்
- அமைதியாக சேர்ந்திருத்தல்

இந்தக் கொள்கைகள் இந்தோனேஷியாவில் 1955–ஆம் ஆண்டு நடைபெற்ற ஆப்பிரிக்க–ஆசிய மாநாட்டின் '**பாண்டுங் பிரகடனத்தில்**' இணைக்கப்பட்டுள்ளன.

## வெளியுறவுக் கொள்கையினை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள்

- நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு.
- நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையானவை.
- இயற்கை வளங்கள்.
- பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவம்.
- அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு.
- அமைதி, ஆயுதக் குறைப்பு, அணு ஆயுதங்களை அதிகரிப்பதற்கு தடை
- இராணுவ வலிமை
- சர்வதேச சூழ்நிலை

## 1950 மற்றும் 1960–ஆம் ஆண்டுகளில் வெளியுறவுக் கொள்கைகள்

1950 மற்றும் 1960–ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள், இந்தியப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்களின் வழிகாட்டுதலின்படி அமைந்திருந்தன.

நீண்டகாலமாக காலனியாதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் தங்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக சோவியத் சோஷலிச குடியரசுகள் ஒன்றியம் (USSR) அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருந்தது. USSR மற்றும் USA ஆகிய இரு வல்லரசுகளும் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் புதிதாக தோன்றிய நாடுகளின் மீது தங்கள் செல்வாக்கை பிரயோகிப்பதை ஜவஹர்லால் நேரு விரும்பவில்லை. எனவே மேற்கண்ட இரு வல்லரசுகளுடனும் சேராமல் மூன்றாவதாக **அணிசேரா இயக்கம்** என்ற அணியை ஏற்படுத்த முயற்சித்தார். இந்திய வெளியுறவுக் கொள்கையாக உலக அமைதி, காலனிய ஏகாதிபத்திய முடிவு, இனச் சமத்துவம் மற்றும் அணி சேராமை ஆகியவை இருந்தன.

## அணிசேரா இயக்கம் (The Non-Aligned Movement) 1961

1953–இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய **வி. கிருஷ்ணமேனன்** என்பவரால் '**அணிசேரா இயக்கம்**' என்ற சொல் உருவாக்கப்பட்டது. இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமான அணிசேராமையின் முக்கிய நோக்கம் இராணுவக் கூட்டணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும்.

அணிசேரா இயக்கத்தில் 120 உறுப்பு நாடுகள், பார்வையாளராக 17 நாடுகள், 10 சர்வதேச நிறுவனங்கள் உள்ளன.

**அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்**

| தலைவர் | நாடு |
|---|---|
| ஜவஹர்லால் நேரு | இந்தியா |
| டிட்டோ | யூகோஸ்லோவியா |
| நாசர் | எகிப்து |
| சுகர்னோ | இந்தோனேஷியா |
| குவாமே நிக்ரூமா | கானா |

## புதிய சவால்கள் மற்றும் கொள்கை மாற்றங்கள்

அணிசேரா இயக்கத்தில் இருந்தபோதும் சோவியத் யூனியனுடன் 1971–இல் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்திய–சோவியத் ஒப்பந்தமானது 20 ஆண்டுகால ஒப்பந்தமாகும். இதன் நோக்கம் அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு ஆகும்.

1964–இல் **லாப் நார்** (LOP NOR) எனுமிடத்தில் சீனா மேற்கொண்ட அணு சோதனைக்குப் பதிலடியாக இந்தியா 1974–இல் **நிலத்தடி அணு வெடிப்புத் திட்டத்தை** நடத்தியது. அழிவை ஏற்படுத்திய இந்திய–சீனப் போர் கூட்டுச் சேராமையை நடைமுறைப்படுத்தாமல் இராணுவக் கூட்டமைப்பின் பற்றாக்குறையை வெளிப்படுத்தியது.

**இந்திய வெளியுறவுக் கொள்கையின் நிலைப்பாடுகள்**

- காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட ஆதரவளித்தல்.
- தென்னாப்பிரிக்காவில் நிலவிய இனவெறியைக் கடுமையாக எதிர்த்தல்.
- பாதுகாப்பு, ஆயத்த நிலைமையின் முக்கியத்துவத்தை எதிர்கொள்ளுதல்.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



**8. WTO–வில் தற்போதுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை**

A) 159　　B) 164
C) 148　　D) 128

**9. வர்த்தக நோக்கத்திற்காக முதலில் இந்தியாவுக்கு வந்தவர்கள்**

A) ரோமானிய பேரரசு　　B) போர்ச்சுகீசியர்
C) டச்சு　　D) டேனிஷ்

**10. போர்ச்சுகீசியர்கள் இந்தியாவில் எப்போது குடியேறினார்கள் ?**

A) 1600　　B) 1602
C) 1498　　D) 1616

**11. கீழ்க்கண்ட கூற்றினை ஆராய்க.**

I. கிழக்கிந்திய கம்பெனி, குறிப்பாக கிழக்கு இந்திய நறுமணப் பொருட்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டு, பின்னர் பருத்தி, பட்டு, இண்டிகோவையும் வர்த்தகத்தில் இணைத்துக் கொண்டது.

II. டச்சு கிழக்கு இந்திய நிறுவன வணிகர்கள் தங்கள் நிறுவனத்தை முதன்முதலில் கள்ளிக்கோட்டையில் நிறுவனார்கள்.

III. தொகராஸ், கோவாரஸ் போன்ற குழுக்கள் ஆலயங்களில் மட்டுமே சந்தித்து வர்த்தகத்தை மேற்கொண்டனர்.

**சரியான விடையளி :**

A) I சரியானவை
B) II மற்றும் III சரியானவை
C) I மற்றும் III சரியானவை
D) I, II மற்றும் III சரியானவை

**12. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் | 1. | 1947 |
| b) | பன்னாட்டு நிறுவனம் (MNC) | 2. | அயல்நாட்டு வாணிபத்தை செயல்படுத்துதல் |
| c) | சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) | 3. | உற்பத்தி செலவு குறைத்தல் |
| d) | 8-ஆவது உருகுவே சுற்று | 4. | இன்ஃபோசிஸ் |
| e) | உலக வர்த்தக அமைப்பு (WTO) | 5. | 1986 |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 5 | 2 |
| B) | 5 | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 4 | 5 | 2 | 1 |
| D) | 4 | 5 | 1 | 2 | 3 |

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. (B) | 2. (A) | 3. (D) | 4. (D) | 5. (B) | 6. (C) |
| 7. (C) | 8. (B) | 9. (B) | 10. (C) | 11. (C) | 12. (A) |

# அலகு – 3 உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

## உணவுப் பாதுகாப்பு – வரையறைகள்

### ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் வரையறை

"எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையைக் கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவுப் பாதுகாப்பு இருக்கிறது"(FAO, 2009).

### எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் வரையறை

"சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச்சூழல் சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகியவற்றிற்கான உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல் உணவுப் பாதுகாப்பு ஆகும்".

## உணவின் அடிப்படைக்கூறுகள்

### உணவு கிடைத்தல்

✣ இது, விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும்.

### உணவுக்கான அணுகல்

✣ இது, முதன்மையாக வாங்கும் திறன் பற்றி குறிப்பிடுகிறது.

### உணவினை உறிஞ்சுதல்

✣ இது, உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும்.

## உணவு தானியங்களின் கிடைத்தல் மற்றும் அணுகல்

◆ மக்களின் உணவுப் பாதுகாப்பு ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது செயல்முறையுடன் தொடர்புடையது. சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியா ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான மாதிரியைத் தேர்வு செய்தது. ஆரம்பத்தில் விவசாயத்திற்கும் பின்னர் தொழில்மயமாக்கலுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது. 1960–களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொதுச்சட்டம் 480 (Public Law 480) (பி.எல் 480) திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது. இது **'கப்பலுக்கு வாயில்'** (Ship to Mouth) என்று அழைக்கப்பட்டது.

◆ அமெரிக்க நிர்வாகம் ஃபோர்டு அறக்கட்டளை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர்ரக விளைச்சல் வகைகளுக்கான (High yielding Varieties) திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது.

### இந்தியாவில் பசுமைப்புரட்சி

✣ 1950–களின் முற்பகுதியில் உணவு தானியங்களின் உற்பத்தி பரப்பளவு 98 மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமாக இருந்தது. நாடு 54 மில்லியன் டன் உணவு தானியங்களை மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருந்தது. அப்போது சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 547 கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. பசுமைப்புரட்சிக்குப் பின்னர் உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122 மில்லியன் ஹெக்டேராக உயர்ந்தது. உணவு உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது.

✣ பால், கோழி மற்றும் மீன்வளத்துறை உற்பத்தியில் பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியதால் 1947 மற்றும் 2000 ஆண்டுகளின் நடுப்பகுதியில் பால் உற்பத்தி 8 மடங்கு, முட்டை உற்பத்தி 40 மடங்கு மற்றும் மீன் உற்பத்தி 13 மடங்கு வரையில் அதிகரித்துள்ளன. இருப்பினும், இந்தியா பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதில் வெற்றி பெறவில்லை.



suracollege@gmail.com　　https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com



### குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price)

- குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது ஒரு குறிப்பிட்ட பயிரின் சாகுபடியில் பல்வேறு செலவுகளைக் கருத்தில் கொண்டு, அந்தப் பயிருக்கு, நிபுணர் குழுவால் நிர்ணயிக்கப்படும் விலை ஆகும்.
- இது பருவகாலத்தின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட தானியங்களை இந்திய உணவுக் கழகம் (FCI - Food Corporation of India) மூலம் அரசு கொள்முதல் செய்து, மிகப்பெரிய சேமிப்புக்கிடங்கில் இருப்பில் வைத்து அதனை ஆண்டு முழுவதும் வழங்குகிறது.

### பொது வழங்கல் முறை (Public Distribution System)

- வருமானத்தின் சமமற்ற வழங்கல் மற்றும் இந்தியப் பொருளாதாரத்தில் நீடிக்கும் வறுமையினைக் கருத்தில் கொண்டு பொது வழங்கல் முறை மூலம் உணவு தானியங்களை மானிய விலையில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. பொது வழங்கல் முறை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்.
- தமிழ்நாடு **"உலகளாவிய பொது வழங்கல் முறை"யை** (Universal PDS) ஏற்றுக்கொண்டது. இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் **"இலக்கு பொது வழங்கல் முறை"** (Targeted PDS) நடைமுறையில் உள்ளது.
- உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் உணவு தானியங்கள் வழங்கப்படுகிறது.
- இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது. ஏனையோருக்கு வழங்கப்படுவதில்லை.
- மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் பொருள்களுக்கு மானியம் வழங்குகின்றன. மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கிடையே வேறுபடுகிறது.
- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (National Food Security Act) இந்திய நாடாளுமன்றத்தால் 2013–இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 50% நகர்ப்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும். இந்தக் குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு **முன்னுரிமைக் குடும்பங்கள்** (Priority Households) என அழைக்கப்படுகின்றன.
- மத்திய அரசினால் 1 கிலோ அரிசி ₹ 3, 1 கிலோ கோதுமை ₹ 2, 1 கிலோ தினை ₹ 1, என்ற விகிதத்திலும் NFSA–யின் கீழ் வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

### ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை திட்டம்

நாடு முழுவதும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், ரேஷன் பொருட்களை மத்திய அரசு வழங்கி வருகிறது. அந்த வகையில், ஒரு கிலோ கோதுமை ₹ 2–க்கும், ஒரு கிலோ அரிசி ₹ 3–க்கும் விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு, மிகக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதால் இத்திட்டத்துக்கான செலவு ஆண்டுக்கு ₹ 1.45 லட்சம் கோடியை எட்டியுள்ளது. ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, எந்தவித மாற்றமும் இல்லாமல் இந்தப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நாட்டில் உள்ள ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, 'ஒரே நாடு ; ஒரே ரேஷன் அட்டை' திட்டத்தை அறிமுகப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்படி, ஏழை மக்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ரேஷன் அட்டையை கொண்டு, நாட்டில் எங்கு வேண்டுமானாலும் ரேஷன் கடைகளில் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும்.

### தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்

- இந்தியாவில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் துவங்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, நவம்பர் 1, 2016 அன்று இச்சட்டம், இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ்நாட்டில் துவங்கப்பட்டது. அக்டோபர் 27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவில் இச்சட்டத்தை அமல்படுத்தும்போது, அதன் விதிகளை அரசு மாற்றியமைக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### பயோ மெட்ரிக் குடும்ப அட்டை (Bio Metric Smart Family Card)

- குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.
- தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் தனித்துவமான அடையாள எண் (UIN) பதிவேட்டில் பதியப்பட்ட பின்பு அதனுடைய தரவுகள் அடங்கிய பயோ மெட்ரிக் ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் வழங்க முன்மொழியப்பட்டது. இது தனிப்பட்ட அடையாளத்தைக் கொண்டிருப்பதால், உறுப்பினர்களின் தரவு நகல் மற்றும் போலி அட்டைகளை அகற்றலாம்.

### உணவுப் பாதுகாப்பில் நுகர்வோர் கூட்டுறவின் பங்கு

- சலுகை விலையில் தரமான பொருள்களை வழங்குவதில் நுகர்வோர் கூட்டுறவு முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தியாவில் மூன்றடுக்கு முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை,
  1. முதன்மை நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்
  2. மத்திய நுகர்வோர் கூட்டுறவு கடைகள்
  3. மாநில அளவிலான நுகர்வோர் கூட்டமைப்புகள்.
- கிராமப்புறங்களில் நுகர்வோர் பொருள்களை வழங்குவதில் 50,000–ற்கும் அதிகமான கிராம அளவிலான சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக்கடைகளில், சுமார் 94% கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

### தாங்கியிருப்பு (Buffer Stock)

- உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து அரிசி மற்றும் கோதுமையை இந்திய உணவுக் கழகத்தின் (FCI) மூலம் அரசாங்கம் வாங்கி சேமித்து வைக்கிறது. இம்முறை தாங்கியிருப்பு எனப்படுகிறது.
- தாங்கியிருப்பின் மூலமாக உணவு தானியங்கள் சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கு சந்தை விலையை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்விலையானது **'வெளியீட்டு விலை'** எனப்படுகிறது.
- பாதகமான வானிலை அல்லது பேரழிவுக் காலங்களில் உணவுப் பற்றாக்குறைப் பிரச்சனையைத் தீர்க்க தாங்கியிருப்பு முறை உதவுகிறது.

### நியாய விலைக் கடைகள் [2019–ஆம் ஆண்டு நிலவரப்படி] (Fair Price Shops)

- தமிழ்நாட்டில் 33,222 நியாய விலைக் கடைகள் 1.98 கோடி குடும்பங்களுக்கு சேவை புரிகின்றன.

| | |
|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுபவை | 31,232 |
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படுபவை | 1,394 |
| பெண்கள் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படுபவை | 596 |
| **மொத்த நியாய விலைக்கடைகளின் எண்ணிக்கை** | **33,222** |

- எந்தவொரு அட்டைதாரரும் 1.5 கி.மீட்டருக்கு மேல் நடந்து செல்லாத வகையில் புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.



suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com








suracollege@gmail.com https://t.me/suraguides

This is Sample Study Materials - Click Here to more Details : www.surabooks.com








suracollege@gmail.com https://t.me/suraguides